21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. # 206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 21 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2011

# ஒன்ராறியோ மாகாண வரவுசெலவுத்திட்டம்

ஒன்ராறியோ மாகாண நிதி அமைச்சர் Dwight Duncan தனது 2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை கடந்த 2011 மார்ச் 29ஆம் திகதி வெளியிட்டார். இந்த வரவு செலவுத்திட்டத்தில் $16.3 பில்லியன் டொலர் துண்டு விழும் தொகையாக உள்ளது. இதன்படி 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரை ஒன்ராறியோ மாகாண அரசின் வரவுசெலவுத்திட்டம் சமநிலைப்படுத்தப்பட முடியாமலிருக்கும். இவ்வருட செலவினங்கள் $124.1 பில்லியன் டொல-ராக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் ஒன்ராறியோ மாகாண அரசு செலவழித்த தொகையைவிட $1.2 பில்லியன் டொலர் அதிகமாகும்.



இந்த வரவு செலவுத்திட்டத்தில் அரசின் செலவீனங்கள் எதுவும் நிறுத்தப்படவும் இல்லை, அதேபோல புதிய வரிகள் எதுவும் இடப்படவுமில்லை. இதனால் இந்த வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காக அரசால் சமர்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் என விமர்சித்துள்ளன. இவ்வரவு செலவுத்திட்டத்தின் சில முக்கிய விடயங்கள்.

(1) மாணவர்களுக்கு கோடைகால வேலை வசதி செய்து கொடுக்க $22.5 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) அடிப்படை தொழிற்கல்வறிவு (Basie Skill Programs) கொடுக்க கூடிய செய்முறைகளுக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு $44 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) மனநல ஆலோசனைகளுக்கும் மற்றும் போதைவஸ்து பழக்கங்களிலிருந்து விடுவிக்க உதவும் மருத்துவ வசதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(4) பெண்களுக்கான மார்பக புற்றுநோய் பரிசோதனை செய்யும் வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இதற்காக மேலதிகமாக $15 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) அத்திய அவசியமற்ற மருத்துவ பரிசோதனைக்கான செலவுகளை குறைப்பதன் மூலம் $120 மில்லியன் டொலர் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

(6) ஒன்ராறியோ அரச சேவை ஊழியர்களின் தொகை 1500 ஆல் குறைக்கப்படவுள்ளது.

(7) ரொறொன்ரோ மேற்கில் கட்டப்பட இருந்த நீதிமன்றம் இரத்துச் செய்யப்பட்டதால் $181 மில்லியன் டொலர் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

## கனடாவில் மே 02 இல் பொதுத்தேர்தல்

பழமைவாத சிறுபான்மை அரசு 2011 மார்ச் 25 இல் நம்பிக்கை இல்லா பிரேரணை மூலம் தோற்கடிக்கப்பட்டது. ஸ்ரீபன் காப்பர் தலைமையில் 2006 இல் அமைக்கப்பட்ட பழமைவாத கட்சியின் சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்திற்கு தவறான தகவல்களை வழங்கியது என்று அவ் அரசின் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை லிபரல் கட்சி மார்ச் 25 இல்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# கனேடியத் தேர்தல் 2011

பல எதிர்பார்ப்புக்களின் (Speculation) பின் May 02, 2011 கனேடியத்தேர்தல் திகதி நிச்சயிக்கப்பட்டுள்ளது. 2008 இல் Conservative கட்சியினர் சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்து பதவிக்கு வந்தனர். 143 ஆசனங்களை மட்டும்



எடுத்ததின் அடிப்படையில் அவர்களால் பெரும்பான்மை அரசை அமைக்க முடியவில்லை. Libral, NDP, Bloc Quebecois கட்சிகள் கூட்டாக 163 இருக்கைகளை பெற்றனர். இதுதான் இந்த மூன்று கட்சிகளுக்கு மீண்டும் ஒரு தேர்தலை ஏற்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. மார்ச் 25, 2011 ஆம் திகதியன்று conservative கட்சியின் பேரில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஏனைய கட்சிகளால் கொண்டுவரப்பட்டு, நாடாளுமன்றத்தை கலைக்கச் செய்தார்கள். Conservative கட்சியின் மீது மற்றைய கட்சிகள் கொண்டுவந்த முறைப்பாடுகளாக: சிறை செலவீனங்கள், போர் விமானக்கொள்வனவு, மற்றும் Afghan தடுப்பு முகாம் துஷ்பிரயோகங்களை மறைத்ததுமாகும்.

இன்னும் ஒருமாத காலமே தேர்தலுக்கு உள்ள நிலையில் சில முக்கியமான விடயங்கள் தர்க்கத்துக்கு உரியவையாக உள்ளன. இதில் முக்கியமானது கனேடிய எல்லை (Border) பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. Conservative கட்சி அண்மையில் வெளிநாட்டில் இருந்த வந்த MV sun sea கப்பலின் விவகாரத்தில் சட்டத்துக்கு எதிரான குடிவரவு மற்றும் ஆள்கடத்தலை மையப்படுத்தி தொலைக் காட்சியில் விளம்பரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் மற்றக் கட்சிகள் இந்த விடயத்தில் மென் போக்கை கடைப்பிடித்தாக கொன்சவேற்றிவ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இன்னொரு தர்க்கத்துக்குரிய விடயம், 'Level of Corporate taxes' கொன்சவேற்றிவ் கட்சி இந்தக் கூட்டுத்தாபன வரியை (corporate taxes) குறைப்பதிலும் லிபரல் கட்சி இந்த வரியை ஒரே நிலையில் வைத்திருப்பதிலும் NDP கட்சி இந்த வரியை உயர்த்துவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றன என்றும் கூறியுள்ளது.

மூன்றாவது சர்ச்சைக்குரிய விடயம் கூட்டணி ஆட்சி அமைக்க இருப்பதாக கொன்சவேற்றிவ் கட்சி குற்றம் கூறுகிறது. கூட்டணி ஆட்சி என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்சியினர் சேர்ந்து பெரும்பான்மை அரசாங்கத்தை அமைப்பது. அத்துடன் Michael Ignatieff இன் 30 வருட காலம் கனடாவில் அவர் வசிக்காததும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.


இந்த தேர்தலின் முக்கிய தீர்மானிக்கும் செயலாக இருக்கக்கூடியது கனேடிய மக்களுடன் மைக்கல் இக்னாற்றிவ் எவ்வாறு தொடர்புபட்டுள்ளார் என்பதிலேயே தங்கியுள்ளது. இதை கனேடிய தேர்தலில் போட்டியிடுபவர்களில் லிபரல் தலைவரைத்தவிர மற்றைய தலைவர்கள் ஏற்கெனவே கனேடிய தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கனடாவிற்கு தன்னால் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும், மற்றும் தான் ஒரு நம்பிக்கையான தலைவர் என்பதனையும் கனேடிய



மக்களை நம்பக் கூடியதாக (convince) தமது பரப்புரைய செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

கனேடிய மக்களின் முக்கிய நிலைப்பாடு கனேடிய பொருளாதாரம் பற்றியது. பொருளாதார இறுக்கத்திலிருந்து (Recession) வெளியே வந்திருக்கும் கனேடிய பொருளாதாரத்தை எவ்வாறு சிறந்த தனது தலைமையினால் மேம்படச்செய்யலாம் என்பதில் கனேடிய வாக்காளர்களை நம்பிக்கை அடையச் செய்ய வேண்டியதில் லிபரலின் கட்சியின் வெற்றிவாகை தங்கியுள்ளது.

நமது சமுதாயம் இன்றைய காலட்டத்தில் சிறந்த ஒரு நிலைப்பாட்டில் உள்ளது. அதாவது சகல கட்சிகளிலும் எமது செயற்பாடும், தொழிற்பாடும், அங்கத்துவமும் உள்ளன. இது எமது மக்களின் தனியாகவும், வித்தியாசமாகவும்



சிந்திப்பதனை காட்டுகின்றது.

எனவே இந்த மாதத்தில் மிகவும் சாதுரியமாக சிந்தித்து நடைபெறும் நிகழ்வுகளை ஆராய்ந்து எமது சிறந்த பிரதிநிதி யார் என்பதனை முடிவு எடுக்க வேண்டி உள்ளது.



- பார்த்தி கந்தவேள் -

# ஒன்ராறியோ மாகாண...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. இப்பிரேரணைக்கு ஆதரவாக லிபரல் கட்சி, புதிய ஜனநாயக கட்சி மற்றும் புளக் குவிபெக்குவா கட்சிகள் வாக்களித்தால் 156 இற்கு 145 என்ற வாக்கு வித்தியாசத்தால் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதைத்தொடர்ந்து பிரதமர் ஸ்ரீபன் காப்பர் 2011 மார்ச் 26 ஆம் திகதி கனடாவின் ஆளுனர் David Johnston இடம் நாடாளுமன்றத்தை கலைத்துவிடுமாறு சிபார்சு செய்தார். அவர் பிரதமரின் அறிவுறுத்தலை ஏற்று நாடாளுமன்றத்தை கலைத்தார். அதன் பின்னர் தேர்தல் மே மாதம் 2ஆம் திகதி நடத்த முடிவெடுக்கப்பட்டது. இதன் மூலம் கனடாவில் கடந்த 7 வருடங்களில் 4ஆவது தேர்தல் நடைபெறவுள்ளது. கலைக்கப்பட்ட கனடாவின் 40 ஆவது நாடாளுமன்றத்தில் கட்சி ஆசனங்களின் நிலை.

(1) பழமைவாதக்கட்சி 143
(2) லிபரல் கட்சி 77
(3) புளக் குவிபெக்குவா 47
(4) புதிய ஜனநாயகக் கட்சி 36
(5) சுயேட்சை 2
(6) வெறுமையான ஆசனங்கள் 3

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணம்

அகணியின் நினைவாற்றல் என்ற தொடர் கட்டுரை மிக நற்பலனை வாசகர்களுக்கு அளித்துக்கொண்டு வருகின்றது. நன்றி. நினைவாற்றல் ஆறாம் தொடரில் நினைவாற்றலைப் பெருக்குவதற்கு குறிப்பாக, இரு முறைகளைக் குறிப்பிட்டு இருந்தார். ஒன்று, இரண்டு நிமிடத்தில் எண்ணுவதற்கு எடுக்கும் நேரத்தைக் கணக்கிடுவதும், மற்றது இரண்டு நிமிடத்தில் தனது மனதில் படும் சொற்களை எழுதி எடுப்பதும் ஆரம்ப பயிற்சி எடுப்பவர்களுக்கு மிகச் சுலபமாக அமைந்துள்ளது. என் நன்றி கலந்த பாராட்டுகள்.

பத்மநாதன் தம்பையா.
18.03.2011.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# ஒத்துப்போ அல்லது ஒதுங்கிப்போ

ஒரு சில நாட்களுக்கு முன் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பேச்சு மேற் கூறியதைத் தான் சுட்டிக்காட்டியது. மேற்கத்திய நாடுகள் அனைத்தும் மத்திய கிழக்கில் தமது கவனத்தை திருப்பியுள்ளன. லிபியாவில் நேட்டோவின் நடவடிக்கைக்கு சில ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால் இவர்களுக்கும் அரேபிய எண்ணெய் மீதான கவனம் உள்ளது. தங்களுக்குள் உள்ள போட்டியும், ஐரோப்பிய ஒன்றியத்தில் யார் பலம் அதிகம், ஆதிக்கம் அதிகம் என்பதிலேயே இந்த எதிர்ப்பின் தன்மை அடங்கியுள்ளது. வட அமெரிக்காவில் இந்த நிலைமை வேறுபட்டுள்ளது. தலையாட்டிப் பொம்மை போல் கனடாவுள்ளது. எதற்கும் தலையாட்டும் கனடா இம்முறையும் லிபியா விற்கு தலையாட்டியுள்ளது. யப்பானில் சுனாமியின் விளைவால் ஏற்பட்ட அணு விபத்து பாதிப்பு பற்றி உலகம் பதறுகின்றது. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த போது ஆம் முடிவு நிலையில் யப்பான் மீது அணு குண்டை அமெரிக்கா வீசிய போது அணு குண்டு குழுவில் இருந்த மூன்று நாடுகளுள் கனடாவும் ஒன்று மற்றைய இரு நாடுகள் இங்கிலாந்து, அமெரிக்கா. கனடாவும், இங்கிலாந்தும் தலையாட்டிய பின்னரே குண்டு வீசப்பட்டது. இன்றும் கனடா வின் மூன்று பிரதான கட்சிகளும் லிபியா போரை ஆதரித்துள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்த போது முன்னாள் கனேடிய பிரதமர் கிறிச்சியன் அமெரிக்காவுடன் இணைந்து கொள்ள மறுத்து விட்டார். ஈராக்கில் அணு ஆயுத தயாரிப்பு இருப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்பதே அவர் கூற்று. இன்று வரையும் அங்கு அணு ஆயுத தயாரிப்பு இருப்பது நிரூபிக்கப்படவில்லை. அவ்வப்போது விதிவிலக்கான கனேடிய பிரதமர்கள் ஆட்சியிலிருப்பதுண்டு.

**- ரதன் -**

லிபியப் போர், ஒரு புறம் எணணெய்க்கான போட்டி. மறுபுறம் தங்கள் சொல்லைக் கேட்க மறுக்கும் கடாபியை கீழ் இறக்கும் செயல். கடாபிக்கு எதிராக போராடும் அமைப்பில் உள்ள Libyan Islamic Fighting Group கிளர்ச்சியாளர்கள் யார்? என்ற கேள்வி எழுகின்றது. 2007 வைகாசி மாதம் லிபிய அரசாங்கம் பல போராளிகளை கைது செய்துள்ளது. இவர்கள் அனைவரும் அல்கைடாவுடன் தொடர்பானவர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது. முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்களில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் சவூதி அரேபியா, லிபியா, மொரொக்கோ, சிரியா, அல்ஜீரியா, ரியுனிசியா, யேமன் போன்ற நாடுகளில் இருந்தே சென்றுள்ளனர். இவர்கள் ஈராக் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளில் தமது தாக்குதல்களை நடத்துகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கல்லூரி மாணவர்கள். சுமார் 75 வீதமானோர் மாணவர்கள். சுமார் 56 வீதமானோர் தற்கொலை போராளிகளாக பயிற்சி எடுத்துள்ளனர். இந்த 56 வீதத்தில் 85 வீதமானோர் லிபியர். இன்று கடாபிக்கு எதிராக போராடும் லிபியர்கள் அமெரிக்க பயங்கரவாதிகள் என குறிப்பிடும் அல் கைடா மற்றும் முஸ்லீம் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள். ரியுனிசியா தொடங்கி லிபியா வரை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் வீதிக்கு வந்து போராடுகின்றார்கள். இவர்களை வழிநடத்துபவர்கள் முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புடையவர்கள். ஆனால் மேற்கத்திய பத்திரிகைகள் இதனை மறுத்து முஸ்லீம் தீவிரவாதத்துக்கும், இப் போராட்டங்களுக்கும் தொடர்பில்லை எனக் கூறிவருகின்றன. ஏன் இந்த ஓர வஞ்சனை. அல்லது இதுவும் ஒரு சூழ்ச்சியின் வெளிப்பாடா?



லிபியா கிளர்ச்சியாளர்களின் பின்னணியை சுருக்கமாகப் பார்ப்பது நல்லது. 1989 களில் கடாபிக்கு எதிராக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இணைந்து சுமார் 2000 லிபியருக்கு பயிற்சி அளித்தனர். இதற்கு இஸ்ரேல், சவூதி போன்ற நாடுகளும் நிதி உதவி செய்தன. பிரென்ச் அமெரிக்க உளவுப் படைகளும் இப்பயிற்சியை மேற்பார்வை செய்தன. 1985ல் கடாபியை வெளியேற்ற ஏற்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. National Front for the Salvation of Libya என இது அழைக்கப்பட்டது Al-Jama'a al-Islamiyyah al-Muqatilah bi-Libya (Libyan Islamic Fighting Group, LIFG) என்ற மற்றொரு அமைப்பு 1985ல் தோன்றியது. அப்கானில் ருசியா கால் பதித்த போது முகாஜின்களே இந்த அமைப்பினை தோற்றுவித்தவர்கள். 2004 மாசி மாதம் அமெரிக்க செனட் விசாரணைக் குழுவில் சாட்சியமளித்த Director of Central Intelligence George Tenet பின்வருமாறு தெரிவித்தார் "one of the most immediate threats [to U.S. security] is from smaller international Sunni extremist groups that have benefited from al-Qaida links. They include ... the Libyan Islamic Fighting Group." இவர்கள் பின்னர் இங்கிலாந்திலும் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். அல் கைடாவுடன் நேரடித் தொடர்பு கொண்ட இவர்களில் பெரும்பாலானோர் ஈராக்கில் தற்கொலைப் போராளிகளாகவும் மரணம் அடைந்துள்ளார்கள். தற்பொழுதும் இந்த தொடர்பு நீடிக்கின்றது.

சவூதி தனது நாட்டில் கிளர்ச்சி தோன்றாமல் இருக்கு 47.6 பில்லியனை டொலர்களை வேலையற்றோருக்கும், சிறு வியாபாரி களுக்கும், சுய தொழில் புரிவோருக்கும் வழங்கியுள்ளது. இராஜா அப்துல்லா தனது மூன்று மாத மருத்துவ விடுப்பை முடித்துக் கொண்டு சவூதி திரும்பும் பொழுது விமானம் தரையை தொட முன்னரே இந்தக் கொடுப்பனவு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. சவூதியில் புதிதாக தொடங்கியுள்ள முகப்புத்தக (Facebook) பிரச்சாரமே காரணம். March 11 revolution of longing என்ற பெயரில் தொடங்கப்பட்ட பிரச்சாரத்தின் மீதான அச்சமே அரசரின் மாற்றத்துக்கு காரணம். (http://www.allfacebook.com/can-saudi-activists-pull-off-facebook-led-revolution-2011-02) போராளிகள் போராட்டத்துக்காக கூறும் காரணங்கள் முக்கியமானவை. அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்படவேண்டும். சுதந்திரமான நீதித்துறை வேண்டும், பேச்சுச் சுதந்திரம் வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், வரி முறைகள் மீள அமைக்கப்படவேண்டும், பெண்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும், ஊழல் ஒழிக்கப்படவேண்டும், வேதன மீளமைப்பு செய்யப்படவேண்டும். சவூதியில் கிளர்ச்சியாளர்கள் முன்வைக்கும் காரணங்கள் அனைத்தும் ஜனநாயக அமைப்பின் முதுகெலும்பு. இவற்றைப் பற்றி மேற்கு நாடுகள் கவலை கொள்ளவில்லை.


பாரெயின் இராஜா ஹமாட் பின் இசா அலி காபியா (Hamad bin Isa Al Khalifa), யேமன் அதிபர் அலி அப்துல்லா சலி (Ali Abdullah Saleh) ம் கடாபிக்கு சளைத்தவர்கள் அல்ல. சவூதி அரசர் இராஜா அப்துல்லா பாரெயினுக்கு தனது படைகளை அனுப்பியுள்ளார். இப்படை அனுப்புதல் பாரெயின் போராளிகளுக்கு எதிராக அவர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டே நடைபெற்றது. இந்த நடவடிக்கையை எந்த ஐரோப்பிய ஒன்றியமும், நேட்டோவும் அமெரிக்காவும் எதிர்க்கவில்லை. ஏன்? இந்த இரண்டு இராஜாக்களும் அமெரிக்க தலையாட்டிகள். "Wherever people long to be free, they will find a friend in the United States," இது அமெரிக்க அதிபரின் அண்மைய பேச்சின் போது குறிப்பிட்ட வசனங்கள். சவூதி, பாரெயின், யேமன் போன்ற அமெரிக்க நட்பு நாடுகள் மக்களை கூண்டில் அடைத்து வைத்து சித்திரவதை செய்கின்றது. பாரெயி னில் சியா முஸ்லீம்கள் இரண்டாம் தர பிரசைகளாக நடத்தப்படுகின்றார்கள். பாரெயினில் அரசும், அரசரும் அரச படைகளும் வைத்தியசாலைகளை தமது கட்டுப்பாட்டுக் குள் வைத்துள்ளார்கள். காயம் படும் கிளர்ச்சியாளர்கள் மருத்துவ உதவி பெறாமல் தடுக்கவே இந்த நடவடிக்கை. இது ஐ.நாவினது கொள்கைகளுக்கு எதிரானது. சர்வதேச மனித உரிமை விதிகளுக்கும் இது முரணானது. மனித உரிமைவாதிகளும் ஜனநாயக வாதிகளும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஒபாமாவின் பேச்சுக்கு மாறான செயல்பாடுகள் கொண்ட நாடுகள் அமெரிக்க நண்பர்கள். அமெரிக்காவின் இந்த இரட்டை வேடம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஐ.நா. The Charter in Article 2(7) கூறுவது "essentially within the domestic jurisdiction"of member states unless there is a genuine issue of international peace and security present, லிபியாவில் அப்படி எதுவும் இல்லை. ருவண்டா, இலங்கை டபர் (சூடான்) போன்ற இடங்களில் இனப் படுகொலைகள் நடைபெற்ற போது மக்களை காப்பாற்ற மறுத்த ஐ.நாவும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் லிபியாவில் மூக்கை நுழைப்பது ஏன்? அரபு நாடுகள் அனைத்திலும் உள்ள ஒத்த குரல் தலைவர்கள் பதவியிறங்க வேண்டும்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# எது ஆன்மீகம்?



## சத்குரு வாசுதேவ்

உலகத்தில் இன்று மிகவும் சீர்குலைக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளில் ஒன்று, ஆன்மீகம்.

பல இலட்சம் வழிகளில் இந்தச் சொல் அறியாமையாலோ, அலட்சியத்தாலோ சரியாகவும், தவறாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஆன்மீகம் என்பது அவசியமா இல்லையா என்றெல்லாம் மனிதர்கள் மனதில் கேள்விகளும் குழப்பங்களும் எழுந்திருக்கின்றன.

நீங்கள் நினைப்பதெல்லாம் ஆன்மீகம் ஆகாது. நீங்கள் கடவுளைப்பற்றி நினைத்தாலும் அது ஆன்மீகச் சிந்தனை அல்ல. ஏனெனில், சிந்தனை என்பதே ஆன்மீகம் சார்ந்ததல்ல. அது உளவியல் சார்ந்தது. உடல், மனம், உணர்வுகள் ஆகியவையெல்லாம் வாழ்வின் வெவ்வேறு பரிமாணங்கள். அவற்றை சரியென்றும், தவறென்றும் வரையறுத்து விட முடியாது.

உங்கள் ஸ்தூல எல்லைக்கு உட்பட்டது அல்ல ஆன்மீகம். மனஅமைதியை தேடுவதற்கு ஆன்மீகம் என்று பெயரல்ல. அமைதியென்பது உடல் மற்றும் மன எல்லைகளைச் சார்ந்தது மட்டும்தான். உடலுக்கும் மனதுக்கும் உங்களால் சில இடையூறுகளை ஏற்படுத்த முடியும். இந்த இரண்டையும் சாராத ஒன்றுக்கு எந்த இடையூறையும் ஏற்படுத்த இயலாது. எனவே ஆன்மீகம் என்பது அமைதியை தேடுவதும் இல்லை. ஆன்மீகத்திற்கு அமைதி தேவையும் இல்லை.

ஆன்மீகம் என்று சொல்கிறபோது ஒரு மனிதரின் அனுபவத்திற்குள் வராத ஒன்றைப்பற்றி பேசுகிறோம். உடல், மனம், உணர்வுகள் ஸ்தூல சக்தி ஆகியவை சேர்ந்து ஸ்தூல உடலாக செயல்படுகின்றன. இந்த உடல் மட்டுமின்றி மற்றவையும் இந்த பிரபஞ்சமும் கூட இதே கூட்டமைப்பில் உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட அவை உருவாகியுள்ள கலவையின் அடிப்படையில் தனி மனிதராக தோன்றுகிறது. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் அற்புதமான ஒருங்கிணைப்பே மனித வடிவம். இது பஞ்ச பூதத்தின் விளையாட்டுதான். ஆனால் தன்னளவிலேயே முழுமைபெறும் விதமாக மிக அழகான முறையில் அது கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

இதைப் படைத்தவர் உண்மையிலேயே இருக்கிறாரா என்று நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள் என்றால் இந்தப் படைப்பு மிகச் சரியாக படைக்கப்பட்டிருப்பதாக அர்த்தம். காலையும் மாலையும் பிரார்த்தனை செய்யாமல் இந்தப் படைப்பில் எதையுமே உங்களால் செய்ய முடியா தென்றால் படைப்பில் குறையிருப்பதாக பொருள். ஆனால் படைத்தவரையே மறந்து விட்டாலும் இந்தப் பிரபஞ்சம் நிகழு மென்றாலும் அதுதான் படைப்பின் அற்புதம்.

இந்த முழுமையை மனிதர்கள் உணர்கிறபோது என்ன சிக்கல் ஏற்படுகிறதென்றால் அவர்கள் கடவுளை மறந்து விடுகிறார்களே தவிர, வேறு எதையாவது சார்ந்தே வாழத் தொடங்குகிறார்கள். வெளியிலிருந்து எதுவும் தேவைப்படாமல், எந்தவோர் உறவையோ, உணர்வு நிலையில் அல்லது உளவியல் நிலையில் எந்தவோர் உதவியையோ சார்ந்திராமல் தனித்தன்மையோடு இருந்தால் நீங்களும் படைத்தவரின் தன்மையை எட்டுகிறீர்கள். படைப்பின் ஒரு துளி பரிணாம வளர்ச்சியால் நிலைமாற்றம் கண்டு படைத்தவராகவே மாறிவிடுகிறது.

இது பலருக்கும் ஏன் நிகழ்வதில்லை யென்றால் அவர்கள் எல்லாவற்றிலும் பாதி விளையாட்டுத்தான் விளையாடுகிறார்கள். எந்தவொன்றில் நீங்கள் ஈடுபட்டாலும் உங்கள் படைப்பின் எல்லைகளை நீங்கள் தகர்த்துவிட முடியும். அது ஆன்மீக விளையாட்டாக இருந்தாலும், லௌகீக விளையாட்டாக இருந்தாலும் அது முழுமை யாக 100% ஈடுபடுவீர்களேயானால் உங்கள் உச்சத்தை உங்களால் தொடமுடியும்.

> Contact: 1 866 424 ISHA (4742)
> Email: toronto@ishafoundation.org
> Website: www.ishafoundation.ort / www.ishayoga.org
> **Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

ஆனால் பெரும்பாலான மனிதர்களால் ஒரே நிலையில் நீண்ட நேரம் இருக்க முடிவதில்லை. மாறிக் கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் 24 மணி நேரம் கோபமாக இருந்ததுண்டா? அல்லது 24மணி நேரம் சோகமாக இருந்ததுண்டா? இருந்திருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் இடையிடையே எண்ணங்கள் எங்கெங்கோ சென்றிருக்கும். ஒரே நிலையில் நீங்கள் 24 மணி நேரம் இருந்தால் உங்கள் உச்சத்தை தொட்டு விடுவீர்கள்.

காற்றில் குமிழிகளை ஊதும்போது குமிழிக்கு உள்ளேயும் வெளியேயும் காற்றுத்தான் இருக்கிறது. ஆனால் அந்தக் குமிழ் ஓர் அடையாளத்தைக் கொண்டிருக் கிறது. அதேபோல மனிதனுக்கு உள்ளும் வெளியிலும் ஒன்றேதான் இருக்கிறது. ஆனால் மிகவும் நுட்பமான தடையொன்று எழுப்பப்பட்டுள்ளது. நீங்கள் எவ்வளவு முயன்றாலும் அந்தத் தடை இருக்கவே செய்கிறது. இதைக் கடந்து செல்ல வேண்டு மென்றால் அதற்கொரு வழி இருக்கிறது. தெரிந்து கொள்ள விரும்பினால் அதற்கு வேறொரு வழி இருக்கிறது. கடந்து போகாத ஒருவரால், தெரிந்து கொள்ள முடியாது.

மனிதர்கள் பல வேலைகளைச் செய்தே பழக்கப்பட்டுவிட்டார்கள். அதனால்தான் தீவிர பக்தர்கள் உலகத்தின் கண்களுக்கு பைத்தியக்காரர்களைப்போல் தென்படுகிறார் கள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அவர்கள் தங்களை முற்றிலும் இழந்தவர்களாக, மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாகத் தோன்றுகிறார்கள். ஒரே திசையில் தீவிரமாக இயங்குவீர்களே யானால் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகிற வாழ்க்கையை வாழ்வதில் சிரமம் ஏற்படும்.

யோகக் கலைக்கு நான்கு பரிமாணங்கள் உண்டு. ஞானமார்க்கம், பக்தி மார்க்கம், கர்ம மார்க்கம், கிரிய மார்க்கம். இந்த நான்கும் சமநிலையில் கையாளப்பட்டால் நீங்கள் அனுபவங்களின் உச்சத்தைத் தொடுகிற அதே நேரம் சமூகத்திலும் இயல்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். ஈஷாவில் இந்த சமநிலையைத்தான் வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிறோம். தியானத்தில் இருக்கிறபோது பரவசத்தின் உச்சத்தில் இருக்கிற மனிதர்கள், அடுத்த விநாடியே செயல்பட வேண்டி வந்தால் அமைதியாக எழுந்து செயல்படத் தொடங்குவார்கள். சமூகத்தால் இயல்பென்று கருதப்படுகிற வாழ்க்கையை சம நிலையோடு நீங்கள் வாழ வேண்டுமென்றால் உடல், மனம், உணர்வு, சக்திநிலை ஆகியவை சமநிலை யில் இயங்க வேண்டும். அப்போதுதான் மனிதர் முழுமையான ஆனந்தத்தில் இருந்து கொண்டே சிறந்த செயல்திறனோடும் இயங்க முடியும். இன்றைய உலகிற்கு இதுதான் மிகவும் தேவை.

நீங்கள் பரவசமாக இருக்கிறபோது உங்கள் இறுக்கங்கள் தளர்ந்து விடுகின்றன. முழுமையாக ஆனந்தத்தில் இருப்பவர்களை நீங்கள் களிமண்போல உங்களுக்கு வேண்டிய விதங்களில் வடிவமைக்கலாம். நாம் ஆனந்தத்திற்கு அடிமையானவர்கள் அல்ல. ஆனால் ஆனந்தம் பற்றி நாம் பேசுவதற்கு காரணமே ஒரு மனிதனை வடிவமைக்க வேண்டுமென்றால் அவன் ஆனந்தமான நிலையில் இருக்க வேண்டும். அதிலிருந்து அவனை ஏதோ ஒரு தன்மைக்குக் கொண்டு செல்லலாம். அல்லது ஒன்றுமற்ற நிலைக்கு கொண்டு செல்லலாம்.

ஆன்மீகத்தில் ஈடுபடுகிற பலரும் அழகான இடங்களையோ அமைதியான பகுதிகளையோ தேடிச் செல்கிறார்கள். அங்கே அவர்கள் ஆனந்தமாக உணர்கிறார்கள். ஆனால் திரும்பிய பிறகு பழைய நிலைக்கே செல்கிறார்கள். ஏனென்றால் அவர்களின் தன்மையில் தீவிரமான பரவசத்தை உணரவில்லை. அவர்களின் அணுகுமுறை மட்டுமே மாறுகிறது. அணுகுமுறையை மாற்றுவது ஆன்மீகம் அல்ல. உங்கள் குமிழியை உடைத்துக் கொண்டு விடுதலை அடைவதற்குத்தான் ஆன்மீகம் என்று பெயர். உங்களுக்குள்ளேயும் உங்களைச் சுற்றியும் நீங்கள் விரும்புவதை உங்களால் உருவாக்கிக் கொள்ள முடியும். இந்த நிலை வரவேண்டுமேயானால் பரவசமான நிலைகளுக்குப் போவதுதான் வழி.

இந்தப் பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பாதவர்கள் தான் மதுவையும், போதைப்பொருட்களையும் தேடிப் போகின்றனர். ரசாயனங்களின் உதவியோடு அவர்கள் விடுதலையைத் தேடுவார்களேயானால் அந்த உதவிகள் கிடைக்காதபோது அவர்கள் விரக்தியில் ஆடுகிறார்கள்.

மன்சூர் என்று அழைக்கப்பட்டவர் அல்ஹலாஜ். இவர் பிறந்த பாங்ஸ்ரா இன்று யுத்தப் பகுதியாகி பெருமளவு சிதைக்கப் பட்டிருக்கிறது. மற்றபடி பண்பாட்டளவில் அது மகத்தான இடம். சூ.ஃபி முறை இங்குதான் பிறந்தது. அல்ஹலாஜின் தந்தை ஒரு பெரிய அறிஞர். அவரிடமே அல்ஹலாஜ் அனைத்தையும் கற்றுக் கொண்டார். தான் கற்றுக் கொண்டதை பிறருக்கு போதிக்க அவர் விரும்பியதால் குஜராத்திற்கு வந்தார். அங்கே, முழுமையான ஆனந்தத்திலிருந்த பல ஞானிகளைக் கண்டார். அங்கு சில ஆண்டுகள் இருந்த பிறகு அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மீண்டும் பாங்ஸ்ரா திரும்பினார்.

அப்போது அவர் கோவணம் மட்டுமே அணிந்திருந்தார். அவர் வாழ்ந்திருந்த சமூகத்தில் கோவணம் மட்டுமே அணிந்திருப்பது பைத்தியக்காரத்தனமாக கருதப்பட்டது. அவர் அங்கிருந்தவர்களிடம் "நான் என்ற ஒன்றே இல்லை" என்றெல்லாம் சொல்லத் தொடங்கினார். அவரைப் பைத்தியம் என்று கருதியவர்கள் அவரிடமிருந்து விலகியிருந்தார்களே தவிர ஒன்றும் சொல்லவில்லை.

ஆனால், கடைசியில் "நானே கடவுள்" என்று அவர் சொன்னபோது சிக்கல் தொடங்கியது. அவர்மேல் விதம் விதமான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. அனைவரும் காபாவை வலம் வந்தபோது அவர் வேறொரிடத்தில் வேறொரு கல்லை நிறுவினார். ஒருவேளை அவர் அதனை பிரதிஷ்டை செய்து ஒரே சக்தி நிலையை உணர்ந்திருக்கக் கூடும். "ஒரே இடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. நீங்கள் இந்தக் கல்லையும் வலம் வரலாம்" என்றார். அதன்பிறகு கடும் தண்டனைகள் துவங்கின. ஏறக்குறைய உயிரோடு அவர் தோலையே உரித்தார்கள். அவரை இடுப்புவரை புதைத்து வைத்துவிட்டு கடந்து போகும் ஒவ்வொருவரும் அவர் மீது கல்லெறிய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் கடந்து போனார். அவருக்குக் கல்லெறிய விருப்பமில்லை. எனவே மன்சூர் மீது ஒரு மலரை எறிந்தார். மன்சூருக்குள்ளிருந்து கவிதை வெடித்தது. "இந்தக் கற்களெல்லாம் என்னைக் காயம் செய்யவில்லை. ஏனெனில் அவை அறியாத-வர்களால் எறியப்பட்டவை. ஆனால் என்னை அறிந்திருந்தும் நீ எறிந்த மலர் என்னைக் காயப்படுத்திவிட்டது" என்றார்.

பைத்தியக்காரத்தனம் என்பது என்ன? நீங்கள் வாழ்வை அறிந்த வகையிலிருந்து வேறொரு நிலைக்கு ஒருவர் எல்லை தாண்டி சென்றிருக்கிறார். கீழே இருக்கிற எல்லைகளை உடைத்திருக்கிறார் என்றால் அவர் பைத்தியமாக இருக்கிறார். பைத்தியம் என்பது எப்போதுமே மனம் சார்ந்ததுதான். மனம் என்ற ஒன்று இருந்தால்தான் நீங்கள் பைத்தியமாக முடியும். மனதை நீங்கள் கடந்து போனால் மன்சூர் போலவோ ஏசுநாதர் போலவே ஆகிவிடுவீர்கள்.

மற்றவர்கள் கண்களுக்கு நீங்கள் பைத்தியம்போல் தெரிவீர்கள். ஆனால் உள்நிலையில் நீங்கள் முழு தெளிவோடு இருப்பீர்கள். அத்தகைய நிலையில் நீங்கள் இருக்கும்போது தர்க்க அறிவை கடந்திருப்பீர்கள். பைத்தியம் பிடிக்கிற நோய்க்கு ஆளானவர்களிடம் அழுத்தமான தர்க்க அறிவு செயல்படுகிறது. அது வளைந்து நெளிந்து இருக்கிறது அவ்வளவுதான்.

பைத்தியக்காரத்தனம் தர்க்க அறிவுக்கு உட்பட்டது. ஞானோதயம் அனைத்தையும் கடந்தது. ஒன்றுபட்ட தன்மையில் இருப்பதை உங்களால் சிந்திக்க முடியாது. பிரபஞ்சத்தில் என்ன நிகழ்ந்தாலும் அது உங்கள் வழியாக பிரவாகம் எடுக்கிறது.

எதையும் உங்களால் உள்வாங்க முடியும். எதையும் உங்களால் உணரமுடியும். தீவிரம் நிலையானதாக இருந்தால் அதுவே விடுதலையை நிகழ்த்தும். ஆன்மீகம் என்பது அமைதியை தேடுவதற்கல்ல. உங்கள் உச்சத்தைத் தொடுவதற்கு!

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் தகிடுதித்தங்களும்

- இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன் -

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அரைகுறையாக நடைபெற்று முடிந்து விட்டன. ஆளும் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 205 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியி னால் இரண்டாவது இடத்தைக் கூட தக்க வைக்க முடியாமல் போய்விட்டது. ஜேவிபி கையில் இருந்த ஒரேயொரு சபையையும் இழந்து படுதோல்வியைத் தழுவியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி 12 இடங்களைக் கைப்பற்றி இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருக்கின்றது.

ஆயினும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஒரு கேலிக்கூத்தாகவே நடத்தி முடித்துள்ளது. வெளிப்பார்வைக்கு ஜனநாயக முறைப்படி நடத்தப்பட்டதாகத் தோற்றமளித்தாலும், பல தகிடுதித்தங்கள் திரைமறைவில் இடம்பெற்றிருப்பதைப் பலரும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். வெளிப்படையாக அதனைக் கூறுவதற்கான ஜனநாயக சுதந்திரம் நாட்டில் இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

மொத்தமாக 234 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இறுதி முடிவுகளின்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 205 சபைகள், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 12 சபைகள், ஐக்கிய தேசிய கட்சிக்கு 9 சபைகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 4 சபைகள், தேசிய காங்கிரசுக்கு 2 சபைகள், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஒரு சுயேச்சை குழுவுக்கு தலா ஒவ்வொரு சபையும் கிடைத்துள்ளன.

நாடெங்கிலும் உள்ள 43 நகரசபைகள் உட்பட 301 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவதற்காக வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தன. இதற்கென சமர்ப்பிக்கப் பட்ட 2047 விண்ணப்பங்களில் உரிய முறையில் விண்ணப்பங்கள் இருக்கவில்லை என்ற காரணத்திற்காக 452 விண்ணப்பங்களைத் தேர்தல் திணைக்களம் நிராகரித்திருந்தது. வேட்பு மனுக்கள் நிரா- கரிக்கப்பட்டதை ஆட்சேபித்து குறிப்பாக அரசாங்கத்தைச் சார்ந்த அரசியல் கட்சிகள் 68 வழக்குகளை நீதமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன. இவற்றில் 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

பிரதேச சபைகளில் இந்த இரண்டு சபைகளும்போக, துணுக்காய் மற்றும் மாந்தை மேற்கு ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த இரண்டு சபைகளிலும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகிய சிறிரங்காவின் தலைமையிலான பிரஜைகள் முன்னணியும் களத்தில் இறங்கியிருந்தது.



இந்த உத்தரவுக்கமைய வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 20 மன்றங்களுக்கான தேர்தலும் நடைபெறவில்லை.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல், அங்கு மீள்குடியேற்றம் முழுமை பெறாத காரணத்தினால் இந்த மன்றங்களுக்கான தேர்தல்களை தேர்தல் திணைக்களம் ஒத்திவைத்தது.
உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் விதிகளின்படி, இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்து கொடுப்பதற்கு சட்டத்தில் வாய்ப்பு எதுவுமே கிடையாது. ஊரில் மக்கள் இல்லாவிட்டால் அங்கு தேர்தல் நடத்துவதில் அர்த்தமில்லை என்பதே இதன் கருத்தாகும். ஆகவேதான், மக்கள் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள முல்லைத்தீவு நகரத்தை உள்ளடக்கிய கரைதுறைப்பற்று, புதுக்குடி யிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்களைத் தேர்தல் ஆணையாளர் ஒத்திவைத்ததாக அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நான்கு

இந்த முன்னணியினால் துணுக்காய் பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுவில் இளைஞர் யுவதிகளுக்கான வேட்பாளர்களில் குறிப்பிட்ட வயது எல்லைக்குக் குறைந்த பெண் ஒருவர் வேட்பாளராகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைக் கண்டறிந்த அமைச்சர் ரிசாட் பதியுதீனின் ஆதரவாளர்கள் தெரிவித்த ஆட்சேபணையையடுத்து, தேர்தல் ஆணையாளர் அந்த வேட்பு மனுவை நிராகரித்திருந்தார்.
இவ்வாறு தமது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதைச் சிறிது கால தாமதமாகவே சிறிரங்கா நீதிமன்றத்தில் ஆட்சேபித்திருந்தார். இது தொடர்பாக அவர் நீதிமன்றத்தில் செய்திருந்த விண்ணப்பத்தை யடுத்து தேர்தல் ஆணையாளர் துணுக்காய் பிரதேச சபைக்கான தேர்தலையும் ஒத்தி வைத்தார்.

ஆயினும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச சபையில் போட்டியிட்ட சிறிரங்காவின் பிரஜைகள் முன்னணியினால் 97 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிரங்காவின் வேட்பு மனு மட்டுமல்ல.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

> " மொத்தமாக 234 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இறுதி முடிவுகளின்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 205 சபைகள், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 12 சபைகள், ஐக்கிய தேசிய கட்சிக்கு 9 சபைகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 4 சபைகள், தேசிய காங்கிரசுக்கு 2 சபைகள், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஒரு சுயேச்சை குழுவுக்கு தலா ஒவ்வொரு சபையும் கிடைத்துள்ளன."

TORONTO BUSINESS COLLEGE



Personal Support Worker Diploma
- Excellent Instructors
- Well equiped PSW Lab
- Hands on Clinical Training
- 100% Co-op placement
- NACC Certificate
- Good Salary

Computerized Accounting Diploma
- Microsoft Windows
- Microsoft Word
- Microsoft Excel
- Financial Accounting
- Quick Books
- Simply Accounting
- ACCPAC

Second Career

Co-Op Available

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005 January க்குப்பின் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்

416-291-5155

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.t-businesscollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ஆசியா அணிகள் முதல் தடவையாக இறுதிமோதலில்

10ஆவது உலகக்கிண்ணபோட்டிகள் விறுவிறுப்பின் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. 6 தடவைகள் உலகக்கிண்ண அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்ற நியூசிலாந்து அணி இம்முறையும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகாமல் இலங்கை அணியால் சொந்த மண்ணில் வெளியேற்றப்பட்டது. அடுத்த அரையிறுதியாட்டத்தில் கிரிக்கெட் மகாயுத்தம் என வர்ணிக்கப்படும் பாகிஸ்தான் அணி எதிர் இந்திய அணி சொந்த மண்ணில் உலகக்கிண்ண வரலாற்றில் ஐந்தாவது தடவையாக பாகிஸ்தான் அணியை மடக்கியுள்ளது. இந்தியா மும்பை மைதானத்தில் நடக்கவிருக்கும் இறுதியாட்டத்தில் முதல் தடவையாக இந்திய அணி, இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக (1999, 2007) இறுதியாட்டத்திற்கு தெரிவான இலங்கை அணியுடன் மோதுகிறது. 1983 இல் உலகக்கிண்ணத்தை வென்ற இந்தியாவுடன் 1996 உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை அணியும் மோதும் இந்த ஆட்டம் கிரக்கெட் ரசிகர்களுக்கு பெருவிருந்தாக இருக்கப்போகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். 10 ஆவது உலகக்கிண்ணத்தை அசத்தப்போவது யாரு என்பதை!!!!!!

## பலவீனமாகும் பலம்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக கருத்துத் தெரிவித்த முன்னாள், இந்நாள் பிரபலங்கள் எல்லோருமே "இந்தியாவுக்கே கோப்பையை வெல்ல அதிக வாய்ப்புள்ளது. இந்திய அணி பலம் வாய்ந்த பேட்டிங் வரிசையைக் கொண்டுள்ளதே அதற்குக் காரணம்" எனக் கூறினர்.

1983-ல் கோப்பையை வென்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த கபில்தேவ் கூட, அன்றைய அணியைவிட இன்றைய அணியே மிகச்சிறந்த அணி என்று குறிப்பிட்டார். போட்டி தொடங்குவதற்கு முன் இந்தியாவின் பேட்டிங் வரிசையும் அப்படித்தான் தோற்றமளித்தது. அதை நிரூபிக்கும் வகையில் வங்கதேசத்துக்கு எதிரான முதல் ஆட்டத்திலேயே இந்திய அணி 370 ரன்களைக் குவித்தது. அதில் பெரும்பகுதி இரு தனிப்பட்ட வீரர்களால் (சேவாக் 175, கோலி 100) எடுக்கப்பட்டதாகும். இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சச்சின் 120 ரன்களை குவித்தார். அந்த ஆட்டத்தில் இந்தியா 338 ரன்கள் என்ற பெரிய இலக்கை எட்டினாலும், நடுவரிசை பேட்ஸ்மேன்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால் கடைசி 7 விக்கெட்டுகளை 33 ரன்களுக்கு இழந்தது. இதனால் அந்த ஆட்டம் டையில் முடிந்தது. நடுவரிசை பேட்ஸ்மேன்கள் சிறப்பாக ஆடியிருப்பார்களானால் வலுவான

## விளையாட்டுத் தகவல்கள் 302

ஸ்கோர் மட்டுமின்றி, ஆட்டத்தின்போக்கும் இந்தியாவுக்கு சாதகமாக மாறியிருக்கக் கூடும். அதன்பிறகு கத்துக்குட்டிகளான அயர்லாந்து, நெதர்லாந்து அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் பலம் வாய்ந்த பேட்டிங் வரிசையைக் கொண்ட இந்திய அணி, குறைந்தபட்ச ஸ்கோரை எடுப்பதற்கும்கூட தடுமாறியது. இறுதியில் போராடியே வென்றது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் சேவாக் 73, சச்சின் 111, கம்பீர் 69 ரன்கள் குவித்து வலுவான ஸ்கோரை எட்ட உதவியபோதும்கூட, கடைசிக் கட்ட ஓவர்களில் சிறப்பாக ஆடி ரன் குவிப்பில் ஈடுபட வேண்டிய முன்னணி பேட்ஸ்மேன்கள் வருவதும், பெவிலியன் திரும்புவதுமாக இருந்தனர். இதன் விளைவு பெரிய ஸ்கோரை எட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்திய அணி 296 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. கடைசி 29 ரன்களுக்கு மட்டும் இந்திய அணி 9 விக்கெட்டுகளை இழந்தது. 296 ரன்கள் என்பது வெற்றிக்குப் போதுமான ஸ்கோர் என்றாலும், இந்திய பந்துவீச்சின் பலவீனத்தை சரியாகப் பயன்படுத்திய தென் ஆப்பிரிக்காவின் கடைநிலை வீரர்கள் அந்த அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தனர். எதிரணியின் பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடிய அதேசமயம், இந்தியாவின் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன்கள் பொறுப்பில்லாமல் ஆடியது இந்திய அணியின் பலவீனத்தையே வெளிப்படுத்துவதாக அமைந்தது. போட்டி தொடங்குவதற்கு முன்பு இந்திய அணியின் பீல்டிங் மோசமாக உள்ளதாகக் கூறப்பட்டது. பின்னர் பந்துவீச்சு மோசமானது.




இப்போது பலமான பேட்டிங்கும் பலவீனமாகத் தொடங்கியுள்ளது. சச்சினும், சேவாக்குமே தொடர்ச்சியாக சிறப்பாக ஆடி வருகின்றனர்.

போட்டி தொடங்குவதற்கு முன்னதாக பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியில் களமிறங்கிய பாகிஸ்தான், தொடர் தோல்விகளுக்குப் பிறகு களமிறங்கிய நியூசிலாந்து அணிகள் கூட அற்புதமாக விளையாடி அதிரடி திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. பல அணிகளில் சிறப்பான தொடக்க வீரர்கள் இல்லாதபோதும் கூட, தனி ஒரு வீரரை நம்பியில்லை. முக்கிய வீரர்கள் சரியாக விளையாடாதபோதும் பின்வரிசையில் வரும் வீரர்கள் நெருக்கடிக்கு மத்தியிலும் கூட சிறப்பாக ஆடி அணிக்கு வெற்றி தேடித்தந்து வருகின்றனர். ஆனால் இந்திய அணிக்கு சிறப்பான தொடக்கம் அமைந்தாலும் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன்கள் அதை பயன்படுத்திக் கொள்ள தவறிவிடுகின்றனர். இப்போதைய இந்திய அணி தனியொரு சச்சினையும், சேவாக்கையும் நம்பித்தான் உள்ளதோ என்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்திய அணியின் பந்துவீச்சு மிகவும் பலவீனமாக உள்ள நிலையில், சோதனை அடிப்படையில் பந்துவீச்சாளர்களை மாற்ற கேப்டன் தோனி தயங்குவது ஏன் என்பது தெரியவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பயிற்சி ஆட்டம் நீங்கலாக வேறு எந்த ஆட்டத்திலும் பியூஷ் சாவ்லா ஜொலிக்கவில்லை. மாறாக ரன்களை வாரி வழங்கினார். வங்கதேசத்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் ஸ்ரீசாந்த் மோசமாக பந்துவீசினார் என்பதற்காக இதுவரை அவருக்கு அடுத்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

2007-ல் நடைபெற்ற இருபது ஓவர் உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் அந்த அணி வெற்றிப் பாதையில் பயணிக்க ஆரம்பித்தபோது, தொடக்க வீரர்கள் கில்கிறிஸ்ட், ஹேடன் ஆகியோரை வெளியேற்றி திருப்புமுனையை ஏற்படுத்தியவர் ஸ்ரீசாந்த் என்பது தோனிக்கு தெரியாததல்ல. இப்போதுள்ள இக்கட்டான சூழலில் பேட்டிங், பந்துவீச்சு இரண்டிலுமே கண்டிப்பாக சில மாற்றங்களை செய்வதே புத்திசாலித்தானம். இனியாவது இந்திய அணி எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்பதே இந்திய ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

## விடைபெற்றன!

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி கடந்த பிப்ரவரி 19-ம் தேதி தொடங்கினாலும், நடைபெற்ற 42 லீக் ஆட்டங்களில் ஒரு சில ஆட்டங்கள் மட்டுமே விறுவிறுப்பாக அமைந்தன. இந்தத் தொடரில் இடம் பெற்ற 14 அணிகளில் 6 அணிகள் பலமில்லாத அணிகள் என்பதே விறுவிறுப்பு குறையக் காரணம் என்ற குற்றச்சாட்டும் எழாமல் இல்லை. எப்படியும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறப் போவதில்லை என்று கருதப்பட்ட வங்கதேசம், அயர்லாந்து, நெதர்லாந்து, ஜிம்பாப்வே, கனடா, கென்யா ஆகிய 6 அணிகளும் நினைத்த மாதிரியே இப்போது தொடரில் இல்லை.

2003 உலகக் கோப்பையில் வியப்புக்குரிய சில வெற்றிகளை பெற்ற கென்ய அணி இந்த முறை எதிர்பார்த்த அளவுக்கு சோபிக்கவில்லை. பங்கேற்ற 6 போட்டிகளில் ஒரு வெற்றியைக்கூட அந்த அணியால் பெற முடியவில்லை. இதேபோல, நெதர்லாந்து அணியும் பங்கேற்ற 6 போட்டிகளிலும் ஒரு வெற்றியைக்கூட ருசிக்கவில்லை. போட்டியின் விறுவிறுப்பு குறைவதாகக் குற்றச்சாட்டு எழுந்ததால், அடுத்த உலகக்கோப்பைத் தொடரில் 10 அணிகள்தான் பங்கேற்கும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்துள்ளதால், சில அணிகளுக்கு இதுவே கடைசி உலகக் கோப்பைத் தொடராக இருக்கலாம். குறிப்பிடத்தக்க வெற்றி: தொடரில் இருந்து வெளியேறியுள்ள 6 அணிகளில் "பி" பிரிவில் இடம் பெற்றிருந்த அயர்லாந்து, வங்கதேசம் அணிகள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று தங்களது பலத்தை நிரூபித்தன. மார்ச் 2-ம் தேதி பெங்களூரில் இங்கிலாந்து - அயர்லாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டி மிகவும் குறிப்பிடத்தக்கது. முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 327 ரன்களை குவித்தது.

328 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து அணி தொடக்கத்தில் சற்று தடுமாற்றத்துடன் விளையாடினாலும், கெவின் ஓ பிரைனின் அதிரடி ஆட்டத்தால் (63 பந்துகளில் 113 ரன்கள்) 49.1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 328 ரன்களை குவித்து வெற்றி பெற்றது.

இதுவரை நடைபெற்ற உலகக்கோப்பை தொடர்களிலேயே இரண்டாவதாக களமிறங்கி 327 ரன்னை எட்டிப்பிடித்த முதல் அணி என்ற பெருமை அயர்லாந்து அணிக்கு கிட்டியது. மேலும், இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடி 113 ரன்களை குவித்த கெவின் ஓ பிரைன் குறைந்த பந்துகளில் (50) சதமடித்த வீரர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். இதேபோல, மார்ச் 11-ம் தேதி வங்கதேசத்தில்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 32ஆம் பக்கம்



# வீடு வாங்கும் போது கொடுக்கும் முற்பணத்தை பாதுகாக்கவும்

## *Protect Your Deposit*

ஒருவர் வீடு வாங்கும் போது அல்லது விற்கும்போது உங்களிற்காக சேவை செய்யும் வீட்டுப் பிரதிநிதி ஒரு பதிவு செய்யப்பட்ட விற்பனை முகவர் (Registered Sales Person) என்பதனை உறுதி செய்தல் வேண்டும். அதாவது (Registered Council of Ontario (RECO) இன் அங்கத்தவரா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

அண்மையில் நடந்த உண்மையான ஒரு Court case இன் சாரமே இது.

குடும்பம் ஒன்று தாம் பார்த்து தமக்குப்பிடித்த அந்த வீட்டிற்கு Offer கொடுத்தார்கள். அத்துடன் முதலீடாக ஆரம்ப பணத்தையும் கொடுத்தார்கள். பின்னர் தான் தெரியவந்தது குறிப்பிட்ட வீட்டுப்பிரதிநிதி முன்பு ஒரு காலத்தில் Registered Sales Person ஆக இருந்தவர். பின்பு RECO (Registered Council of Ontario) என்ற கனேடிய அரசாங்கத்தின் மேற்பார்வை செய்யும் நிறுவனத்தில் அவர் அங்கத்தவராக இல்லை. இதனால் குறிப்பிட்ட பணத்திற்குரிய காப்புறுதி கிடையாது. இதனால் அந்தக் குடும்பம் குறிப்பிட்ட பணத்தை இழக்க வேண்டியிருந்தது. இருந்தபோலும், குறிப்பிட்ட நபர் சட்டத்திற்கு மாறாக ஒன்ராரியோ ஆதனம் விற்றல் வாங்கலில் ஈடுபட்டதால் 15 மாதங்கள் சிறைவாசம் செல்ல வேண்டியிருந்தது. எனவே வீடு விற்பவர்கள் வாங்குபவர்கள் நீங்கள் தெரிவு செய்யும் வீட்டுப்பிரதிநிதி, RECO இல் அங்கத்தவராக இருக்கின்றாரா என்பதனை உறுதி செய்ய வேண்டும். ஒருவர் அறிமுக அட்டையை (Business Card) தந்தால் அவர் ஒரு முகவர் என நம்புதல் கூடாது. $10 உடன் எவரும் எவ்வாறும் அறிமுக அட்டையை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் தங்களின் பெயரிற்குப்பின்னால் எதனையும் தான் படித்து பெற்ற பட்டம் போல் எழுதி மக்களை இலகுவாக ஏமாற்றலாம்.

அத்துடன் தவறுதலான, தப்பாகவும் தம்மை அடையாளப்படுத்துபவர்கள் மீது மிகவும் அவதானமாகவும், கண்காணிப்பாகவும் இருத்தல் வேண்டும். இதனால் பல அப்பாவி மக்கள் எமது சமுதாயத்தில்



நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 338**

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**HomeLife / GTA Realty Inc., Brokerage***

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"

*Independently Owned & Operated



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng
(Broker/Owner)

**SPACE FOR LEASE**

Finch & Middlefield.
1000 sqft.All utilities included.
Available anytime.
Close to all amenities.
Lease only 1000 + tax.

**எதிர்பாருங்கள்**

**BRAND NEW COMMERCIAL BUILDING & UNIT FOR SALE**

*Extended
Mcnicoll Ave. & Morningside
*For new commercial building
*Each building about 5000 Sqft.
*1 Building - leased to a Bank.
*Avail. for Medical purposes
Restaurant, Retail Institutions.
**Don't Miss The Opportunity**

**CONDO FOR SALE**

**MCCOWAN & ELLESMERE**
Brand new 1 bedroom + den condo for sale. Walking distance to Scarborough Town center. Immediate occupancy.
Asking $239,900.

**HOUSE FOR SALE**

3 Bedroom + walk-out house for sale. 2 Storey house. New Market (HWY404 / MULLOCK). 5 Years old. Main floor master bedroom + full washroom. Immediate occupancy.
Asking only $389,900.

**CONDO. FOR RENT**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den condo. for lease. Utilities included. (Hydro Extra). Immediate occupancy.
Resonable rent.

**SPACE FOR LEASE**

2000 Sqft. Clean building. Lots of parking. 2nd floor. Above Embassy store in Scarborough / at 5200 Finch Ave. East. All utilities included. No extra.
Can be used for Private Tution, Medical Office, Yoga class, Insurance, Law Office Physiothraphy , Optical, Mortgage........ Much more.
Asking price $2200
(All inclusive). Tax extra.

**BRAND NEW CONDO. AVAILABLE**

**HWY 401 & YONGE**
2 Bedroom, 2 washroom.
Asking price $474,000.
Avail. May 01, 2011
Call: 416.315.9397

**CONDO. FOR SALE**

**WELLESLEY & JARVIS DOWNTOWN**
Exceptional view.
Fantastic amenities.
Walking distance to Toronto, Ryerson Universities.
Asking only $304,900.

**CONDO. FOR SALE**

**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom + den condo. for sale. 2 Full washroom. Large unit. Very close to TTC, 3 minutes to hwy 401.
Asking $234,900



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
***Cell: 613 850 9931***

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# உள்ளூராட்சி...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 20 வேட்பு மனுக்கள் தேர்தல் விதிமுறைகளுக்கு அமைய விண்ணப்பிக்கப்படவில்லை என்பதற்காக நிராகரிக்கப்பட்டிருந்தன. இதே காரணங்களுக்காகத்தான் நாட்டின் தென்பகுதியில் 430க்கும் மேற்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு உடனடியாகவே நீதிமன்றங்கள் தமது முடிவை வெளியிட்டிருக்கலாம். ஏனென்றால் தேர்தல் திணைக்களகத்திற்கென வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில்தான் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதனை மீறினால் அந்த வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது பொதுவான சட்டச்சிக்கலற்ற விதியாகும்.

சமாதான நீதவானினால் செய்யப்பட வேண்டிய உறுதி மொழிகள் செய்யப்படாமை, கட்சியின் பெயர்களை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதன்படி குறிப்பிடாமை, இளைஞர் யுவதிகளை வேட்பாளர்களாகப் போட்டியிருந்தால் அவர்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் அவர்கள் இருக்கிறார்களா என்பதை உறுதி செய்யாமை போன்ற காரணங்களுக்காகவே வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. எனவே, நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சாரப்படி, நீதிமன்றத்தில் செய்யப்பட்ட விண்ணப் பங்களை ஏற்று நீதிமன்றங்கள் தமது பொறுப்பில் இருந்து தவறிய நிலையிலேயே 60க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப் பட்டிருந்தன. இதற்கான ஆலோசனை சட்டமா அதிபரினால் நீதிமன்றங்களுக்கு விசேடமாக வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் சுதந்திரமாகச் செயற்பட வேண்டிய தேர்தல் ஆணையாளர் நீதிமன்றங்களின் தலையீட்டினால் இந்த உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியாமல் நிர்ப்பந்திக்கப்பட்டதாக ஜனநாயகவாதிகள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அறுபதுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதன் மூலம் அந்த உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் முன்கூட்டியே தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தத னால், அதற்கென அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிரசார பணிகளுக்காகப் பணம் செலவழித்ததன் மூலம் பெரும் நட்டத்திற்கு ஆளாக நேரிட்டது. இது அவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமை-களைப் பாதித்த முக்கிய விடயம் என்றும் ஜனநாயகவாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.



மறுபக்கத்தில் வேட்பு மனு தாக்கல் செய்ததில் இருந்து வாக்கெடுப்பு நடைபெற்ற தினம் வரையிலான காலப்பகுதியில் 450க்கும் மேற்பட்ட தேர்தல் முறைகேடுகள், தேர்தல் வன்முறைகள் என்பன தொடர்பாக தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தேர்தல் வன்முறைகள் காரணமாக வேட்பாளர்கள் உட்பட 140க்கும் மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதாகப் பொலிஸ் மா அதிபர் அறிவித்திருந்தார். தேர்தல் பிரசார காலத்தில் 3 பேரும், வாக்களிப்பு தினத்தன்று 3 பேருமாக 6 பேர் இந்தத் தேர்தலின்போது கொல்லப்பட்டிருந்தார்கள். தேர்தல் தினத்தன்று ஏற்பட்ட கைகலப்பு காரணமாக பொலிஸ் வாகனம் தீக்கிரையாகியது. கைக்குண்டுத் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. இந்த வன்முறைகள், ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலிலும் பார்க்க அதிகம் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதேவேளை, தேர்தல் வன்முறைகளில் ஒரே கட்சி அல்லது ஒரே கூட்டமைப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளுக்காகத் தமக்குள் மோதிக் கொண்டார்கள் என்பதை விசேடமாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார். அத்துடன் குறிப்பாக அரச சார்பான அரசியல் கட்சிகளும், அரசியல் குழுக்களும் அரச கட்டுப்பாட்டு ஊடகங்களையும், அரச சொத்துக்களையும் தாராளமாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி யிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நடவடிக்கைகள் வாக்களிப்பு நடை-பெற்ற முந்திய தினத்தன்றும், வாக்களிப்பு நடைபெற்ற தினத்தன்றும் இடம்பெற்றிருந் ததையும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க விசேடமாக சுட்டிக்காட்டியிருந்தார்.

தேர்தல் வன்முறைகளுக்கு அப்பால், தேர்தல் சட்ட விதிகளுக்கு விரோமாக முறைகேடாக நடந்து கொண்ட அரச சார்பான அரசியல்வாதிகள் அரச சார்பான கட்சிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அல்லது அவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தேர்தல் ஆணையாளர் தவறிவிட்டார் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தியிருந்தார்கள்.

இதேபோல பொலிசாரும் தேர்தல் முறைகேடுகளைக் கண்டும் காணாதது போல நடந்து கொண்ட சம்பவங்கள் தேர்தல் தினத்திற்கு முதல்நாளன்று வவுனியா மற்றும் வன்னிப்பிரதேசங்களில் இடம்பெற்றிருந்தன. வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு பிரதேச சபை பகுதியில் கிராமங்களுக்குச் சென்ற அமைச்சர் ரிசாட் பதியுதீனின் ஆதரவாளர்கள், நிவாரண உணவுப் பொருட்களை பகிரங்கமாகப் பொது மக்களுக்கு வழங்கி, தேர்தலில் அரசாங்கக் கூட்டமைப்பின் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேசத்திலும் நடைபெற்ற தேர்தல் முறைகேடுகள் குறித்து பலரும் முறையிட்டிருந்த போதிலும், பொலிசார் அவற்றைக் கண்டுகொள்ளவே இல்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இலங்கையின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்தது.

இந்தத் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தமட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் புளொட் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன இணைந்து போட்டியிட்டதும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த ஒன்றிணைவானது, இந்தத் தேர்தலில் ஆரம்பித்து அடுத்தடுத்த தேர்தல்களில் மட்டும் தொடரக் கூடாது என்பதும், இந்த ஒன்றிணைவு தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வலுப்படுத்தவும், அரசியல் ரீதியாக உறுதியான ஒரு நிலையில் இருந்து அரசாங்கத்துடன் இனப்பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தித் தீர்வு காண்பதற்குப் பயன்பட வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் இந்த எதிர்பார்ப்பை நான்கு கட்சிகளில் இருந்து (இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், ஈபிஆர்எல்எவ் (சுரேஷ் அணி), டெலோ ஆகியன), ஆறு கட்சிகளின் கூட்டிணைவாக மாறியுள்ள இப்போதைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எந்த அளவிற்கு நிறைவேற்றப் போகின்றன என்பது தெரியவில்லை.

# ஒத்துப்போ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவர்கள் பதவியிறங்கினால் ஜனநாயக மும் மறுமலர்ச்சியும் தோன்றி விடுமா? அப்படியாயின் இந்த ஜனநாயகத்தில் வேறுபாடு ஏன்?



மக்கள் சக்தியானது ரியுனிசியாவிலும் எகிப்திலும் முழுமையாக வெளிப்பட்டது. மக்களுக்கு தங்கள் சக்தி மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது. லிபியாவிலும் பாரெயினிலும், யேமனிலும் மக்கள் சக்தியும் நம்பிக்கையும் ஒடுக்கப்பட்டுள்ளது. நேட்டோ படைகள் கடாபியின் இலக்குகளை தாக்குவதாக கூறி மக்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். பல நூறு மக்கள் இறந்துள்ளனர். தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர். ஊடகங்கள் இவர்கள் கைகளில் இருப்பதால் மக்கள் மீதான தாக்குதல்கள் மறைக்கப்பட்டுள்ளன. கடாபியின் பெயரில் நடைபெறும் இச் சம்பவங்கள் மக்கள் போராளிகளுக்கு எதிராகவும் கடாபியுடன் இணையும் சந்தர்ப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது.

கடாபி தனது மக்களையே கரப்பான் பூச்சிகள், நாய்கள் எனக் கூறுவதும் அவர்களை கூண்டில் அடைபட்ட மிருகங்கள் போல் நடத்துவதும் கண்டிக்கப்பட வேண்டியது. கடந்த 41 வருடங்களாக ஜனநாயகமற்ற முறையில் நடைபெறும் ஆட்சிக்கு கடாபி முற்றுப் புள்ளி வைத்து வெளியேறவேண்டும். புதிய அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். லிபிய மக்கள் தமது சக்தியால் இந்த மாற்றத்தை கொண்டு வந்தாலும் இதனை தமது கைக்குள் கொண்டு வந்து தொடர் இரத்த களரியை மேற்கத்திய நாடுகளே ஏற்படுத்தும். மேற்கத்திய நாடுகளுக்கும் அவர்களது திட்டங்களுக்கும் ஒத்து ஊதாதவர்கள் அவர்களுக்கு எதிரிகளே. கடந்த காலங்களில் எதிரிகளாக கூறப்பட்ட கியூபா, வெனிசுலா, மத்திய அமெரிக்க நாடுகளால் ஒரு போதும் அமெரிக்காவுக்கோ ஐரோப்பிய நாடுகளுக்கோ அபாயம் ஏற்படவில்லை. மேற்கத்திய நாடுகள் எப்பொழுதும் ஒரு நிழல் எதிரியை உருவாக்கிக் கொள்வார்கள். அதனால் தான் அவர்கள் தொடர்ந்து தமது இருத்தலைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Sell your home FASTER and More MONEY with
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
When you list your home with MIKE you receive these Guarantees
Your home advertised 24 hours a day until is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it*
RE/MAX
SOLD
Highway 48 & N. Stouffville
$329,900
Town house 2 Storey , Bed rooms 3 Washrooms3,
Lawrence/Rouge Hills
$345,000
Detached 2 storey, Bed-rooms 3, Washrooms 2,
14th Ave/Box Grove By-pass
$383,000
Town house 2 Story, Bed-rooms 3, Wasroom 3,
Mccowan/Denison
$3999,900
Detached 2 Story, Bed rooms 4+1 Washromss 3,
Middlefield/Denison
$399,900
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Bur Oak & 9th Line
$429,900
Detached 2 Storey , Bed rooms 4 Washrooms 3,
Markham/DenisonDr.Roa
$429,000
Link 2 storey, Bedrooms 3, Washrooms 3,
Markham Rd/14th Ave
$429,900
Link 2 Story, Bedrooms 3, Wasroom 3,
Stouffville Rd & 9th Line
$439,900
Detached 2 Story, Bed rooms 3 Washromss 3,
Mccowan/16th Ave
$488,000
Link 2 Story, Bed rooms 4 Washrooms 4
Kennedy/Bur Oak Ave
$519,000
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3
9th Line And 14th Ave
$525,000
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3,
Middlefield/Highglen
$529,800
Link 2 Story, Bed rooms 3+2, Washrooms 4,
Markham Rd / Highglen
$534,800
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4,
Markham/Golden
$549,000
Link 2 Story, Bedrooms 4+3 Washrooms 4,
Mccowan/14th Ave
$549,900
Detached 2 Story, Bedrooms 5+1 Washrooms 4,
14th Avenue/9th Line
$599,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3,
Castlemore/Afred Paterson
$628,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 4,
14th Ave/9th Line
$659,000
Detached 2 Story, Bedrooms 5 Washrooms 4
14th/9th
$729,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4,
Morningside / Passmore-
$359,000
Semi Detached 2 Story Bed rooms 3, Washrooms 2,
Salem / Taunton
$379,000
Detached 2 Storey, Bed rooms 4, Washrooms 3,
Hwy 89/ West Of Hwy 27
$319,000
Sale Of Business Without Property Gas Stations
SHOPPING CENTRE
Shopping Centre For Sale 4.5M (CIBC,Studio,Nail spa,State farm,Ministry,Coffea time,...............)
TIM HORTON
For Sale Tim Horton' Free Standing With Drive Through Single Tenant, 1.9M Toronto
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# உங்கள் பணமும் நிதிச்சந்தையும்



கனேடிய அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் கவிழ்ந்தது. அரசு கவிழ்ந்தது என்பது பல நாடுகளில் மிகப் பெரிய செய்தி. இந்த நாட்டிலோ அது ஒரு பெரிய செய்தியே அல்ல. பணச்சந்தையில் பல நாடுகளில் அரசு கவிழும் பொழுது பல ஏற்ற இறக்கங்கள் நிகழும், இங்கே ஒன்றும் நடக்கவில்லை.

கனேடிய டொலர் உறுதியாக இருந்தது. சற்றும் சரியவில்லை. மாறாக மறுநாளிலிருந்து வலுப்பெறத் துவங்கியது. துல்லியமாகச் சொல்லவேண்டும் என்றால் அரசு கவிழ்ந்த போது ஒரு கனேடிய டொலரின் விலை வங்கிகளுக்கு இடையிலான அந்நியச் செலவாணி எனப்படும் Foreign exchange சந்தையில் அமெரிக்க டொலரில் 1.0194 ஆக இருந்தது. மறுநாள் பார்த்தால் ஒரு கனேடிய டொலருக்கு இன்னும் சற்றே அதிகமாக அமெரிக்க டொலர்கள் கிடைத்தன. அதாவது மலிவானது அமெரிக்க டொலர். பங்குச் சந்தையோ அரசு கவிழ்ந்த தினம் சற்றே உயர்ந்தது.

டுவிட்டரில் பார்த்த ஒரு செய்தி. "கனடிய அரசு கவிழ்ந்து விட்டதா? புரியாததைப் பற்றி அமெரிக்கர்கள் கவலைப்படுவதில்லை." உண்மை என்னவென்றால் அமெரிக்கர்கள் மட்டுமல்ல, கனேடிய குடிமக்களுமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

ஆனால் காரணங்கள் மாறுபட்டவை. திடீரென்று தேர்தல் அறிவிக்கப்பட்டதால், கனேடிய மத்திய வங்கியான பாங்க் ஒவ் கனடா வட்டி வீதங்களைக் கூட்டாது என்று நம்பப்படுகின்றது. பாங்க் ஒப் கனடா நடுநிலை வகிக்கும் ஒரு வங்கி அரசியல் சார்பற்றது. கடந்த இருபதாண்டுகளில் தேர்தல் அறிவிக்கப்பட்டபொழுது எல்லாம் முழுமூச்சாக புதிய பொருளாதார நடவடிக்கைகள் குறிப்பாக வட்டி வீதங்களில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எடுக்காமல் இருந்து வந்துள்ளது. அந்நிலை இப்போதும் தொடரும் என்று நம்பப்படுகின்றது.

ஏப்ரலில் வட்டி வீதம் கூடாது என்று நம்பலாம். பிறகு எப்போது கூடும்? யாருக்குத் தெரியும். இப்போதைய ஆருடங்கள் ஜுலை வரை என்று சொல்கின்றன. சிலபேர் ஜுலைக்குப் பிறகும் இந்த ஆண்டில் இருக்காது என்கிறார்கள். வட்டி கூடவில்லை என்பதற்காக கடன் வாங்குவதை கூட்டாதீர்கள், வட்டி கொடுப்பதை எப்படிக் குறைத்துக் கொள்ளலாம் என்று வேண்டுமானால் ஆராயுங்கள். இக்கட்டுரை ஆசிரியரின் இணையத்தளங்களின் அத்தகைய வழிமுறைகளைக் காணலாம்.

**இணையத்தளமுகவரி:** ***www.dreamsandmoney.com or www.perrii.com.,*** நேரில் பேச விரும்பினால் **தொலைபேசி எண்: *416.473.6100***

அரசியல் பேசுவது கட்டுரையின் நோக்கமல்ல. அரசியல் தனிநபரின் நிதியத்தை எவ்வாறு பாதிக்கின்றது என்று ஆராய்வதே நோக்கம். அவ்வாறு பார்க்கும் போது ஆரோக்கியமான கனேடிய ஜனநாயக அரசியல் தனிநபர் நிதியத்தை பாதிக்கவில்லை என்பதே உண்மை.

மார்ச் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள புதிய வீட்டுக்கடன் விதிமுறைகளினால் கடன் சந்தை சற்றே இறுக்கம் அடைந்துள்ளது. குறிப்பாக மொத்தமாக கடனைத் திருப்பிக் கட்ட எடுத்துக் கொள்ளும் காலம் 35 வருடங்களிலிருந்து 30 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. சில வங்கிகள் அதை இன்னும் 25 வருடங்களாகக் குறைத்துக் கொள்ள வாடிக்கையாளர் சம்மதித்தால் வட்டியைச் சற்றே குறைத்துக் கொள்ளவதாக அறிவித்துள்ளனர்.

புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால் அதை வீட்டு நடப்புக்குச் சாதகமாக மாற்றலாம். இனி உங்கள் சாமர்த்தியம்.



**பெரி. முத்துராமன்**

# வீடு வாங்கும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

மட்டுமல்லாமல் வேறு சமுதாயங்களினாலும் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.



உதாரணமாக, தன்மூலம் வீடு வாங்குபவர்களுக்கு $5000 தருவேன் அல்லது $1000 திருப்பித் தருவேன் என கூறும் பிரதிநிதிகள் சிலர். இது சட்டப்படி தவறானது. இவ்வாறான கவலைக்குரிய விளம்பரங்களை காணக்கூடியதாக உள்ளது. இதில் பலர் தமது கைத்தொலைபேசி (Cell Phone) இலக்கத்தை மட்டும் போட்டு விளம்பரம் செய்கிறார்கள். ஒரு வீட்டுப்பிரதிநிதி தான் வேலைசெய்யும் நிறுவனத்தின் பெயர் அத்துடன் அந்நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை நிச்சயம் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட Promotion இல் சரியான தகவல்கள் இல்லாவிட்டால், நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

RECO நிறுவனம் Real Estate Industry இன் சட்டதிட்டங்களை நிறைவேற்ற எத்தனிப்பதுடன் குறிப்பிட்டளவு கோட்பாடுகளை (Standard) ஐ உறுதி செய்வதுடன் நுகர்வோரை பாதுகாக்கின்றது. அத்துடன் ஒரு வீட்டுப்பிரதிநிதி குறிப்பிட்டளவு தகைமைகளை எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனமாக உள்ளது. சாதாரண நுகர்வோர்களால் ஆதன பிரதிநிதிகளுக்கு எதிராக கொடுக்கப்படும் வழக்குகள், குற்றச்சாட்டுகளை மிகவும் கவனமாக மக்கள் சார்பாக கண்காணிக்கின்றார்கள்.

அத்துடன் பல வீட்டுப்பிரதிநிதிகள் தமது வீடு விற்பதற்கான அனுமதிப்பத்திரத்தினை (Licence) இழந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

**எனவே தவறு நடப்பதற்கு நாங்கள் உடந்தையாக இருப்பதும் தவறே. தப்புக்கள் தொடர்வதற்கு காரணம் தப்பு செய்வதற்கு உடந்தையாக இருப்பது ஆகும்.**

## ஆதன விலை எட்டாத உயரத்திலா?

நடக்கும் என்பார்கள் நடக்காது. நடக்காது என்பார்கள் நடந்து விடும். இப்படியெல்லாம் நடக்குமா என எதிர்பார்த்த பல விடயங்கள் கடந்த சிலவருடங்களில் தமிழரின், குறிப்பாக இலங்கைத் தமிழரின் வாழ்வில் நடந்து முடிந்து விட்டது. நாம் உயிருடன் இருக்கும் காலம் வரை 2009 மே 19 மறக்கமுடியாத நாள். தமிழர் சரித்திரத்தில் என்றும் நினைவுகொள்ள வேண்டிய நாள். இதனைத் தொடர்ந்து பல விடயங்கள். இப்பொழுது நாடு கடந்த தமிழீழ அரசு. அதற்கு எதிராக சிலரும். எந்தப் புத்தில் எந்தப் பாம்பு என்பது ஆண்டவனிற்கே வெளிச்சம்.

கனடாவில் குறிப்பாக ரொறொன்ரோ வில் ஆதனத்தின் விலை மாற்றத்தில் எதிர்பாராத விதமாக பல திருப்பங்கள். கடந்த பல வருடங்களாக விலை 4% தொடக்கம் 5% வரை அதிகரித்து வருகின்றது. கனேடிய பொருளாதாரம், இறுக்கமாகவும், மந்தமாகவும் இருக்கும் சந்தர்ப்பங்களில், கனேடிய மத்தியவங்கி தகுந்த ஊக்குவிப்புக் களையும், அத்துடன் வட்டி வீதத்தையும் குறைத்து, கடனைத் திருப்பிக்கொடுக்கும் காலத்தை (amortization period) அதிகரித்து, ஆதனச்சந்தைக்கு முண்டு கொடுத்து வருகின்றது. இதுவே ஒரு நியாயமான பொருளாதார வல்லுனரின் கொள்கை.

இதற்கு உதாரணமாக 2008ஆம் ஆண்டின் மத்தியில் வீட்டின் விற்பனையில் எதிர்பாராத மந்த நிலை ஏற்பட்டது. புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்களும் நெருக்கடிக் குள் தள்ளப்பட்டன. சில ஆதன விற்பனை நிலையங்கள் மூடவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இந்நிலை 2009ஆம் ஆண்டின் முற்பகுதி வரை தொடர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் கனேடிய மத்தியவங்கி வட்டி வீதத்தையும் குறைத்தது. ஊக்குவிப்பு களையும் அதிகரித்தது. பிற்பாடு, விலையில் மெல்ல அதிகரிப்பு ஏற்படத்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

# இலவசங்களும் இளிச்சவாயர்களும்

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2011



தேர்தல் வந்தாலே குதூகலம்தான். மக்கள் பொழுதைப் போக்க ஏராளமான கேளிக்கைகள். இதில் நகைச்சுவை இல்லாமல் இருந்தால் எப்படி? நகைச்சுவைகள் இருக்கத்தான் செய்கிறது, தமிழக அரசியல்வாதிகள் வேட்புமனுத் தாக்கலில் சமர்பித்திருக்கும் சொத்துக்கணக்கில் ஏராளம்.

பாவம், தமிழக முதல்வர் கலைஞருக்கும் துணை முதல்வர் ஸ்டாலினுக்கும் சொந்தமாக கார் இல்லை. ஸ்டாலினின் மொத்த சொத்தே இரண்டு கோடிகளைத் தாண்டவில்லை. தயாளு அம்மாளுக்கு மட்டும் 16 லட்சத்தில் ஒரு கார் இருக்கிறது. ராஜாத்தி அம்மாள் இன்னும் பாவம், மகள் கனிமொழியிடம் ஒரு கோடி கடன் வாங்கியிருக்கிறார். வேறு ஏது வருமானம்? கலைஞரின் கையிருப்புத் தொகை வெறும் 25,000தான்.

கலைஞரின் அமைச்சர்கள்... அமைச்சர் பொன்முடி சொத்து மதிப்பு 8.22 கோடி, தண்டராம்பட்டில் சாதாரண பஸ் நடத்துனராக இருந்து இன்று 7.8. கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வைத்துள்ள உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலுவிடம் கையிருப்பு தொகை 1.76 லட்சம், சுகாதாரத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சொத்து மதிப்பு 2.01 கோடி, அமைச்சர் த.மோ தாமோதரன் சொத்து 5.01 கோடி, அரசு கொறடா சக்கரபாணி 4.52 கோடி' அரவக்குறிச்சியில் போட்டியிடும் கே.சி.பழனிச்சாமி சொத்து மதிப்பு வெறும் 67.65 கோடி, தாம்பரம் தொகுதி தி.மு.க. வேட்பாளர் எஸ்.ஆர்.ராஜா 12.43 கோடி. திருவள்ளுவர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் சிவாஜி சொத்து மதிப்பு 3.67 கோடி.

இதில் உணவு அமைச்சர் வேலுவின் சொத்து மட்டுமே இந்த ஐந்து ஆண்டுகளில் 700 மடங்கு உயர்ந்திருக்கிறது. அவருக்கு சொந்தமாக கார் இல்லை என்பதுதான் வருத்தமான விஷயம். 12.43 கோடிகளுக்குச் சொந்தக்கார-ரான தாம்பரம் தி.மு.க. வேட்பாளர் எஸ்.ஆர்.ராஜாவிடம் கார் இல்லை, ஒரே ஒரு 'புல்லட்' மட்டுமே சொந்தம்.

துன்பம் வரும்போது மக்களை சிரிக்க வைப்பதில் வல்லவர் எ.வ.வேலு. "என் வருமானம் பெருகியதே என்னுடைய விவசாயத்தின் மூலமாகத்தான்'' என்கிறார். இந்தியா முழுவதும் விவசாயிகள் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள், தற்கொலை செய்து கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் கந்து வட்டிக்கு பணம் வாங்கி விவசாயத்தில் ஈடுபட்டால்கூட விவசாயக் கூலிக்கு ஆட்கள் கிடைப்பது கடினம். இந்த நிலையில்தான் வேலு விவசாயத்தின் மூலமாக தன் வருமானத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதாவும் பாவம் அவருடை மொத்த சொத்து மதிப்பே 51 கோடிகள்தான்.

தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. தி.மு.க. அறிக்கையைப் பார்க்கும்போது, சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்போம் என்கிற திமுகவின் சூளுரை சரிந்து போயிருப்பது தெரிகிறது. சாதனை புரிந்திருந்தால் எதற்கு இத்தனை இலவசங்கள் அல்லது இலவசங்கள்தான் இந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்




முழுநேர கிண்டர்கார்ட்டன்

மேலும் பல ஒன்ராறியோ பள்ளிகளில் இந்த இலையுதிர்காலத்தில் வருகிறது



செப்டம்பரில் ஒன்ராறியோ முழுவதும் கிட்டத்தட்ட 800 பள்ளிகள் முழுநேர கிண்டர்கார்ட்டன் வகுப்புகளை வழங்கத் தொடங்கும். வகுப்பில் ஒரு ஆசிரியரும் ஒரு இளங்குழந்தைப்பருவக் கல்வியாளரும் இணைந்து செயல்படுவார்கள், கற்றலை விளையாட்டுடன் இணைக்கும் புதிய பாடத்திட்டம் ஒன்று இருக்கும். குழந்தைகள் மொழி, கணிதம் ஆகியவை உள்பட எல்லா விஷயங்களிலும் வளர்ச்சி பெறவும் அவர்கள் கிரேடு 1 மற்றும் அதற்குப் பின்வருவனவற்றுக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவும் இது உதவும். பெற்றோர்களின் வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு, பள்ளி நேரத்துக்கு முன்னர் மற்றும் பின்னர் செயல்படும் திட்டங்களையும் தகுந்த கட்டணத்தில் பள்ளிகள் விருப்பத்தெரிவாக வழங்கும். இந்த இலையுதிர் காலத்தில் முழுநேர கிண்டர்கார்ட்டன் வகுப்புகளை வழங்கும் பள்ளிகள் எவை எனப் பார்ப்பதற்காகவும், உங்கள் குழந்தையை சேர்ப்பது எப்படி எனத் தெரிந்துகொள்ளவதற்காகவும் எங்கள் வலைத்தளத்தைப் பார்க்கவும்.

ontario.ca/kindergarten

ஒன்ராறியோ மாகாண அரசின் நிதி அனுசரணையுடன்

Ontario

# இலவசங்களும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசின் சாதனைகளா? புரியவில்லை. மக்களை இலவச போதையில் தள்ளிவிட்டு தொடர்ந்து ஆளுபவர்கள் கொள்ளை யடிப்பதற்கான வழிகள்தான் இந்த இலவசங்கள். "கடைசி ஏழை இருக்கும்வரை அரசுப் பணத்திலிருந்து இலவசங்கள் வழங்குவேன்" என்று கருணையோடு கலைஞர் சொல்லியிருக்கிறார்.

வாக்காளர்களுக்குக் காசு கொடுப்பதைப் போல, தேர்தல் கமிஷனால் தடை போட முடியாத இலவச திட்டங்களை அறிக்கை-ளாக கொடுத்திருக்கிறது, ஆளும் கட்சி. எனவே, அதே பாணியை அ.தி.மு.க.வும் கடைபிடிக்க வேண்டிய கட்டாயம்.

இலவசம் என்பது ஒரு மோசமான முன்னுதாரணம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் பல மோசமான முன்னுதாரணங் களுக்கு உதாரண புருஷரே இன்றைய முதல்வர் கருணாநிதிதான்.

கருணாநிதியின் மோசமான முன்னுதாரணங் கள் என்று ஒரு பெரிய புத்தகமே எழுதலாம். இந்த இலவசங்களினால் மக்களின் இன்றைய தேவைகள் பூர்த்தியாகும் நாளைய சந்ததிகளின் நிலை என்னவாகும் என்கிற யோசனை இல்லை. அதைப் பற்றி கலைஞர் ஏன் யோசிக்க வேண்டும்? தன் சந்ததிகளின் வளங்களுக்கான வழிகள்தான் இலவசங்கள் மூலமாக கிடைத்து விடுகிறேதே.

உதாரணமாக ஒன்று... தமிழக அரசின் விளம்பரங்கள் சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகளில் வருகிறது. இந்த



விளம்பரங்கள் மூன்று நான்கு நிமிடங்கள் வரை போகிறது. இவையெல்லாம் சமூக நலன் கருதி வரும் இலவச விளம்பரங்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், குரோம்பேட்டையிலுள்ள மக்கள் விழிப்புணர்வு சங்கத்தின் தலைவர் சந்தானம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு தகவலை அரசு விளம்பரத்துறை யிலிருந்து பெற்றிருக்கிறார். அவர் கேட்ட கேள்விகளும் கிடைத்த பதில்களும்:




கேள்வி: 108 ஆம்புலன்ஸ் சேவை சம்பந்தமான விளம்பரங்கள் சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. இது இலவச விளம்பரமா அல்லது கட்டண விளம்பரமா? கட்டணமென்றால் ஒரு முறை விளம்பரத்துக்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?

பதில்: 108 ஆம்புலன்ஸ் சம்பந்தமான விளம்பரம் இலவச விளம்பரம் அல்ல, கட்டண விளம்பரம்தான். ஒரு முறை பத்து விநாடிகள் விளம்பரத்துக்கு சன் டிவியில் ரூ.23,474ம், கலைஞர் டிவியில் ரூ.9,700ம் செலுத்த வேண்டும்.

சன் தொலைக்காட்சியின் உரிமையாளர்கள் - முதல்வரின் பேரன், அவர் மனைவி மற்றும் அவரது குடும்பத்து உறுப்பினர்கள். கலைஞர் தொலைக்காட்சியின் பங்குதாரர்கள் - முதல்வரின் மகளும் மனைவியும். அரசாங்க விளம்பரங்கள் எந்த அடிப்படையில் இந்த தொலைக்காட்சிகளுக்கு கொடுக்கப்படு கின்றன? இதில் விநோதம், அரசு தொலைக்காட்சியான பொதிகையில் இத்தகைய அரசு விளம்பரங்கள் வெளியாவதே இல்லை! அங்கு காசு கொடுத்தால் அது முதல்வர் குடும்பத்திற்கு எப்படி போகும்?

இப்போது, கலைஞர் வீட்டில் எந்த கொள்ளுப்பேரனுக்கு எந்த தொழிலும் இல்லையோ, அவருக்கு இப்போதே ஒரு பெரிய மிக்ஸி கிரைண்டர் நிறுவனத்தை 'அன்பாக' பேசி வாங்கிக் கொடுத்துவிடலாம். அல்லது அந்த நிறுவனத்திடமிருந்து, தமிழகம் முழுவதற்குமான விற்பனை உரிமையைப் பெற்றுக் கொடுக்கலாம். இலவச டிவி கொடுத்து தன் குடும்ப கேபிள் வினியோக தொழிலை பெருக்கிக்கொண்டு, அரசு கேபிளை குழி தோண்டிப் புதைத்த பிதாமகர் அல்லவா நம் தமிழனத் தலைவர்.

இந்த இலவசங்கள் என்ன திருக்குவளை ராஜ வம்சத்து மானியமா? இது தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து, தங்கள் சொந்த நலன்களுக்காக ஆளுங்கட்சி நடத்துகிற பகிரங்க பகற் கொள்ளை. இந்த இலவசங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறதா அல்லது உலக வங்கி கடனுதவி அளிக்கிறதா? கஜானா காலியா னால் தொழில் வளர்ச்சியும் கல்வி மேன்மையும் சுகாதார சீர்திருத்தமும் எப்படி வரும் என்று சில படித்த பொருளாதார முட்டாள்கள் கூவிக்கொண்டே இருக்கிறார்கள். தொழில், கல்வி, சுகாதாரம் என்பதையெல்லாம் இனியும் அரசுதான் செய்ய வேண்டும் என்று நினைக்கும் அவர்களை கம்யூனிச கைக்கூலிகள், வளர்ச்சியை விரும்பாத சமூக விரோத தீவிரவாத மாவோயிஸ்டுகள் என்று பழி சுமத்திவிட்டால் போகிறது.

குஜராத் அரசு சமீபத்தில் சிறந்த அரசுக்கான விருதை, சர்வதேச அரசாங்க விருது வழங்கும் கவுன்சிலிடமிருந்து பெற்றுள்ளது. இந்த கவுன்சில் குஜராத் அரசிற்கு உலகத்திலேயே இரண்டாவது சிறந்த அரசு என்ற விருதை வழங்கி கவுரவித்துள்ளது. இதற்கு ஒரு இந்தியராக சந்தோசப்படும் அதே வேளையில் தமிழர்களாக நாம் வெட்கப்பட வேண்டியுள்ளது.

குஜராத்தில் இலவசங்கள் கிடையாது, ஓட்டுக்கு பணம் கிடையாது, டாஸ்மாக் கிடையாது (மது விலக்கு அமல்படுத்தப்பட்ட மாநிலம்), கரண்ட் கட் கிடையாது, இத்தனைக்கும் மேலாக மத்திய அரசில் அங்கமோ, பங்கோ கிடையாது. இதே நிலைதான் தற்போதைய பீகார் அரசுக்கும்...

பத்து வருடத்திற்கு முன்பு குஜராத் அரசு உலக வங்கியில் வாங்கிய கடன் தொகை ரூ.50,000 கோடிகள். (ஆ.ராசா மதிப்பை விட கொஞ்சம் குறைவுதான்!) இன்று... அந்தக் கடனை திருப்பி செலுத்திவிட்டது. இப்போது அந்த அரசின் கையிருப்புத் தொகை 1 லட்சம் கோடி. மாநிலத்தின் அத்தனை பெண்களுக்கும் படிப்பறிவு கொடுக்கிறது, இந்தியாவின் 15 சதவிகிதம் ஏற்றுமதி குஜராத்திலிருந்து செல்கிறது, இந்திய பங்குச்சந்தையின் 30 சதவிகிதம் பங்குகள் குஜராத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 20 வருடங்களில் குஜராத் ஒரு குட்டி சிங்கப்பூராக மாறப்போகிறது. தமிழ்நாட்டின் நிலை? ஒன்று நிச்சயம் நடக்கும், அடுத்த 5 ஆண்டுகளில் கருணாநிதியின் குடும்பம் நிஜ சிங்கப்பூரை விலைக்கு வாங்கிவிடும்.

இது நடக்காமல் இருக்க, இப்பொழுது நடக்க இருக்கும் தேர்தல் அநியாய, அராஜக ஆட்சிக்கு தமிழ்நாட்டு தமிழர்கள் சம்மட்டி அடியாக இருக்க வேண்டும். இதில் நாம் தவறிழைத்தாலோ, அடிபணிந்தாலோ, ஏமாந்தாலோ ஒரு மிகப்பெரும் வரலாற்றுப் பிழை செய்தவர்களாகி விடுவோம். உலகம் நம்மீது காறி உமிழும்.

நல்ல வரலாறு படைப்போம்.



- சுதாங்கன் -



YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# தாயின் தாழ்வு மனப்பான்மை

ஒரு பெண்ணின் வாழ்க்கை மகள் என்பதிலிருந்து ஆரம்பித்து மருமகள், மனைவி, தாய், மாமி, அம்மம்மா அல்லது அப்பம்மா எனப் பல பாத்திரங்களாக அமைவதுடன் ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு வாழ்வியல் நிலைகளில், படிமுறைகளில், உள்ளும் புறமுமாகச் சேகரித்துக்கொண்ட அனுபவங்களின் பிரதிபலிப்பாக அமைகின்றது. இங்கு மாமி என்ற பாத்திரம் மட்டுமே எனது கவனத்துக்கு எடுக்கப்படுவதால், கூறப்படும் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு பெண்ணின் முழுமையான மனோபாவ வெளிப்பாடாகக் கருதப்படாமல் மாமி என்ற பாத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை பல பகுதிகளாக வெளிவர இருப்பதனால் எந்த ஒரு பகுதியையும் தவற விடாதீர்கள். அது மட்டுமன்றி இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இக்கட்டுரை பற்றிய உங்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க இருப்பதால் உங்கள் வினாக்களை அல்லது ஏற்கெனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் பற்றிய உங்கள் சுய பார்வையை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி உங்கள் பெயரைக் குறிப்பிடலாமா இல்லையா என்பதையும் குறிப்பிட்டு kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

**KG Master**-kgmaster@rogers.com

## ஓடும் நீர் உறைவதில்லை 21
## இரண்டாம் பாகம்

### தாயின் தாழ்வு மனப்பான்மை

மாமி ஆமியா பகுதி மூன்றின் இறுதியில் குறிப்பிட்டதற்கு அமைய இந்தப் பகுதியில் மாமியின் வடிவில் வெளிப்படுத்தப்படும் ஒரு தாயின் தாழ்வு மனப்பான்மை பற்றிப் பார்ப்போம். முதலில் மனப்பான்மை என்றால் என்ன என்பதை நாம் தெளிவாக்கிக் கொள்ளவது உதவியாக அமையும். மனப்பான்மை என்பது ஒருவரது சுயபார்வை. அதாவது ஒருவரது தன்னைப் பற்றிய சுயபார்வை. இன்னொருவகையில் கூறுவதாயின் என்னைப் பற்றிய எனது சொந்தப் பார்வை எனது மனப்பான்மையாகவும் உங்களைப்பற்றிய உங்களது சொந்தப்பார்வை உங்களது மனப்பான்மையாகவும் அமைகின்றது. இந்தச் சுய பார்வையானது எப்பொழுதும் ஒரு வடிவத்தை - விம்பத்தை வேண்டி நிற்கின்றது. பார்வை என்பதே ஒரு வடிவத்துடன் - விம்பத்துடன் தொடர்புபடுவதுதான். நமது பார்வைக்கு அது தொடர்புகொள்ளும் வடிவங்கள் அத்திவாரங்களாக அமைகின்றன. இந்த வடிவங்கள், எமது உள்வாங்கும் தரத்தைப் பொறுத்து, எமது மனதில் பதிவு செய்யப்படுகின்றன. இந்தப் பதிவுகள் நமது வாழ்வியல் நகர்வுகளைத் தீர்மானிக்கின்றன.



நமது பார்வையானது வெளிப்புற விடயங்களுடன் தொடர்புகொள்ளும் போது அவை எம்மையறியாமலேயே எம்மை ஒப்பீட்டுத் தன்மைக்கு இழுத்துச் செல்கிறது. இந்த ஒப்பீட்டுத் தன்மை எமது தெரிவுகளின் அடிப்படைகளாக அமைகின்றன. இந்தத் தெரிவுகள் எமது வாழ்க்கை நிலையைத் தீர்மானிக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பது எமது தெரிவுகளின் வெளிப்பாடே. இந்த ஒப்பீடுகளும் தெரிவுகளும் பொருள் சார்ந்ததாக அல்லது மனம் சார்ந்ததாக அமையும். எப்பொழுது எமது ஒப்பீடுகள் மனம் சார்ந்ததாக அமையுமோ அப்பொழுது அந்த மனத்திற்கு இன்னொரு மனம் அல்லது மனிதன் அவசியமாகின்றது.

அதாவது என்னைப்பற்றிய எனது மதிப்பீடு என்ன என்பதைத் தீர்மானிப்பதற்கு இன்னொருவர் அல்லது ஒன்றிக்கு மேற்பட்டவர்கள் தேவைப்படுகின்றனர். உண்மையில் இந்தத் தேவை ஒருதலைப்பட்சமான தேவை மட்டுமே. ஏனெனில் நாம் எம்மை மற்றவர்களுடன் ஒப்பிடும்போது அந்த ஒப்பீடுகளைத்தும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படாத இரகசியங்களாகவே கையாளப்படுகின்றன.

அடுத்ததாக, இந்த ஒப்பீடுகள் ஒரு மனிதனின் சுய பார்வையில் ஏற்படுத்தும் விளைவுகளைப் பார்ப்போம். எப்பொழுது ஒரு மனிதன் தன்னை மற்றவர்களுடன் ஒப்பிடும்போது தன்னை உயர்வாகப் பார்க்கின்றாரோ அப்போது அவர் உயர்ந்த மனப்பான்மை கொண்டவராகின்றார். மாறாக, மற்றவர்களுடன் ஒப்பிடும்போது தன்னைத் தாழ்வாகப் பார்ப்பாராயின் தாழ்ந்த மனப்பான்மை கொண்டவராகின்றார். எனவே ஒருவர் தன்னை மற்றவர்களுடன் ஒப்பிடும்போது அவரது சுய பார்வையின் தன்மையைப் பொறுத்து அவர் உயர்ந்த மனப்பான்மை கொண்டவரா அல்லது தாழ்வு மனப்பான்மை உடையவரா என்பது அறியப்படுகின்றது.

ஒருவர் உயர்ந்த மனப்பான்மை கொண்டவரா அல்லது தாழ்ந்த மனப்பான்மை கொண்டவரா என்பதை வெளிப்படுத்துவது அவரது நடத்தைகளும் நடவடிக்கைகளுமே. தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடுகளாக ஆதிக்கத் தன்மை, கோபம், பொறாமை, குறை கூறல், எதிர்ப்பு மனோபாவம், காழ்ப்புணர்ச்சி, போலித்தனம், புறங்கூறல் என மனிதத் தன்மைக்கு மாறான அத்தனை இயல்புகளுடன் தன்னை விட ஒரு விடயத்தை இன்னொருவரால் சரியாகவும் திறனாகவும் செய்ய முடியாது என்ற மனோபாவமுமாகும்.

இப்போது ஒரு தாய், மாமி வடிவத்தில் வெளிப்படுத்தும் தாழ்வு மனப்பான்மையைப் பார்ப்போம். ஆச்சரியப் படாதீர்கள். தன்னைவிட ஒரு விடயத்தை இன்னொருவரால் சரியாகவும் திறனாகவும் செய்ய முடியாது என்ற தாயின் மனோபாவமே அது. இது தாய்மைக்குச் சொந்தமானது. எந்த ஒரு தாயும் இதற்கு விதிவிலக்காக அமைவதில்லை. அமையவும் முடியாது. அது தான் தாய்மையின் இயல்பு. அதாவது தனது குழந்தையின் ஒட்டுமொத்த பராமரிப்பு தன்னால் மட்டுமே சரியாகவும், தரமாகவும், திறனாகவும் செய்யமுடியும் என்ற மனோபாவமாகும். உண்மையில் இந்த மனோபாவம் தாய்மையின் இயல்பாக இருப்பது இயற்கையின் புனிதமான கொடை. தாய்மை பெற்றுள்ள இந்தக் கொடையால் தான் நாம் ஒவ்வொருவரும் பிறந்தது முதல் உதவியும் ஆதரவுமற்ற நிலையில் வாழும் முதல் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் உயிர் வாழ வாய்ப்பளிக்கப்படுகின்றது. இதற்காக நாம் எல்லோருமே தாய்மைக்குத் தலை வணங்கித்தான் ஆகவேண்டும். ஆனால்... ஆனால்... ஆனால், எப்பொழுது தனது குழந்தை புதிய குடும்பம் ஒன்றின் அங்கத்துவராகின்றதோ அப்பொழுது தாயானவள் அந்தக் குழந்தை மீதான இந்த மனோபாவத்தில் இருந்து தன்னை முற்று முழுதாக விலக்கிக் கொள்ளல் வேண்டும். மாறாக இந்த மனோபாவம் தொடருமாயின் குழந்தையின் வாழ்தலுக்கு உரமாக இருந்த இந்த மனோபாவம் அதன் வாழ்க்கைக்கு உபத்திரமாக அமைந்துவிடும். எனவே தாய்மைக்கே உரித்தான இந்த உயர்ந்த மனோபாவம் அதன் எல்லையைத் தாண்டும் போது தாழ்வு மனப்பான்மையின் உச்சத்தை அடைந்துவிடுகின்றது என்பது முழுமையாக ஏற்றுக்கொள்ளபட வேண்டியதாகின்றது.

குறிப்பு: அடுத்த இதழில் "மாமி ஆமியா?" எனும் இந்த ஆய்வு எம் எல்லோரிலும் ஏற்படவேண்டிய மனோபாவ மாற்றங்களை முன்வைத்து நிறைவுக்கு வரும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



மஹராஜியின் உரைகள்

On DVD: இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221

On TV: Saturdays at 11:00 am, Rogers Cable Channel - 20, Bell Express vu Channel - 219

# முதியோரை துன்புறுத்தினால் கனடாவில் என்ன தண்டனை?

## Elder's Abuse

## கனடிய தகவல் தொடர் 145

அந்தக் கொடூரமான மனித நேயமற்ற நிகழ்வு ஸ்காபரோவில் உள்ள வீடு ஒன்றில்தான் நடந்தது.

'Finch & McCowan', அந்த வீட்டின் முன் கராஜ் ஒன்றினுள் 67 வயதான தன்னிலை உணர்வுகள் அற்ற நோயாளி யான மூதாட்டி ஒருவர் அக்கறை, கரிசனை எதுவுமில்லாத நோக்குடன் அவரது மகன் மற்றும் மருமகளினால் சில மாதங்களாக அடைக்கப்பட்டு வைத்திருக்கப்பட்டார் என்பதே அந்த கொடூரமான செய்தி.

அயலவர்களின் முறைப்பாடுகளிலிருந்து அந்த வீட்டின் முன் கராஜ் கதவு ஒரு போதும் திறக்கப்படுவதில்லையெனத் தெரிய வந்தது. கொல்லும் குளிரினுள் போதுமான வெப்பம் அந்தக் கராஜினுள் இல்லை.

அந்த மூதாட்டியால் எழுந்து பல அடி எடுத்து வைத்து நடக்கவும் முடியாது. சாப்பாடு, நீர் ஆகாரங்கள் ஒழுங்கான முறையில் இல்லை. மலம், சலம் ஒழுங்கான முறையில் ஒழுங்கான இடத்தில் போனதா என்ற கவனிப்பும் இல்லை, ஒழுங்கான படுக்கையும் இல்லை.

அந்த மூதாட்டியின் 43 வயது நிறைந்த அன்பு மகன்! 28வயது மருமகள்! 06 வயதில் ஒரு பேரப்பெண்பிள்ளை ஆகியோர் அதே வீட்டினுள் ஜாலியாக வாழ்ந்து வந்தனர்.


கடந்த பெப்ரவரி 2011. கடுமையான குளிர்காலத்தில் இந்த விடயம் பொலிசாரின் கண்களுக்குத் தெரியவந்த போது கனடா வின் சகல ஆங்கில ஊடகங்கள் யாவும் கட்டுக்கடங்காத கடுப்புடன் கரகரத்தன.

கனடாவின் முதியோர் நலன்பேணும் அமைச்சும், முதியோர் நலங்கள் நடத்தும் தொண்டர் நிறுவனங்கள் யாவும் தங்கள் மனவேதனையினை ஆங்கில தொலைக்காட்சிகளில் கொட்டி தீர்த்தன. இந்தக் கொடுமையினை வீட்டினுள் செய்த அந்த மகனும் மருமகளும் கைது செய்யப்பட்டு சுமார் பத்துநாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, கைவிலங்குடன் நீதிமன்றம் அழைத்து வந்தபோது அவர்களைப் பிணையிலும் விடுதலை செய்ய முடியாது என நீதிபதி திருப்பி அனுப்பி விட்டார். அவர்களுக்கு எதிராக பின்வரும் கிரிமினல் குற்றப்பிரிவில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதாவது தங்கள் பொறுப்பிலிருந்த ஒரு ஜீவாத்மாவுக்கு

**1. வாழ்க்கைக்கு அத்தியவசியமான விடயத்தினை செய்யத் தவறியது** ***(Failing to provide necessities of life)***

**2. உடல் பாதிப்பு ஏற்படும் அளவுக்கு உதாசீனம் செய்த கிரிமினல் குற்றம்** ***(Criminal negligence causing bodily harm)***
இந்த இரு குற்றசாட்டுகளிலும் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டால் பத்து வருடங்களுக்கு குறையாது கம்பி எண்ணுவதில் இருந்து தப்பமுடியாது என சட்டப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடா மத்திய அரசின் 'முதியோர் நல அமைச்சர்' திரு. யூலியன் பான்ரினோ. ***(Mr. Julian Fantino, Ministe of state for seniors)*** அவர் யார் என்பது கனேடிய சமூகத்தில் பலருக்குத் தெரியும். முன்னர் லண்டன் நகரம் ரொறொன்ரோ நகரம், யோர்க் பிராந்தியம், இறுதியாக ஒன்ராரியோ மாகாணம் ஆகியவற்றின் பொலீஸ் அதிபராகவிருந்து தமது பணியினை திறமையாக செய்தவர். தற்போது அரசியலில் பிரவேசித்து கனேடிய மத்திய அரசின் முதியோர் நல அமைச்சராகப் பதவி வகிப்பவர்.




இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தில் முதியோரை கொடுமைப்படுத்துபவர்களுக்கு எதிராக பலமான சட்டங்கள் கனடாவில் இருப்பது மட்டும் போதாது. அதனை பயன்படுத்தி இத்தகைய மனிதநேயமற்ற கொடுமையாளர்களுக்கு பாரிய தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற தமது கோபத்தினை தொலைக்காட்சி பேட்டிகளில் கொட்டி தீர்த்தார். இம்முதியோருக்காக அரசு வழங்கும் உதவி பண தொகையினையும் இழக்கக் கூடாது என்பதற்காகவே அவர்களின் பிள்ளைகள் அவர்களை முதியோர் இல்லங்களிலும் விடுவதில்லை என தொலைக்காட்சிகளில் பலரும் தெரிவித்திருந்தனர்.

**சரி இது இருக்கட்டும். பின்வரும் எந்த வழிகளிலாதல் முதியோரை கனடாவில் துன்புறுத்தினால் அல்லது கொடுமைப்படுத்தினால் அது பாரிய குற்றமாக கருதப்படும். அவற்றினை பின்வருமாறு முதியோர் சட்டங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.**

**1. உடல் ரீதியாக துன்புறுத்துதல்** *(Physical Abuse)*

முதியவர்களுக்கு அடித்தல், தாக்குதல் தள்ளி விழுத்துதல், கன்னத்தில் அறைதல் உட்பட ஒரு தனி அறையினுள் படுக்கையில், கதிரையில் 'எழும்பாமல் இரு' என அதட்டி, மிரட்டி வைத்திருந்தது என்பது தெரிய வந்து அது நிரூபிக்கப்படும் குற்றச்சாட்டாக இருந்தால் அந்த நிலைமையினை உருவாக்கியவர்களுக்கு கைவிலங்கு போட்டு அழைத்துச் செல்லப் பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவது தப்பாமல் கனடாவில் நடக்கும். அது சந்தேகமில்லை.

இதேபோல இஷ்டமில்லாத பாலியல் வன்முறைக்கு (Unwanted sexual abuse) முதியோர் துன்புறுத்தப்பட்டாலும் அது கிரிமினல் குற்றமாக கருதப்படும்.

**2. நிதியியல் ரீதியாக முதியோரை துன்புறுத்துல்** (Financial Abuse)

**நிதியியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உதாரணமாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.**

அ. முதியோரின் பணம், காசோலைகள், உடமைகளை திருடுவது.

ஆ. முதியோரின் சொத்துகள், உடமைக-ளை விற்பனை செய்யுமாறு துன்புறுத்துவது.

இ. சட்டரீதியாக முதியோர் தங்களுக்கு வழங்கிய அதிகாரத்தினை (Misusing a Power of attorney) தவறாகப் பயன்படுத்தி மோசடிகள் செய்வது
போன்றவை நிரூபிக்கப்படும் போதும் துன்புறுத்தியவர் தப்ப முடியாது.

**3. உளவியல் ரீதியாக துன்புறுத்துதல்** *(Psychological & Emotional Abuse)*

முதியோரை வார்த்தைகளினாலும் செயல்பாடுகளினாலும் வேதனைப்படுத்து வது, அவமானப்படுத்துவது தொலைபேசி யில் மிரட்டுவது, பயப்படுத்துவது, உதாசீனப்படுத்தி சிறுபிள்ளைகள் போல நடத்துவது போன்ற விசாரணைகளில் சில சந்தர்ப்பங்களில் குற்றமாக கருதப்படுகின்றது.

**4. முதியோரை கவனிக்காது உதாசீனம் பண்ணுதல்**
*(Elders Negligence)*

முதியோரை வீட்டினுள் வைத்திருப்பவர்கள் அவர்களை கவனிக்காது உதாசீனம் பண்ணுதல் என்பவற்றுக்கு உதாரணமாக பின்வரும் விடயங்கள் இங்கு சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சரியான போஷாக்கு இல்லாததால் அவர்களை மெலிந்து நலிந்து போகப்பண்ணுதல்.
- தடுமாற வைப்பது.
- குளிர்காலங்களில் சரியான உடுப்புகளை அணிந்து வெளியே செல்கின்றரா? என்பதனை கவனிக்காது விடுதல்.
- வெளி உடல் காயங்களை கவனிக்காது திரியவிடுதல்
- அவர்கள் இருக்கும் அறைகள், படுக்கைகள் துப்பரவும், பாதுகாப்புமில்லாது வைத்திருத்தல்.
- முதியோரை தனியே விட்டு வெளியே போதல்.
- அவர்களின் மருத்துவ பரிசோதனை களுக்கான மருத்துவர்கள் வழங்கிய கால நேரங்களை ரத்து செய்தல்.

போன்றவற்றினையே சட்டங்களில் உதாசீனம் என கருத்தில் கொள்ளப்பட்டு அது நிருபிக்கப்படும் போது தண்டனைக்குரியவர்களாக வேண்டிவரலாம்.

பின்வரும் இணைய தளத்தினுள் சென்று பார்க்கும் போது முதியோரை உதாசீனம் செய்து துன்புறுத்தினால் என்ன தண்டனை என்பதையும் அதற்குரிய சட்டங்களையும், வரைவிலக்கணங்களையும் அறிந்து கொள்ளலாம்.

***www.seniors.gov.on.ca/en/seniors-guide/index.php***
"Community Legal Education Ontario



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நினைவாற்றல் - MEMORY - 7

கட்டுரையாசிரியர் இந்த இதழில் மனித மூளையில் உள்ள நரம்பணுக்கள் (நியுரன்ஸ் Neurons) பற்றிய விபரத்தையும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ள நினைவாற்றல் பற்றிய சில பயனுள்ள தகவல்களையும் எடுத்து வருகின்றார். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

அன்பான வாசகர்களே!

மனித மூளையின் சராசரி நிறை 3 பவுண்ஸ் அல்லது 1.4 கிலோ கிராம் ஆகும். இதில் 100 பில்லியன் (billion) நரம்பணுக்கள் (நியுரன்ஸ் Neurons) வரை உள்ளன. இவை மூளையின் பல பாகங்களிலும் கூட்டமாகச் (cluster) சிதறிக் காணப்படுகின்றன. நரம்பணுக்கள் (நியுரன்ஸ் Neurons) இரசாயன ரீதியிலும், மின்சாரத்தால் தூண்டப்படும் (firing) உந்து சக்தியாலும் தொழிற்படுகின்றன. நியுரன்ஸ் நரம்புத் தொகுதியில் உள்ள ஒரு விசேடமான கலங்கள் ஆகும். இதன் முக்கிய தொழிற்பாடு தகவல்களைப் பெறுவதோடு உடல் முழுவதும் இவற்றை அனுப்புவது தான். நியுரன்ஸ்க்கிடையில் இருக்கும் சினப்சஸ் (synapses) தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் தன்மை கொண்டது. இதனை சினப்ரிக் பிளாஸ்ரிசிற்றி (Synaptic Plasticity) அல்லது நியுரோபிளாஸ்ரிசிற்றி (Neuroplasticity) என்பார்கள். நாம் ஏதாவது ஒரு புதிய விடயத்தை நினைவாற்றல் செய்யும்போது எமது மூளையில் உள்ள சினப்சஸ் (synapses) மாற்றம் பெறுகின்றன. மூளையின் நினைவாற்றல் வலுவிற்கு இவ்வாறான மாற்றங்கள் அவசியமாகின்றது. இதில் இருந்து ஒரு விடயத்தை நாம் ஊகித்துக் கொள்ள முடியும். அதாவது, நாம் புதிய விடயங்களை நினைவாற்றல் செய்யும்போது எங்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் மூளையை வலுப்படுத்தி நலமாக வைத்திருக்கின்றது. எமது கடந்த கால விடயங்களை மீளவும் நினைவு படுத்துதல் கூட நியுரன்ஸ் இனது தொடர்பாக்கத்தை அதிகரிக்கின்றது. இதன் அடிப்படையில்தான் மூளையைப் பாவியுங்கள் அன்றேல் இழந்து விடுவீர்கள் ("use it or Lose it") என்று உளவியல் அறிஞர்கள் கூறும் எச்சரிக்கைச் சொற் தொடர் உருவாகி யிருக்கும் என நம்பலாம். மூளையில் உள்ள நியுரன்ஸ் திரும்பத் திரும்ப தொழிற்படும்போதுதான் (firig மூலமாக) அவை விரைவாக தொழிற்படும் தன்மையைப் பெறுகின்றன. மனித வாழ்வில் கல்வி கற்பதற்குக் கால எல்லையின்றி வாழ்நாள் முழுவதும் புதிய புதிய விடயங்களை அறிந்து கொள்ளும் பழக்கம் நினைவாற்றல் திறமையை அதிகரிக்கச் செய்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நியுரன்ஸ் பாதிப்புறும்போது மீளவும் உருவாகும் தன்மை அற்றவை. ஆனால் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் தன்மை உடையன. இவைக்கு அதிக சக்தி தேவைப்படுகின்றது. நியுரன்ஸ் இரத்தத்தில் உள்ள ஒக்சிசன், குளுக்கோஸ் என்பவை இல்லாது உயிர் வாழமுடியாது. நீண்ட கால நிகழுந்தன்மை (LTP - Long term potentiation) என்ற செயல்முறை (process) மூலம் நரம்பணுக்களிற்கிடையில் உள்ள தொடர்பாக்கம் (Connections) வலுவாக்கல் செய்யப்படுகின்றது. இதன் காரணமாக நரம்பணுக்கள் (நியுரோன்ஸ் Neurons) மீளவும் ஒருங்கமைக்கப்படு கின்றன. (reconfiguration). மூளை விஞ்ஞானத்தின் (Brain Science) அண்மைக்கால ஆய்வுகளில் மூளையின் "டிரைவ்ட் நியுரோரொப்பிக்" காரணி (BDNF Brain Derived Neurotrophic Factor) பேசப்படும் விடயமாக உள்ளது. இந்தக் காரணி (BDNF) பல வழிகளில் தனது கைங்கரியத்தைச் செய்து கொள்கின்றது. இது நரம்பணுக் கலங்களில் உள்ள மரபுப் பண்புகளைத் தூண்டி புறோட்டின் அளவைக் கூட்டுகின்றது. இத்துடன் சினப்சஸ் இல் உள்ள இரும்புத் தன்மையைக் கூட்டி மின்சார சக்தியைக் கூட்டுகின்றது. மொத்தத்தில் இந்த BDNF என்ற காரணி கலங்கள் இறப்பதைத் தடுக்கின்றது. கலங்களின் வளர்ச்சிக்கு உதவியாகவும் உள்ளது. புரோட்டின் உற்பத்தியையும் கூட்டுகின்றது. நாம் நினைவாற்றலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம். சில விடயங்களை நாம் மறக்க வேண்டிய தேவையும் உள்ளது. நீண்ட கால Long term depression (LTD) என்ற செயன்முறை இதனைச் செய்கின்றது. இந்த சொற்தொடரில் வரும் depression என்ற சொல்லுக்கும் மனஅழுத்தத்தைக் குறிக்கும் depression என்ற சொல்லிற்கும் எந்த தொடர்பும் இல்லை. ஒருவரின் குடும்பத்தவர் இறக்கும்போது, அல்லது வேறு காரணத்தால் ஆறாத்துயரம் ஏற்படும்போது அந்தக் கவலையில் இருந்து விடுபடுவதற்கு மறத்தலும் அவசியமாகின்றது. இங்கே LTD தன் பணியைச் செய்கிறது. மனிதப் படைப்பில் எவ்வளவு நுட்பம் இருக்கின்றது என்பதை அறியும்போது ஆச்சரியம் தருகின்றதல்லவா.

நாம் "பயிற்சியே பூரணத்துவத்தை ஏற்படுத்தும்" (practice makes perfect) என்ற சொற்தொடரைப் பற்றி அறிந்துள்ளோம். இந்த சொற்தொடர் கூறும் தகவல் நியுரன்ஸ் விடயத்திலும் பொருத்தமானதாக அமைகின்றது. கடந்த இதழின் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட மூளைக்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக செய்து வருதல் நினைவாற்றலை வலுப்படுத்தும் என்பதை நாம் மீளவும் நினைவில் கொள்வோம். ஒரு கணினியில் இருக்கும் நினைவகத்தில் விடயங்களைச் சேகரித்து வைத்திருக்குமாப் போல் மூளையில் குறிக்கப்பட்ட ஒரு இடத்தில் நினைவுச்சேகரிப்பு நடப்பதில்லை. மூளையெங்கும் காணப்படும் பல நியுரன்ஸ் இல் நினைவுச்சேகரிப்பு நடக்கிறது.

நாம் நினைவாற்றல் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு விடயங்களை அவதானமாகக் கவனித்து உள்வாங்குதல், இறுக்கமாக நினைவுபடுத்துதல், மீட்டல் செய்தல் போன்ற வழிமுறைகள் உதவியாக இருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் எமது உடல் நலத்திற்கு தேவையான வழிமுறைகள் மூளையின் நலத்திற்கும், உதவி நினைவாற்றல் சீராக இருக்கவும் வழி செய்கின்றது.

ஹவார்ட் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த கலாநிதி ஆரொன் நெல்சன் என்பவர் தெரிவித்த பயனுள்ள சில தகவல்கள் பற்றி நாம் இப்போது ஆராய்வோம். அவர் எமது குறுகிய கால நினைவாற்றலைப் (short term memory) பரீட்சிப்பதற்கு ஒரு வழிமுறையாக எவ்வளவு இலக்கங்களை ஒரு தொடராகவும் (sequence) அதே இலக்கங்களை எதிர் ஒழுங்காகவும் நினைவாற்றல் செய்யலாம் எனத் தெரிவிக்கின்றார். உதாரணமாக 67895421 என்ற இலக்கத்தை நினைவுபடுத்துவதோடு இந்த இலக்கத்தை பின்புறமாகவும் 12459876 நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறாக பல எண்களை நினைவுபடுத்தி எமது குறுகிய கால நினைவாற்றலுக்கான பயிற்சியாகவும் கொள்ளலாம். நினைவாற்றல் குறைபாடு ஏற்படாமல் இருப்பதற்காக பல வழிமுறைகளைத் (strategies) தெரிவித்து இருக்கின்றார். இவை "வெள்ளம் வரமுன்பு அணைகட்டுவது" போல் வயது வேறுபாடின்றி யாரும் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகளாக உள்ளன. அவையாவன: ஒழுங்கான உடற்பயிற்சி, புகைத்தல் செய்யாமை, விற்றமின்களை உட்கொள்ளல், பலருடனும் பழகி ஈடுபாடு கொள்ளுதல், உடல் நலத்திற்குகந்த உணவுகளை உட்கொள்ளல், நல்ல நித்திரை, புதிய புதிய விடயங்களைக் கற்றல், குடிப்பழக்கம் கட்டுப்பாட்டுடன் இருத்தல், வாழ்வில் ஈடுபாடு கொண்டவர்களாக இருத்தல், மன அழுத்தத்தைச் சரியாக நிர்வகித்தல், சிந்தனைகளையும், வாழ்க்கை முறைகளையும் ஒழுங்கு முறையில் வைத்திருத்தல், மூளையைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், நேர் முறையான பழக்கத்தைக் கொண்டிருத்தல் (positive attitude). விற்றமின் C யும், விற்றமின் E யும் வயது முதிர்ச்சியால் ஏற்படும் நினைவாற்றல் குறைபாடுகளை தடுக்க உதவும். ஆனால் வேறு உடல்நலச் சிக்கல்கள் உள்ளவர்கள் உரிய வைத்திய ஆலோசனையுடன் விற்றமின்களை எடுக்க வேண்டும். நாம் குடும்ப உறுப்பினர்களுடனும், மற்றவர்களுடனும் நல்ல உறவைப் பேணுதல் கூட



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

your 2nd house is Investment property
1st house put down payment

Tenant (Rent) Pay the **Mortgage**
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

# கலித்தொகை - நாடகக் காட்சிகள்

5. கலித்தொகையில் இறுதியாக வைக்கப்பட்டிருப்பது நெய்தற்கலியாகும். நெய்தல் கடலும் கடல்சார்ந்த இடங்களையும் குறிக்கும். நெய்தலில் தலைவன் பிரிவை ஆற்றாது தலைவி இரங்குதலைப் பொதுவான ஒழுக்கமாகக் கொள்ளுதல் புலநெறி வழக்கம். நெய்தலுக்கு 'உருகுதல்' என்னும் பொருள். நெய்தற்கலிகள் இவ்வுணர்ச்சியை நன்கு விளக்குகின்றன. அவற்றுள் இறுதியான 33ஆவது கலி பின்வருமாறு:

அயந்திகழ் நறுங்கொன்றை அலங்கலந் தெரியலான்
இயங்கெயில் எயப்பிறந்த எரிபோல எவ்வாயுங்
கனைகதிர் தெறுதலின் கடுத்தெழுந்த காம்புத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழல்
மயங்கதர் மறுகலின் மலைதலைக் கொண்டென
விசும்புற நிவந்தழலும் விலங்கரு வெஞ்சுரம்;

இறந்துதாம் எண்ணிய எய்துதல் வேட்கையால்
அறந்துறந்து ஆயிழாய் ஆக்கத்திற் பிரிந்தவர்
பிறங்குநீர் சடைக்கரந்தான் அணியன்ன நின்னிறம்
பசந்துநீ இனையையாய் நீத்தலும் நீப்பவோ;

கரிகாய்ந்த கவலைத்தாய்க் கல்காய்ந்த காட்டகம்
வெருவந்த ஆறென்னார் விழுப்பொருட்கு அகன்றவர்
உருவவேற் றூர்தியான் ஒள்ளணிநக் கன்னநின்
உருவிழந் தினையையாய் உள்ளலும் உள்ளுபவோ;

கொதித்துராய்க் குன்றிவர்ந்து கொடிக்கொண்ட கோடையால்
ஒதுக்கரிய நெறியென்னார் ஒண்பொருட்டு அகன்றவர்
புதுத்திங்கட் கண்ணியான் பொற்பூண்ஞான் றன்னநின்
கதுப்புலறுங் கவினையாய்க் காண்டலுங் காண்பவோ;

ஆங்கு,

அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல ஒருங்கவர்
பொய்யா ராகுதல் தெளிந்தனம்
மையீ ரோதி மடமொழி யோயே.

இது பொருள்குறித்துப் பிரிந்த தலைவன் நினைவால் உருகிக் கலங்கும் தலைவியைத் தோழி தேற்றியதைக் கூறுகின்றது.

''அழகிய ஆபரணங்களை அணிந்தவளே! நீர்நிலைப் பக்கமாக வளர்ந்த கொன்றை மரம் பூத்த மாலைபோன்ற மலர்களை அணிந்த சிவபெருமான் திரிபுரத்தை எரித்தபோது தோன்றிய நெருப்பினைப்போன்ற வெப்பக் கிரணங்களை உடைய கதிரவன் வானத்தில் எழுந்து வெயிலைக் கொளுத்தும் இயல்புடையவன். வெப்பத் தாக்கம் மூங்கில்களிற் பற்றக் காட்டுத் தீயும் அவ்விடத்தைக் கைப்பற்றும். அதனால் நெருப்பு வானளாவ வெம்மையைச் செய்யும். விலங்குகளும் மயங்கிப் பலபக்கங்களிலும் ஓடும். வெப்பத்துக்குத் தப்பி விரைவாகவும் செல்ல முடியாது. ஏனெனில் மலைகள் பரந்து குறுக்கிட்டுக் கிடக்கும். அந்த அளவுக்குக் கடுமையான பாலை நிலத்தினைக் கடந்து நீரினைச் சடையிலே தாங்கிய இறைவனைப்போன்று நிறைவாக வாழப் பொருள்தேடிச் சென்ற உன்காதலர், நீ உனது அழகிய நிறம் வெளிறும்படியாக வருந்தும்படி கைவிடுவாரோ? விடமாட்டமார்.

வெந்த கரிகளும் கற்களும் நிறைந்த பல வழிகளையுடைய காட்டகம் அஞ்சத் தகுந்ததென்று கருதாது, அழகிய ஏற்றினை ஊர்தியாகக் கொண்ட இறைவனைப்போன்று நிறைவான செல்வத்தைத் தேடிச் சென்றவர், ஒளிபொருந்திய அணியினை உடைய நீ மெலிவுற்று வாட அப்பொருளையே பெரிதென்று நினைப்பாரோ? நினையார்.



ஞாயிறு கிழக்கிலே உதயகிரியிலே தோன்றிப் பின் கொதிப்பேறிய கோடைகாலம் போதற்கு அரியது என்று கருதாது திங்களை அணிந்த சடையானை ஒத்த செல்வத்தைத் திரட்டப் பிரிந்து சென்றவர், நீ தலைவாரிப் பூச்சூடாது அவர் நினைவால் வாடிக் காய்ந்திருக்கவும் பொருள் வேட்கையை மனத்தாலும் நினைப்பாரோ? அங்ஙனம் நினையார்.

கருமைநிறக் கூந்தலையும் மென்மையான மொழியினையும் உடையவளே! பெறுதற்கு அரிய ஆதிரை நாளையுடைய இறைவன் திருமேனி அழகைப் பெறும்படி மலர்ந்த பெரிய குளிர்ந்த இச்சண்பகப் பூக்கள் பொலியும் பருவம் பொய்யாதவாறுபோல, அவர் தாம் வருவதாகக் கூறிய காலத்திற் பொய்யாது வருவர். இதனை அவர் கூறிய கூற்றால் நீ நன்கு அறிவாய்; நானும் அறிவேன். அவர் கட்டாயம் உரிய காலத்தில் வருவார். அவர் மொழியை நம்புவாயாக!''

என்று தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்.

இதில் பாலை மற்றும் முல்லை நிலவியல்புகள் கூறப்படுவதால் நெய்தல் தலைவன் அந்நிலங்களை எல்லாம் கடந்து பொருள்தேடச் சென்றான் என்பது பெறப்படும். அவன் பிரிவுக்கு இரங்கியிருந்த தலைவியைத் தோழி தேற்றினாள்.

## நிறைவுரை

இவ்விதமான காதற் காட்சிகளின் களஞ்சியமாகக் கற்றறிந்தார் ஏத்துங் கலித்தொகை விளங்குகின்றது. 'யான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையம்' என்னும் மந்திரத்துக்கு ஏற்ப நான் அனுபவித்துக் கற்ற கலித்தொகை இன்பத்தைப் பிற தமிழ் மக்களும் பெறவேண்டும் என்னும் எண்ணத்தினாலே சில காட்சிகளை இங்கு மாதிரிக்குக் காட்டினேன். கடலை விற்கின்றவன் இரண்டொரு கடலையை மட்டுமே பதம் பார்க்க உண்ணத் தருவான். பலாப்பழ வியாபாரி ஒரு சுளையைத்தான் சுவை பார்க்கத் தருவான். அவர்களைப்போல் நானும் சில சான்றுகளை மட்டுமே தொட்டுக் காட்டினேன். மேற்கொண்டு கலித்தொகைக் குற்றாலத்தில் குளித்துக் குதூகலிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. காதல் வீழ்ச்சி என்றால் யார்தான் குளிக்கமாட்டார்? மிக முக்கியமாக, நாடக வல்லாளருக்குக் காதற் காட்சிகள் அமைப்பதற்குத் தகுந்த கருக்கள் கலித்தொகையில் ஏராளம் உள்ளன.

காதல் இன்றும் பெரும்பான்மை களவிலேதான் தொடங்குகின்றது. பின்னர் பெற்றோருக்குத் தெரிய வருகின்றபோது அது சிக்கலில் முடிவதுமுண்டு. சங்ககாலத்தில் காதலருக்கு இருந்த சுதந்திரம் இக்காலத்திற் பல சோதனைப் படிகளைத் தாண்ட வேண்டியுள்ளது. அக்காலக் காதலில் பெரியவர்களின் தலையீடுகளும் சதிகளும் அரிது. அந்த அளவுக்குத் தமது பிள்ளைகளின் காதலைப் பெரியவர்கள் மதித்தார்கள்; மதித்துக் களவு ஒழுக்கத்தைக் கற்பொழுக்க மாக்கினர். காதலின் தூய்மையையும் பண்டைத் தமிழர் அதனைப் போற்றிய சிறப்பையும் அறியக் கலித்தொகையைக் கற்போமாக!



**கவிஞர் வி. கந்தவனம்**

# முதியோரை...

**14ஆம் பக்கத்தொடர்ச்சி**

(CLDO)" என்னும் சட்ட ஆவண காப்பகத்தின் ஒரு பிரிவான இணையதளத்தில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

a. முதியோர் இல்லங்களில்
b. வீடுகள், குடும்ப உறவுகளில்
c. பொறுப்பு எடுத்து அழைத்துச் செல்லும் அறிந்தவர்கள், நண்பர்களினால்

முதியோரின் பாதுகாப்புகளுக்கு ஆபத்து ஏற்பட்டால் எங்கே? எந்த இடத்தில்? என்னமாதிரி? புகார்களையும், முறைப்பாடுகளையும் எடுத்துச் செல்ல வேண்டும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண அரசாங்கத்தில் முதியோர் நலன் கவனிப்பதற்காகவும் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் பிரத்தியேக அமைச்சகம் உள்ளது. அதன்விவரம் பின்வருமாறு


*Ministry of Ontario Senior' Secretariat*
*777, Bay St, Suit # 601 C*
*Toronto, ON M7A 2J4*
*Seniors Info. Line - 1.888.910.1999*

Ms. Sophia Aggelonitis (சோபிா அஜ்ஜிலோனி) என்னும் ஒரு பெண்மணியே தற்போது ஒன்ராரியோ மாகாணத்தின் வருவாய்த்துறை அமைச்சராகவும் பணிபுரிந்து கொண்டு முதியோர் நலன்கள் பேணும் அமைச்சராகவும் பதவி வகித்து வருகின்றார்.

மாகாணம் முழுவதும் உள்ள சகல முதியோர் இல்லங்களும் இவ் அமைச்சகத் தினாலேயே கண்காணிக்கப்படுகின்றது.

**"முதியோர் துன்புறுத்துவதனை தடுக்கும் ஒன்ராரியோ மாகாண தொடர்வலை அமைப்பு'**
***'The Ontario Network for the Prevention of elder Abuse'***

என்பது துன்புறுத்தப்படும் முதியோர்களின் பாதுகாப்புக்காக அரசின் ஆதரவுடன் கனடாவில் பல்மொழி பேசும் மக்கள் மத்தியில் இயங்கும் ஒரு தர்ம ஸ்தாபனம் ஆகும். இதன் தலைமையகம் பின்வரும் விலாசத்திலிருந்து இயங்குகின்றது.



*'The Ontario Network for the Prevention of elder Abuse'*
*234, Eglinton Ave. East, Suit # 500*
*Toronto ON M4P 1K5*
*Tel.: - 416.916.6728*

பாதிக்கப்பட்ட முதியோர் அல்லது முதியோரின் பாதிப்புகளை பார்த்தவர்கள் இந்நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்தால் பாதிக்கப்படும் முதியோருக்கு வழிகாட்டுவார்கள். இங்கு பாதிக்கப்பட்டவர் தொடர்புகொள்ள மொழி என்பது பிரச்சனையாக இருக்கமாட்டாது. தேவையேற்படின் தமிழ் மொழி பெயர்ப்பாளரின் உதவி கிடைக்கும்.

அதுதவிர ரொறொன்ரோ பொலிஸ் பிரிவில் துன்புறுத்தப்படும் முதியோருக்கு முறைப்பாடு செய்ய விசேட பிரிவே உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

**Toronto Police Elder Abuse Co-Ordinator**
தொலைபேசி - 416.808.7040
தொலைநகல் - 416.808.7052
மின்அஞ்சல் -
**Communityprograms@torontopolice.on.ca**

# தொந்தி கரைய வயிற்றுப் பயிற்சி

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

ஒருவருக்கு தொந்தி உண்டாக காரணம் என்ன? தொந்தியுள்ள மனிதருக்கு பலவிதமான நச்சுப்பொருள்களும் கழிவுப்பொருட்களும் வியாதியை உண்டு பண்ணும் கிருமிகளும் வயிற்றின் அடிப்பகுதியில் தங்கியிருக்கும். அங்கு ஒழுங்கான இரத்த ஓட்டம் இருக்காது. திடீரென்று ஒரு நோய் வரும்போது இந்த நச்சுக்கிருமிகள் நோயின் தாக்கத்தை தீவிரப்படுத்தும். இதற்குப் பரிகாரம் வயிற்றிற்கு தக்க பயிற்சி அதிகரிக்க வேண்டும். மனிதர்கள் நோயின்றி வாழ நம் முன்னோர் நமக்களித்த வழிமுறைதான் "உட்டியானா" என்ற வயிற்றுப் பயிற்சியாகும் இதன்மூலம் வயிறு இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

எல்லாவிதமான நோய்களும் உருவாவதற்கு ஆரம்ப இடம் வயிறுதான். மலச்சிக்கல் என்ற பேயை தொலைக்க எவ்வளவோ பாடுபாடுகின்றனர் ஒன்றும் பலிக்கவில்லை. நடைப்பயிற்சி செய்கின்றனர், ஓடுகின்றனர். ஏன் எத்தனையோ வகை உணவுகளையும் மருந்து மாத்தரைகளையும் உட்கொள்கின்றனர். ஆனால் அந்தப் பேய் விட்டு அகன்றபாடில்லை. அந்த மலச்சிக்கல் தொடர்ந்து நீடிப்பதால் தொந்தி விரிவடைகின்றது. இதனை உடலிலிருந்து அகற்றுவதற்கு உட்டியானா பயிற்சியை விட வேறு எந்த சிறப்பான வழிமுறை எதுவுமில்லை.

குடல்களும் உணவுப்பை முதலானவைகளும் இப்பயிற்சியின் போது எங்கு ஓடி ஒழிந்து கொள்கின்றன என்று எவருக்கும் தெரியாது. ஆனால் எக்ஸ்ரே (X - Ray) மூலம் இதன் இரகசியம் புரியும். எல்லா விதமான வயிற்றுக் கோளாறுகளையும் நீக்கி ஒரு எளிதான பற்சி, இதனை காலையில் வெறும் வயிற்றில் 20 நிமிடம் வரை பழகினால் மிகுந்த நன்மை பயக்கும்.

### பயிற்சி முறைகள் - (1)

கால்கள் இரண்டையும் முன்புறமாக நீட்டி அவற்றை ஒன்று அல்லது ஒன்றரை அடி உயரமான நாற்காலியிலோ அல்லது சோபாவிலோ தூக்கி நிறுத்த வேண்டும். பின் சற்று ஓய்வு எடுத்த பின் வயிற்றை உள்ளுக்கும், மேலுக்கும் மாறி மாறி இழுத்துக் கொள்ள வேண்டும். மல்லாந்து படுத்துக்கொண்டு இதனை செய்ய வேண்டும். வயிற்றை உள்ளிழுக்கும்போது அதனை முதுகெலும்பில் தொடும்படி செய்யவேண்டும். அத்துடன் அந்த உள்ளிழுத்த நிலையில் 5 முதல் 10 எண்ணிக்கைவரை நிறுத்தவேண்டும். அதன்பின் வயிற்றை தளர்த்தவும்.



உட்டியானா

### பயிற்சிமுறை (2)

இரண்டு கால்களையும் அகலப்பரப்பி நின்றுகொண்டு சற்று முன்புறமாகக் குனிந்து கொண்டு மூச்சை முழுவதுமாக வெளியே விட்டபடி வயிற்றை உள்ளே எக்க வேண்டும். எக்கிய நிலையில் 10 அல்லது 15 நொடிகள் இருத்தல் வேண்டும். பின் மூச்சை உள்ளே இழுத்தபடி வயிற்றை மெதுவாக தளர்த்த வேண்டும். இதேபோல் திரும்பத்திரும்ப 10 நிமிடம் வரை செய்யலாம். இப்பயிற்சி மூலநோயைக் குணப்படுத்தும், ஆஸ்துமா குணமடையும், மலச்சிக்கல் நீங்கும், தொந்தி கரையும், வயிற்றுப்புண்ணைக் குணப்படுத்தும். அஜீரணம் விலகும், நன்றாகப் பசி எடுக்கும். இந்திரியத்தைக் கட்டுப்படுத்துகின்றது. வயிற்றுக் கொழுப்பு கரைகின்றது. சிறுநீரகங்கள் பலம் பெறுகின்றது. முகத்தில் அழகு மேலிடும், முதுமை நீங்கும்.

வாழைத்தண்டு அடிக்கடி உண்டால் தொந்தி குறையும். வெள்ளரிக்காய் அதிகம் உண்டால் வயிறு பெரிதாகாது. வயிறு பெரிதாகப் பெரிதாக இடுப்பின் சுற்றளவு அதகரிக்க ஆயுள் சுருங்கும் என்பதை உணர்ந்து தொந்தி உருவாகாது பார்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைவிட பிற யோகாசனங்களுடன் சம்மந்தமான பயிற்சிகளும் வயிற்றைக் குறைக்கப் பயன்படுகின்றது. இவற்றை Slimming Practice என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


**SEARCHING FOR FAMILY PHYSICIAN**

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.


**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

Contact: Dr. Vukiet Tran
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான **Medical** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### கடந்த இதழ் தொடர்ச்சி

சில குழந்தைகளைப் பார்த்தால் இரவில் தூங்கிக் கொள்ளும்போது திடீரென எழுந்து அங்கும் இங்கும் நடந்து திரியும் பழக்கம் உடையவராகவும் இருப்பார்கள். இது உணர்ச்சிவசப்படுவதாலும், மனச் சஞ்சலத்தாலும் அல்லது ஏதும் வேறுகாரணத்தினாலும் நிகழலாம். இதனால் தனக்கும் பெற்றோருக்கும் துன்பத்தை ஏற்படுத்தமுடியும். இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருந்தால் மனநோய் சிகிச்சை செய்யும் வைத்தியரிடம் சென்று பரீட்சிப்பது நன்று.

சில குழந்தைகளுக்கு சுவாசப்பை அறையில் அழற்சி ஏற்பட்டு வரும் நிலையை சுவாசப்பை ஸ்தாபிதம் (Bronchitis) என அழைக்கலாம். பலகாற்றறைகள் சுவாசப்பையில் காணப்படுகின்றன. இக்காற்றறைகள் இரத்தத்தில் உள்ள அழுக்குகளை கரியமலவாயுவாக வெளியகற்றவும் சுத்தமான பிராணவாயுவை உடலுள் பரப்பவும் காரணமாகவுள்ளது. எனவே இவ்வுறுப்பு எமது உடலைப் பாதுகாக்க எதுவித பிரச்சினையும் இன்றி இருக்க வேண்டும். இதில் சளித்தன்மை இருந்தால் குழந்தைகள் மூச்சுவிட்டு சுவாசிப்பதற்கு பெரும் கஸ்டப்படுவார்கள். இந்நிலை ஏற்படாது இருக்க பெற்றோர் சுற்றாடலை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். சுத்தமான தூசற்ற காற்று சுவாசிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் உடல் நிலையைப்பாதிக்கும் உடம்பில் உள்ள நீரும் + உப்புச்சத்தும் கழிந்துவிடும். இந்நிலையில் குழந்தையின் தோல் பகுதியை இழுத்துப்பார்த்தால் தோலில் மடிப்புக்கள் காணப்படுவதுடன், இழுத்தபின் கையைவிட்டால் தோல் சுருங்கியபடி மடிப்புடன் காணப்படும். அத்துடன் வரட்சியாகவும் காணமுடியும். குழந்தையின் நாவைப்பார்த்தால் நீர்தன்மையற்று காய்ந்த நிலையாகவும் காணப்படும். இந்தன்மையை மாற்றிக் கொள்ள தாமதியாமல் வைத்தியசாலைக்கோ அன்றி தங்கள் வைத்தியரிடமோ சென்றால் நிலைமையைப் பூர்த்தி செய்து கொள்ள வழியமையும்.

முக்கியமாக குழந்தை பிறந்து ஒருவயது ஆகும் முன் சிலவியாதிகளினால் குழந்தைகள் இறப்பதும் உண்டு. இந்நிலை ஏற்பட சில வியாதிகளைக் குறிப்பிடலாம். உ+ம் போலியோ, சன்னிவியாதி, தொண்டை அடைப்பான், கக்குவான், காசநோய் (இருமல்) போன்றவையாகும். இதனை வருமுன் தடுத்துக் கொள்ள தடுப்பு ஊசி முக்கியமாகும்.

கர்ப்பத்தில் சிசு இருக்கும் போது தாய்க்குத் தடுப்புப்பூசி போடுவதினால் சிசுவும் காப்பாற்றப்படுகின்றார். குழந்தை பிறந்து ஒரு வருடத்திற்குள் தடுப்பூசி குழந்தைக்குப் போட்டுக் கொள்ளலாம். முதல் போடும் தடுப்பூசி கக்குவான், இருமல், தொண்டை அடைப்பான் (மூச்சுக்கஸ்டம்) வராதபடி பாதுகாக்கலாம். இதுவே முதல்தடுப்பு D.P.T ஊசியாகும். இது பெரும்பாலும் குழந்தைபிறந்து 45 நாட்களுக்குள் போடலாம் எனவும் அறியமுடிகின்றது. இதனை குழந்தைக்கு மூன்று முறைகள் போடவேண்டும் எனவும் தெரிய வருகின்றது. இதுபற்றிய விரிவான விபரங்கள் வைத்தியர்கள் கூறிக்கொள்வர்.

கண்களில் உள்ள கண்ணீர் சுரப்பிகள் குழந்தைகளுக்கு முழுமையாக வளர்ச்சியடையாததினால் குழந்தைகள் பிறந்தவுடன் கண்ணீர் சொரிவது குறைந்து காணப்படும். நாளடைவில் யாவும் நல்லநிலைக்கு வந்து கொள்ளும்.

இன்னும் சில குழந்தைகளுக்கு கழுத்துப் பகுதியில் கழலை போன்ற உருவமும் காணப்படுவதும் உண்டு. இவை பெரும்பாலும், வாய்ப்புண், தொண்டைப்புண், தலைப்பொடுகு, மார்பு, வயிறு, விதைப்பை என்பவற்றில் கட்டித்தன்மை ஏற்பட்டிருந்தாலும் வரலாம் எனவும் அறியமுடிகின்றது. இந்நிலை காணும் குழந்தைகளைத் தங்கள் வைத்தியர்களிடம் சென்று பார்வையிட்டு தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பெற்றோர்களான நாம் எமது குழந்தைகள் அவர்களின் வயதிற்கு ஏற்ப குறைபாடு இன்றி இருக்கின்றார்களா? என்பதை முக்கியமாக அறியவேண்டும். இதற்கு சிலமுறைகள் உண்டு. ஓரளவு பார்ப்போம். நிறை (எடை) ஆரம்பத்தில் 4 கிலோவிற்கு குறையாமல் இருத்தல்.

தலைப்பகுதி 3 மாதத்தில் ஓரளவு நிமிர்ந்து காட்டல். 5 மாதமளவில் குழந்தை



குப்புறப்படுக்க ஆரம்பித்தல் வேண்டும். 8வது மாதமளவில் குழந்தை உட்கார வேண்டும். 10ஆவது மாதத்தில் குழந்தை நிற்க வேண்டும். 12வது மாதம் அளவில் குழந்தை நடக்க ஆரம்பிக்க வேண்டும்.

ஒரு வருடக்குழந்தை அம்மா, அப்பா எனச் சொற்களை சொல்ல ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டு கொள்ள முடியும். இக்காலத்தில் மேற்கூறியவற்றில் ஏதும் குறைபாடு இருப்பின் தங்கள் வைத்தியர் தகுந்த ஆலோசனை கூறி குழந்தை நன்கு வளர்ச்சியடைய வழியமைப்பார்.

(தொடரும்)

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM


HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# திரை விமர்சனம்...“உறவு”

கனடாவைக் களமாகக்கொண்டு கனேடியத் தமிழரான திரு. திவ்வியராஜன் அவர்கள் ‘உறவு’ என்னும் திரைப்படத்தை நெறிப்படுத்தித் தயாரித்துள்ளார். இத்திரைப்படத்தில் தந்தை, தாய், மகள் என மூன்று பேர் கொண்ட கலை ஆர்வம் மிக்க ஆரோக்கியமான குடும்பத்தை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மகள் திறமைமிக்க நடன ஆசிரியர், புகழ் பெற்ற நடனக்கலைஞர். தந்தையும் கவிதை, நடனம், பாடல் என்பவற்றில் மிகுந்தநாட்டம் கொண்டவர், தாயாரும் இவர்களுக்கு சளைத்தவர் அல்லர். மகள் தான் ஆடப்போகும் நடனத்திற்குப் பொருத்தமான ராகம் ஒன்றைப்பாடிக்காட்டி அபிப்பிராயம் கேட்க தந்தை இன்னொரு ராகமும் பொருந்தும் என்று பாடும் வேளை, சமையல் அறைக்குள் இருந்து தாயார் பாடிக் கொண்டே வருவது மனதைத்தொட்ட காட்சிகளில் ஒன்றாகின்றது. கனடா வாழ்க்கை முறைக்கு இயைபாக்கம் பெற்ற ஒரு கலை ஆர்வம்மிக்க குடும்பத்தில் தந்தையும் மகளும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தாலும் ஆடல், பாடல் இலக்கிய ரசனையுடன் ‘நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்’ என்பதற்கிணங்க வாழ்கின்றார்கள். இலங்கையில் ஆரோக்கிய மற்ற அரசியல் சூழ்நிலைகாரணமாக கதாநாயகியின் தாய் மாமன் குடும்பம் பல கஸ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் அமைகின்றன. தாயார் மனம் இரங்கி தன் அண்ணனின் மகனுக்கு உயிர் ஆபத்து வரலாம் என்று பயந்து தன் மகளுக்கு அண்ணன் மகனை திருமணம் செய்ய விரும்புகின்றாள். தந்தையார் இத்திருமணத்தை முதலில் எதிர்க்கின்றார். தாயின் விருப்பப்படி கதாநாயகியும் தன் சொந்த மச்சானில் இரக்கம் கொண்டு திருமணத்துக்கு சம்மதிக்கின்றாள்.

இறுதியாகத்திருமணம் நடக்கின்றது. திருமணத்திற்குப்பின் குதூகலக்குடும்பத்தில் புயல் வீசுகின்றது. புரிந்துணர்வு இல்லாமை, கதாநாயகனின் முற்கோபம், புதியகலாசார இயைபாக்கமின்மை, வேலை இன்மை, அந்தஸ்து இன்மை, தனிமை, விரக்தி இவை எல்லாம் ஒன்று சேர கதாநாயகன் நிம்மதியை இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. இதனால் புரிந்துணர்வு



மேலும் குறைய கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் இடையே இடைவெளி படிப்படியாக வளர்ந்து ஈற்றில் பிரியும் நிலைக்கு கொண்டு செல்கின்றது. வேலையை விடும்படியும் நடனக்கலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியும் கதாநாயகன் தொந்தரவு செய்கிறான்.

‘புரிதல் இல்லா வாழ்க்கை சோகம்..’ என்ற இத்திரைப்படத்தில் வரும் பாடல் வரியே இக்கதையின் கருப்பொருளாக அமைகிறது. கலை ஆர்வம் சற்றும் இல்லாத கதாநாயகன் கதாநாயகியின் நடனத்திறனால், அவளுக்குக்கிடைத்த புகழை ஜீரணிக்க முடியாதவனாக மனக்குமுறல்களுக்கு உள்ளாகின்றான். முன்கோபக்காரனான கதா நாயகன் ஒரு சந்தர்ப்பத்தில் ஆத்திரத்தில் மனைவியை அடித்துவிடுகிறான். தாய் தந்தையர் அதிர்ச்சியுடன் தம் உணர்வுகளைப் பிரதிபலித்தவேளை கதாநாயகன் மாமன் மாமியின் வீட்டில் இனி தொடர்ந்து வாழமுடியாது என்று கூறி கதாநாயகியை கட்டாயப்படுத்தி தன்னுடன் கூட்டிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகின்றான். நண்பன் வீட்டில் வாழ்கின்றனர். அங்கு வாழும்போதும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. சங்கிலித் தொடராகப் பல பிரச்சினைகள் தொடர்கின்றன. பிரச்சினையின் உச்சக் கட்டமாக கதாநாயகனை பொலீஸ் பிடிப்பதும் அது மனைவியால்தான் நடந்தது என்று கதாநாயகன் மனைவியையும் அவள் குடும்பதையும் முற்றாக வெறுத்து ஒதுக்குகின்றான்.

மனஸ்தாபங்கள் எல்லை கடந்த நிலையில் ஈற்றில் கதாநாயகி தனித்து வாழும் பழைய நிலைக்கு திரும்ப வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். கதாநாயகி கனடா வாழ்க்கை முறைக்கு இயைபாக்கம் கொண்டவளாகவும் நல்லதொரு குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்ததாலும் குடும்பப் பிரச்சினை அவளைப்பாதித்தபோதும் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் தானே தன் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் திறமை உள்ளவளாக விளங்குகிறாள். கதாநாயகனின் முன் கோபம், நிதானம் இன்மை, புதிய கலாசாரம், கலை ஆர்வமின்மை எல்லாம் சேர்ந்து தன் மனைவியைப் புரிந்து நடக்க முடியாத சூழ்நிலை அமைந்துவிடுகின்றது. கதாநாயகியும் ஆரம்பகாலங்களில் அவனின் உண்மையான சுயரூபத்தைப்புரிந்து கொள்ளவில்லை. ஆனால் பிரச்சினை வந்த பின் கணவனுக்கு இயன்ற அளவு விட்டுக்கொடுத்து நடக்கமுயன்றுள்ளாள். ஆனாலும் இருவருக்கிடையே தெளிவான புரிந்துணர்வு இன்மையால் இருவர் வாழ்வும் இல்லறத்தில் ஒட்ட முடியாது போய் விடுகிறது.

பொதுவாக நோக்கும்போது இத்திரைப்படக்கலைஞர்கள் யாவரும் அந்தந்தப்பாத்திரமாகவே மாறி யதார்த்தமாக நடித்திருப்பது வியப்பைக்கொடுக்கின்றது.

- ரஞ்சி கதிர் -
ranji24.kathir@gmail.com

ஒரு சில குறைகளை தொட்டுக்காட்டலாம். ஆனாலும் அவற்றை பெரிய குறையாகக்கூற முடியாது.

கதாநாயகனும் கதாநாயகியும் திருமண பந்தத்தில் நுழையும் ஆரம்ப கட்டத்தில் கூட கதாநாயகன் முகத்திலே கல்யாணக்களை தெரியவில்லை. ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள் என்றவாறு கூட அவர்களிடையே ஆரம்பகாலத்தில் கூட நெருக்கமான உறவு இருந்ததாக இல்லை. அடுத்து ‘சஸ்பன்ஸ்’ என்பதையும் இப்படத்தில் காணமுடியாது. கமரா

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# HomeLife / GTA Realty Inc.,

**Brokerage***

## இன்

## ஸ்காபரோ அலுவலகம்




தமிழ் மக்களின் ஏகோபித்த நன்மதிப்பை
பெற்ற வடஅமெரிக்காவின் முதலாவது

**South Asian Indoor Mall**

**"GTA SQUARE"**

இற்கு இடம் மாறுகின்றது என்பதனை
பெருமகிழ்ச்சியுடன்
தெரிவிக்கின்றோம்.

HOMELIFE HIGHER STANDARDS

**5215 Finch Avenue East, #203**
**Scarborough, ON . M1S OC2**
**Tel:416.321.6969**

*Independently Owned & Operated

# முத்துக்கு முத்தாக

'மாயாண்டி குடும்பத்தார்', 'கோரிப்பாளையம்' படங்களை இயக்கிய ராசு மதுரவனின் ஐந்தாவது படம், 'முத்துக்கு முத்தாக'. பீம்சிங், கோபாலகிருஷ்ணன், விசு, சமீப காலத்தில் வி.என்.சேகர் போன்ற இயக்குனர்கள் அதிகம் கையாண்ட அதே குடும்பம் என்னும் களம்தான். ஆனால், எத்தனை காலமானாலும் குடும்ப உறவுகள் தொடர்ந்து சரிவுகளை சந்தித்து, சிதிலமடைந்து வருவதைச் சொல்லவேண்டிய தேவை, இன்னும் இருக்கிறது என்பதுதான் 'முத்துக்கு முத்தாக'வின் முதல் வெற்றி.



**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

## திரை விமர்சனம்

தமிழக கிராமப்புறங்களில், 'ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்பார்கள். இந்தப் படத்தில் ஐந்து ஆண் பிள்ளைகளை பெற்றவர்கள் ஆண்டியாகிறார்கள். ஐந்து ஆண் மக்களைப் பெற்ற தவசி (இளவரசு)யும் பேச்சி(சரண்யா)யும் எப்படி அவர்களை வளர்த்தார்கள், எப்படி தங்கள் கடமைகளை நிறைவேற்றினார்கள், குழந்தைகளின் திருமணத்திற்குப் பிறகு மருமகள் என்ற புது உறவால் எப்படியெல்லாம் உதாசினப்படுத்தப்பட்டு தனிமையில் வாடினார்கள் என்பதுதான் படம். ஒரு பெற்றோரின் சோகக் கதை! தனது அப்பாவை தரக்குறைவாக பேசிவிட்டான் என்பதற்காக, யாரோ ஒருவனை இழுத்துப் போட்டு அடிக்கும் களேபர காட்சியோடு துவங்குகிறது படம். இவ்வளவு பாசமுள்ள ஆண் பிள்ளைகள் அதே பாசத்தோடு வளர, இடையில் வரும் மருமகள்கள்தான் குடும்பத்தை சீர்குலைக்கிறார்கள் என்கிறார் ராசு மதுரவன்.

குடும்பத்தில் மூத்த மகன் நட்ராஜ். வாத்தியார் ஆகிவிடுகிறார். தன் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்கவில்லை என அங்கலாய்க்கும் சுஜிபாலாவின் அம்மாவிடம் தன் மகனுக்கே கட்டித் தருமாறு கேட்கிறார் சரண்யா. திருமணமும் நடக்கிறது. பணி காரணமாக பத்து கிலோமீட்டர் தள்ளி புது மனைவியுடன் தனிக் குடித்தனம் போய் விடுகிறார், நட்ராஜ்.

அடுத்தவன், ப்ரகாஷ். நட்ராஜ் - சுஜிபாலா திருமணத்தின் பொழுதே, ப்ரகாஷுக்கு அவர் விரும்பிய வர்ஷினியுடன் திருமணமும் நடக்கிறது. கல்யாணத்துக்குப் பிறகு, இவர் வீட்டோடு மாப்பிள்ளையாக வேறு ஊருக்கு புறப்பட்டு விடுகிறார்.

மூன்றாவது விக்ராந்த், ஒரு வேன் ட்ரைவர். மோனிகாவைக் காதலிக்கிறார். இவர்கள் காதல் நிறைவேறாமல் போக, வேறொருவருடன் இவருக்கு திருமணம் நடக்கிறது. இவரும் மனைவியின் கட்டாயத்தால் டவுனிலேயே குடியேறிவிடுகிறார்.

கடைக்குட்டி ஹரிஷ். கல்லூரியில் படித்து வரும் ஹரிஷ், பிறகு வேலை கிடைத்து சென்னைக்கு போய்விடுகிறார். அங்கே ஓவியாவைக் காதலிக்கிறார்.


எஞ்சியிருப்பது நான்காவது பிள்ளை, வீரசமர். டூடோரியலில் படிக்கும் இவர், ஒரு கொலை செய்துவிட்டு சிறைச்சாலைக்குப் போய்விடுகிறார்.

கூட்டமாக வாழ்ந்த இல்லம், குருவிக்கூடு போலாகிறது. கிராமத்தில் தனிமையில் இருக்கும் பெரிசுகள், பாசத்தோடு பேரப் பிள்ளைகளை பார்க்க கிளம்புகிறார்கள். அங்கே மருமகள்களின் நஞ்சு கலந்த வார்த்தையே விருந்தாகிவிட, கண்ணீரும் கவலையுமாக ஊர் திரும்புகிறார்கள்.

தன்னைக் கொடுமைப்படுத்தும் மனைவியை கடிந்து கொள்ளும் காட்சியிலும், பஸ் ஸ்டாண்டில் இட்லி வாங்கித் தரும் காட்சியிலும், தனது மிகையற்ற இயல்பான நடிப்பை பதிவு செய்கிறார் நட்ராஜ். நிறைவேறாத காதலைத் தமக்குள் புதைத்துகொள்ளும் விக்ராந்த், மோனிகா இருவரின் நடிப்பும்கூட நலம். சிங்கம் புலி சில இடங்களில் சிரிக்க வைக்கிறார்.

பெரிய குடும்பம் என்பதால் நிறைய பாத்திரங்கள், நிறைய நடிகர்கள். ஆனால், இவ்வளவு நடிகர்கள் இருந்தாலும் இப்படத்தில் கதாநாயகன் - கதாநாயகி, சரண்யா - இளவரசு ஜோடிதான். நிஜ அம்மா - அப்பாவாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.


**தொடர்ச்சி 34ஆம் பக்கம்**



# குறிஞ்சிப் பாடல்களில் காதல் வெளிப்பாடு

காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடகத் தியம்பு நாடவெம்
தொடர்புந் தேயுமொ நின்வயி னானே.

எனக் கபிலர் குறுந்தொகையில் (42) பாடலால் காதல் பற்றிக் குறிப்பிடுவது கருத்திற்கொள்ளத்தக்கது.



**- த. சிவபாலு -**

சங்க இலக்கியத்தில் காதல் பற்றிய கவிதைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆடவனும், இள நங்கையும் ஒருவரை ஒருவர் கண்டு காதல்கொள்ளும் காட்சி, அவர்களிடத்தில் ஏற்படும் மனவுணர்வுகள், எண்ணங்கள் என்பனபற்றிய வெளிப்பாடுகள் கவிதைகளின் கருப்பொருளாகக் கொள்ளப்படுகின்றன. தலைவியின் காதல் உணர்வை வெளிப்படுத்த தோழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. அவ்விதமே காதலனைப் பற்றிய விபரங்களைத் காதலியாக தலைமகளுக்கு உரைப்பதற்குச் தோழி அல்லது செவிலித் தாயர் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தலைமகனோடு உரையாடுவது, தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிக்கொண்டு வருவது, அதாவது தலைவியின் காதல் தவிப்பை தலைமகனுக்கு எடுத்துக்கூறுவது என்பன காதலோவியமாக செய்யுட்களிலே வடித்துள்ளனர் சங்கப் புலவர்கள். இன்றுள்ள கவிஞர்கள், நாட்டுப்பாடகர்கள், சினிமாப் பாடகர்கள் கூட இவற்றிற்கு விதிவிலக்கல்ல. கனவு கண்டேன் தோழி எனத் தனது காதல் கனிந்து வரும் காட்சியை விபரிக்கின்றாள் விரகதாப மேலீட்டால் தலைவி. தலைமகள் தனது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த தோழி தகுந்த ஒரு கருவியாகக் காணப்படுகின்றாள். சங்க காலத்தில் கூடப் பெற்றோர் தம்பிள்ளைகளுக்குத் தக்க வரனையோ அன்றி பெண்ணையோ தாம்பார்த்து முடிவு செய்யவேண்டும், தாம்விரும்பிய ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ தான் பிள்ளைகள் மணமுடிக்க வேண்டும் என மனம் கொண்டிருந்தனர் எனினும் அங்கு களவொழுக்கம், அல்லது காதல் ஒழுக்கம் என்பது விரவிக் காணப்பட்டுள்ளமையும் கருத்திற் கொள்ளற்பாலது. தலைவியின் காதலால் அவள் படும் விரகதாபத்தையும், பெற்றோர் அவளுக்கு வேறு இடத்தில் மணம் பேசுதலையும் அறிவிக்கும் முகமாக தலைவனுக்குத் தோழி எடுத்துக்கூறிய இப்பாடலை மதுரைக் கொல்லன் புல்லன் என்னும் புலவர் எழுதியுள்ளார். மதுரைக் குறிஞ்சியில் வரும் இவ்வரிகள் பலாக்கனி கமழுகின்ற மிக்க நறுமணம் வீசுகின்ற பூக்களையும் உடைய நாடு என நாட்டின் சிறப்பும் விபரிப்பதோடு அந்த ஊரின் சிறப்பால் தலைவியின் சிறப்பும் எடுத்துக் கையாளப்படுகின்றது.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

# அழகிய கடலோர கிராமம்




## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 94

பனை மரங்களும் தென்னை மரங்களும் பாக்கும் வாழையும் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரை கிராமம் உவரி. திருச்செந்தூரில் இருந்து கன்னியாகுமரி நோக்கி, கடற்கரை ஓரமாகச் செல்லும் அழகிய சாலையில் கூடன்குளத்துக்கு முன்னால் வரும் ஊர். இங்கு வங்க கடல் ஓரத்தில் சுயம்புலிங்க சுவாமி கோவில் உள்ளது. தமிழகத்தில் தென் மாவட்டங்களில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற சிவ ஸ்தலங்களில் இந்த சுயம்புலிங்கசாமி கோவிலும் ஒன்று. இங்குள்ள கப்பல் மாதா கிறிஸ்தவ ஆலயமும் மிகவும் புகழ்பெற்றது.

உவரி அருகேயுள்ள கூட்டப்பனை என்ற ஊரிலிருந்து, பால் விற்க ஒருவர் தினமும் உவரி வழியாக செல்வார். அப்போது, ஒரு இடத்தில் தினமும் கால் இடறி விழுந்துகொண்டே இருந்தார். ஒரு கடம்ப மரம் அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தது. அந்த மரத்தின் வேர்தான் அவர் காலை இடறியது. எனவே, அந்த வேரை வெட்டி விடுவது என்று முடிவு செய்தார். மர வேரை வெட்டிய போது ரத்தம் பீறிட்டது. எல்லோருக்கும் பெரும் அதிசயமும் ஆச்சரியமுமாகப் போய்விட்டது. இறைவன், அசரீயாக தான் இந்த இடத்தில் குடிகொண்டிருப்பதாகவும், தனக்கு கோயில் கட்டி வழிபாடு நடத்தும் படியும் சொல்ல பனை ஒலையில் கோயில் கட்டினர். நாளடைவில் பெரிய அளவில் கோயில் கட்டப்பட்டது என்கிறது உவரியின் தலவரலாறு. புராணங்களில் வீரைவளநாடு என்று உவரி குறிப்பிடப்படுகிறது.

உவரி கோயில், 500 - 1000 வருடங்களுக்கு முந்தைய பழமையான கோயில். இங்கு சிவன், சுயம்புமூர்த்தியாக அருள்பாலிக்கிறார். "இறைவனின் சிறப்புடைய 25 மூர்த்தங்களில் ஒன்று லிங்கோத்பவர். இங்கே இறைவன் சுயம்பு லிங்கோத்பவராக உள்ளார்" என்கிறார்கள். அம்மன்: பிரம்பசக்தி.

சுயம்புநாதர் கோயிலில் சூரியன் தன் பொற்கரங்களால் இறைவனை ஆராதிப்பதே தனி அழகு. மார்கழி மாதம் 30 நாளும் சரியாக சுயம்புலிங்கத்தின் மேல் சூரிய ஒளி படும். பல கோயில்களிலும் இது போல் சூரிய ஒளி லிங்கத்தின் மேல் விழுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளதை நாம் பார்த்திருக்கிறோம். என்றாலும், அங்கெல்லாம் ஒருநாள் அல்லது இரண்டு நாள் மட்டுமே சூரிய ஒளி விழும். மாதத்தின் முப்பது நாளும் முழுமையாக சிவலிங்கத்தின் மீது மேல் சூரிய ஒளிபடுவது உலகிலேயே இங்கு மட்டும்தான் என்பதுதான் உவரியின் விசேஷம். மார்கழி மாதம் முழுக்க சரியாக 7 மணிக்கு சூரிய ஒளி சுவாமி மீது விழுகிறது.

இன்னொரு சிறப்பு: கடல் ஓரத்தில் 4 ஊற்றுகள் உள்ளன. இவை அனைத்தும் நல்ல தண்ணீர் ஊற்றுகள். சுவாமியின் அபிஷேகத் தண்ணீர் இது என்கிறார்கள்.

எந்த நோயாக இருந்தாலும் 41 நாள் கடல் நீராடி சுயம்புலிங்க நாதரை தொழுதால் தீரும் என்பது நம்பிக்கை. கல்யாண வரம்,

தொடர்ச்சி 38ம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

REDUCE FEES INCREASE PROFITS
DEBITTECH POS
BENEFITS
Free 24/7 help desk
4 hrs on-site service
Gift & loyalty cards
Use it as ATM and generate revenue
Sell phone cards
(Cellular & Long Distance)
ACCREDITED BUSINESS
CounterTop $23.95 (Dial/IP)
Wireless $39.95 (Delivery)
Pay @ table $44.95 (Dial/IP)
We Will Beat Any Competitors Offer Guaranteed
1.49%*
*Some conditions apply
Other services
Tel: 1-888 640-5479
www.debittechpos.com

# திரை விமர்சனம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

உத்திகளில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாமோ என்ற எண்ணம் படம் பார்க்கும் போது நடிகர்கள், நடிகைகள், பாடகர்கள், பாடல் ஆசிரியர்கள், தயாரிப்பாளர், கதாசிரியர், நடன ஒருங்கிணைப்பாளர்கள் இன்னும் படத்தை உருவாக்க உதவிய



இடையிடையே தோன்றினாலும், நடனக்காட்சிகள், கலைஞர்களின், நடிப்புத்திறன், நெறியாள்கை, மெய்சிலிர்க்கவைக்கும் பாடல்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து மனத்திருப்தியைக் கொடுத்து படத்தோடு எம்மை ஒன்றுகலக்கச்செய்துள்ளது எனலாம்.

அத்தனை பேரையும் பாராட்டாமலிருக்க முடியாது. இறுதியாக திரு. திவ்வியராஜனின் நெறியாள்கையிலும் தயாரிப்பிலும் உருவான இத்திரைப்படம் கனேடிய தமிழ் திரைப்படங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என எதிர்வு கூறுவதாக அமைகின்றது என உறுதியாக நம்பலாம்.

# வீடு வாங்கும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடங்கியது. 2009 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு விலை அதிகரித்தது. இன்றும் தொடர்கின்றது. இன்றைய நிலையில் கனேடிய மக்களுக்கு வீடு, மனை வாங்குவது கனவாக மாறிவிடுமா என்ற நிலை ஏற்படலாம் எனக்கருதி, மத்தியவங்கி, மத்திய அரசு அடமானக் கடன் பெறும் காலத்தை குறைத்ததுடன் (amortization period) மேலும் சில கட்டுப்பாடுகளை கொண்டு வந்து கடன் பெறும் முறையில் இறுக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் ஆதன விற்பனையில் ஒருவித மந்த நிலையை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வட்டிவீதத்தை அதிகரிக்கலாம் என எதிர்பார்த்த இக்காலத்தில், கனேடிய மத்திய அரசின் தேர்தல் மே 02, 2011 இல் வர உள்ளது. பொதுவாகத் தேர்தல் காலங்களில் மத்தியவங்கி வட்டிவீதத்தை அதிகரிக்கும் சந்தர்ப்பம் குறைவு. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இவ் ஆதனவிலை அதிகரிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கும் என எதிர்பார்க்கலாம். எனினும் எவ்வளவு காலம் இந்நிலை தொடரும்? வட்டிவீத அதிகரிப்பு அரசியல் மாற்றங்களில் பெருமளவில் தங்கியுள்ளது. இவ்வருடத்தின் முதல் பகுதியில் ஆதனம் விற்பவர்களின் காட்டில் நல்லமழையாகத் தான் இருக்கும். வட்டிவீதத்தை அதிகரிக்கும்போது ஒருவித மந்தநிலை ஏற்படலாம் என எதிர்பார்க்க முடியும்.



எனினும் நீண்டகாலத்தை நோக்கும்போது ஆதனத்தில் முதலீடே சிறந்தது என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை. இதனையே கடந்த காலம் பாடமாக எங்கள் முன் வைத்துள்ளது.




ஸ்ரீ ஷீர்டி சாய் பாபா ஜோதிஷ் மந்திர்

ரொரன்ரோ வாழ் மக்களுக்கோர் நற்செய்தி

Pandit Sai Ram

Indian Famous Astrologer &Palm Reader



பண்டித் சாய் ராம் குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக ஜோதிடத்தில் திறமைவாய்ந்தவர்கள்.
இவர் ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் மிகச் சிறந்தவர்

இவர் மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஷ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்

100% Guarantee

தேவி பூஜை, லக்ஷ்மி பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்


பிளெக் மேஜிக் மற்றும் பேய் பிசாசுகள் விரட்டுவதில் திறமையானவர்



இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்!!

Visit Pandit Sai Ram at 880 Ellesmere Road, Unit #6B
Toronto, On M1P 2W6 (Ellesmere & Kennedy)
Inside Mobile Place

Tel: 416-560-5436



# BASEMENT RENT

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, mall, bank, school. Avail. immediately. 2 People preferred. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 416.615.2605

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.388.3616

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. May 01, 2011
தொடர்புகளுக்கு: 416.836.3279

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to all facilities. Avail. May 01, 2011. No Smoking & No Pets.
தொடர்புகளுக்கு: 416.297.9549

**MARKHAM & PAINTEDPOST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. immediately.
416.716.6422 Call After 6.00pm

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Avail. immediately.
416.271.9676 / 416.412.0406

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to all facilities. Ladies or family preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.321.5619

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.903.8190 / 416.321.5874

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Doctor office. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.9269

**NEILSON & FINCH**
**TAPSCOTT & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, mall. Avail. immediately.
வயதான தனியொருவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.802.6067

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MARKHAM & 16TH AVE**
1 Bedroom + den bsmt for rent. Sep. entrance, parking. Close to YRT, shopping, school. Avail. immediately.
416.847.9729 / 416.606.3549

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry 1 ½ washroom. Close to school, bus, shopping. Avail. May 01, 11.
தொடர்புகளுக்கு: 647.280.6145

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable. Close to bus, school, shopping, etc. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.837.0653

**MIDLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school.
416.266.4789 leave message
416.980.5697 8:00am - 4:00pm

**MARKHAM & SHEPPARD** சந்திப்பிக்கு அருகாமையில் புதிய 2 bedroom bsmt for rent. Newly renovated washroom, internet, cable tamil tv. Close to TTC, school, mall, temple, etc.
தொடர்புகளுக்கு: 416.931.9561

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall, shopping. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.754.0823 / 416.291.3153
( Please leave the message)

**TAPSCOTT & FINCH**
3 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Single person or family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.829.7974

**MARKHAM & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall. Rent $700.
தொடர்புகளுக்கு: 416.305.9549

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Rent negotiable.
தொடர்புகளுக்கு: 416.286.8840

**14TH AVE & 9TH LINE**
Brand new 2 Bedroom bsmt for rent. Garage parking, cable, laundry. Avail. immediately. Close to mall, bank. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.625.1438

**MORNINGSIDE & SHEPPARD**
New 2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.520.5883 / 416.669.8711

**DENISON & MIDDLEFIELD**
New furnished Two Bedroom bsmt apt. for rent. Close to YRT, TTC,etc.
**KEEL & FINCH** Room for rent. Sep. entrance, parking, laundry
905.209.9212 / 416.562.5113

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom walkout bsmt for rent. Parking, laundry. Close to TTC. Avail. immediately
416.299.7208 / 416.871.8627

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, cable, utilities inclu. Avail. immediately.
416.492.6817 / 416.817.9283

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, school, TTC. Avail. April 15, 2011.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**NEILSON & FINCH**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. தொடர்புகளுக்கு: 416.562.4937 / 416.332.0936

**KENNEDY & LAWRENCE**
New 1 bedroom bsmt for rent. Sep. entrance with car parking with attached kitchen and sep. washroom. Avail. April 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.727.8681

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.3611

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, full washroom, living room, laundry. Close to bus stop, temple, stores. No smoking & No pets. Avail. immediately.
416.768.4271 / 416.768.4246
Weekdays 6:00pm / Weekends Anytime

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.8615

**14TH AVE & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2011. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrace, parking, laundry. Close TTC, mall. Avail. immediately. Small family preferred.
416. 464.4207 / 416.431.6349

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450 / 416.459.3006

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

**BELLAMY & PANDORO CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

**SHEPPARD & MORNINGSIDE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately. Couple or students preferred.
தொடர்புகளுக்கு: 647.882.3804

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

# HOUSE FOR RENT

**BRIMLEY & EGLINTON**
Newly renovated 3 bedroom house for rent. Laundry, parking. Close to TTC, school, mall. 2 Bedroom bsmt also available with sep. entrance.
தொடர்புகளுக்கு: 416.725.2041

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom house for rent. Close TTC, school, mall. Avail. immediately. Walkout bsmt also available.
தொடர்புகளுக்கு: 416.662.7984

**MCCOWAN & ELLESMERE**
3 அறைகள் கொண்ட Bungalow வீடு வாடகைக்கு உண்டு. மேல் தளம், கீழ் தளம் தனித்தனியாகக் கொடுக்கப்படும். Close to all facilities. Avail. Anytime. 647.706.4922
416.522.3314 / 905.554.2496

**MORNINGSIDE & SHEPPARD**
Brand new 3 bedroom Upper Level house for rent. 2½ Washroom, parking. Close to TTC, Scarborough Campus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.708.7202

**MORNINGSIDE & SHEPPARED**
2 Bedroom house for rent. Close to TTC, mall, school. Very big balcony. Avail. immediately.
416.847.9802 / 647.302.8597

# CONDO. FOR RENT

**EGLINTON & VICTORIAPARK**
2 Bedroom condo. for rent. Close to bus stop, mall, Eglinton Square, Victoria park subway station. Avail. immediately.
416.724.4953 / 416.451.8992

**SCARBOROUGH CENTER** பகுதியில்
Brand new 2 Bedroom + den condo. for rent. Parking. Close to Scarborough town center, subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.8253

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**BRIMLEY & DENISON**

1 Room in a bsmt for rent. Sep. entrance, laundry, cable, internet, kitchen. Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.919.1431

**MORNINGSIDE & ELLESMERE**

1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student preferred or working ladies.
416.286.2932 / 416.879.3650

**NEILSON & MCLEVIN**

1 Bedroom for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**KENNEDY & LAWRENCE**

1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence RT. Meals optional. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MIDDLEFIELD & ELSON**

Spacious rooms for rent. Sep. entrance. All amenities close by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.300.4530

**KENNEDY & EGLINTON**

1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**WARDEN & SHEPPARD**

ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. ஆண்கள், பெண்கள் விரும்பத்தக்கது அல்லது வயோதிபர் விரும்பத்தக்கது. 24 மணி நேர பராமரிப்பு. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**KENNEDY & ELLESMERE**

1 Room Apt. for rent. Close to all facilities. Avail. April 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.605.5475

**MARKHAM & SHEPPARD**

3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

**KENNEDY & LAWRENCE**

Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**LAWRENCE & PHARMACY**

**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

# WANTED

Used Toyota Corolla cars wanted. 1990 - 1997 Only. Any condition.
Steeve - 416.832.1359

மேலும் பக்கங்கள் 24, 26

# CONDO. FOR SALE

**WARDEN & FINCH**

2 Bedroom condo. for sale. 1 ½ Washroom, 3 car parking, cable. Close to all facilities. Avail. immediately.
416.230.7696 / 416.412.0406

# MYT TAX SERVICE

**Personal & Business**

$15 Per Personal Return.
Discounts for Low income.
Pick up and drop off.
Pl. Call: **905 .272 .7160 / 905.272.5422**

# SAREE BLOUSE

**அனைத்து தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# SPACE FOR RENT

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி றோட்டில் 3 பரப்பு காணியில் 1500 சதுர அடியில் 5 அறைகள் உள்ள மிகவும் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. இந்த வீட்டிற்கு பக்கத்தில் 1 பரப்பும் 6 குளிகள் கொண்ட வெறும் காணியும் விற்பனைக்கு உண்டு.
416.289.4996 / 416.827.1959

# COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

# CARS FOR BUY & SELL

2005 Toyota corolla, 2001 Toyota Sienna, 2003 Honda Accord, 2004 Camry, 2004 Corella, கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் **Van** வாடகைக்கு ஓட்டப்படும், Car cleaning செய்து கொடுக்கப்படும்.
அழையுங்கள் : **416.625.4146**

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***

# TUITION

**FINCH & MIDDLEFIELD**
**GTA Squre Unit #230**
**Chemistry, Physics, Math, English and Science.**

***Homework Help Grade 6 - 12.***

| | | |
|---|---|---|
| *Grade 8-10 -* | 1 subject - | $60 |
| | 2 subjects - | $100 |
| *Grade 11 & 12 -* | 1 Subject - | $80 |
| | 2 subjects - | $150 |

Specialist in University experienced teacher
**416.497.7660 / 647.771.6237**
**416.889.3191**

# TUTORING

**BRIMLEY & LAWRENCE**

For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

## மணமகன் தேவை

1981ஆம் வருடம் பிறந்து கனடாவில் University B.Sc.படித்து Registered Nurse ஆக பணிபுரியும் மணமகளுக்கு கனடாவில் வாழும் இந்துமதத்தைச் சேர்ந்த மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 647.955.7491

## மணமகள் தேவை

5" 2" உட்பட்டு இருத்தல் வேண்டும். University or Collage முடித்து வேலை செய்பவராக இருந்தால் விரும்பத்தக்கது! இந்து வேளாளர் குலம், வயது எல்லை 30 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு: ***905-472-4194***

# JOB JOB JOB

## வேலைக்கு ஆட்கள் தேவை

தோட்டம் துப்பரவாக்க, வீடு வெள்ளையடிக்க, துப்பரவாக்க உடனடியாக ஆட்கள் தேவைப்படுகிறார்கள். Full -time or part-time.
தொடர்புகளுக்கு: 416.269.5174

## உதவிக்கு ஆள் தேவை

**DERRY & 10TH AVE.**

மிசிசாக்காவில் வீட்டில் உதவி செய்வதற்கு ஒரு பெண் தேவை. தங்குவதற்கு தங்குமிட வசதியும் சாப்பாடும் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 905.824.8565

## வேலைக்கு ஆள் தேவை

Office Work & Sales Person wanted. Ladies preferred.
Pl. Call: 416.454.4466

## CASHIER தேவை

**FINCH & MIDDLEFIELD**

GTA Square mall இல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு இளம்பெண் cashier தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

**ICE CREAM TRUCK DRIVER WANTED**

G Licence - Ten vacant - $1000 or more per week, Calgary, Alberta. Male or female accommodation will be arranged. + Two A - Z Drivers needed. $18.00 per hour.
Contact: 403.818.2222

# CAR FOR SALE

1992 Honda Accord for sale. White colour. Good condition.
தொடர்புகளுக்கு: 647.960.4120

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM FOR RENT

## WARDEN & FINCH

சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. மாணவர்கள் அல்லது இளம் தம்பதியினர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின்
தொடர்பு கொள்ளவும்: 416.509.6780

# DENTAL ASSISTANT & DENTAL RECEPTIONIST

## SCARBOROUGH & BRAMPTON

***Experienced Dental Receptionist and Dental Assistance wanted. Email: rose_2010@live.ca***

***Fax: 416.733.9300***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070**

## Answers TUTORIAL 277

(1) bus had 3/4 of tank full of gas. 1/5 of it used. Therefore remaining is
3/4 x 4/5 = 3/5 of tank.

(2) Since (3u + 4v) and (6u - 2v) are linearly independent.
3 (3u + 4v + b(6u - 2v) = 0, where a = b = 0
3au + 4av + 6bu - 2bc = 0 (3a +6h) u + (4a - 2b) v = 0
Since a = u = 0 3a + 6v = 0, 4a - 2h = 0
ou + ov = 0. Hence u and v are linearly independent.

(3) The direction of v = (1,8) + t (3 , 7) is d = (3 , 7)
A direction perpendicular to d is = (7, -3) Eq n of line through
(4, 5) is r = (4, 5) + t (7, -3)

(4) C (x) = F + (x) c (x + h) = F + V (x + h)
Rate of chang of coct is Lim c(x +h) - c (x)/h
Which is independent of F.

(5) P (r) = $\pi r^2$ Rate of change of area is
Lim A(r +h) - A(r)/h = lim/h $\pi(r + h)^2 - \pi r^2$/h
h—>0 h h—>0 h
$\pi$ Lim (v + h - r) (r +h -r)/h = 2 $\pi$r
Where r = 100m Rate is 200$\pi$ $m^2$/m

### Tutorial 278 Questions

(1) How many possible seven digit telephone numbers are there within a given are code such that the first digit is 3, 5 or 6 (Gr. 12)

(2) Six people arrange themselves in a row for a photograph. How many arrangements are possible if the two tallest people are at opposite ends of the row? (Gr. 12)

(3) There are ten questions on a true / false test. Student attempt all questions.
(a) Show how an answer sheet can be represented by a sequence of length 10.
(b) How many different answer sheets are possible? (Gr. 12)

(4) Find the point on the parabolic are y = $x^2$ with domain x ∑ (0, 1/√k) that is close to the point (0, 1) (for Gr. 12)

(5) Find the equations of the tangent to the graph $Y^3$ - 3xy - 5 = 0 at the point (2, -1) (For Gr. 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at ***Scarborough & Stouffville***
***Contact: 647.340.9490 / 647.831.0363***

**Tutoring**

Gr.1-12; College & University
* English * French * Math * Physics * Chemistry * Biology *

- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

**GTA Tutors**
**Ph: (647) 705 0725**

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

# நினைவாற்றல்...

### 15ஆம் பக்கத்தொடர்ச்சி

நினைவாற்றலுக்கு உதவுகின்றது. வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்ளும் (lifelong learning) செயற்பாடு நினைவாற்றலை வலுவூட்டுவதோடு, நினைவாற்றல் குறைபாடு வராமல் தடுக்க வழி செய்கின்றது என்பதைப் பல ஆய்வுகளை மேற்கோள் காட்டி கூறப்பட்டிருக்கின்றது. மூளைக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் உணவு வகைகளை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளுதலும் அவசியமாகின்றது. நாம் இதுபற்றி விரிவாக ஆய்வு செய்து கொள்வோம். நாம் வாழ்வில் நமக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ள செயற்பாடு களை செய்து வருதலும் நினைவாற்றலை வளர்க்கவும், நினைவாற்றல் குறைபாட்டைத் தடுக்கவும் உதவும். எமது வேலைப் பழுவினால், அல்லது வேறு காரணங்களால் மன அழுத்தம் ஏற்படுவது வழக்கம். ஆனால் இந்த அழுத்தம் எம்மைப் பாதிக்காதவாறு நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாக உள்ளது. நாம் குறைந்தது நாளொன்றுக்கு ஆறு மணித்தியாலம் வரை நித்திரை செய்ய வேண்டும். அப்போது தான் நாம் மறுநாள் எமது நினைவாற்றலைச் சீராகப் பேணிக்கொள்ள முடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாம் ஆராயப்பட்ட கருத்துக்களைப் பார்க்கும் போது ஒரு விடயம் தெளிவாகின்றது. நாம் சீரான வாழ்க்கை முறைகளை அறிந்து வாழ்வாங்கு வாழுதலும், நல்ல மனிதர்களாக பலருக்கும் பயனுள்ளவர்களாகவும் வாழுதல் எமது மூளையின் செயற்பாடுகளை நல்ல நிலையில் பேண வழிவகுக்குின்றது. நாம் இந்த நினவாற்றல் கட்டுரையில் தொடர்ந்து பல புதிய விடயங்களை ஆராய்வோம். ஏற்கெனவே தொட்டுச் சென்ற பல விடயங்களைப்பற்றியும் விரிவாக ஆராய்வோம். அதற்காகக் காத்திருங்கள்.

"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு" (குறள் 503 அதிகாரம் 51 தெரிந்து தெளிதல்) என்ற குறளின் பொருளைப் பார்ப்போம். இந்தக் குறளின் பொருள் "அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து குற்றம் இல்லாதவரிடத்திலும் ஆராய்ந்து பார்க்கும்போது அறியாமை இல்லாதிருத்தல் அருமையாகும்"என்பதாகும். எமது தேடலில் இந்தக் குறளையும் நினைவுபடுத்திக் கொள்வோம். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்......

**Tutoring**



***Tutoring for students from grade 3 to 12.***
Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student. Home visit also available.

***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***
Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month Location: Near **Birchmount & Sheppard.**
For more information contact *Kula* (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at
**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# நூலகங்களின் பயன்

நூலகத்தில் வெவ்வேறு வகையான புத்தகங்கள் உள்ளன. ஒவ்வொரு புத்தகமும் பல்வேறு விடயங்களை கூறும். பாடசாலையிலும், நகரங்களிலும் நூலகங்கள் உண்டு. அவை எமக்கு பல பயன்களைத் தருகின்றன.




பள்ளிக்கூடத்தில் இருக்கும் நூலகத்தில் இருக்கும் புத்தகங்கள் எமது படிப்பிற்கு உதவும். சில நாட்களில் பாட நேரத்தில் நாங்கள் நூலகத்திற்கு செல்வோம். அதேபோல், சில நாட்கள் இடைவேளையின் பொழுதும் செல்வோம். ஆசிரியர் எமக்கு வீட்டு வேலை தரும்போது, நாங்கள் நூலகத்தில் இருந்துதான் தகவல்களை எடுப்போம்.

ஒவ்வோர் நகரத்திலும் நூலகங்கள் உண்டு. இவற்றில் தகவல் உள்ள புத்தகங்களும், கதைகள் உள்ள புத்தகங்களும் உண்டு. வீட்டில் புத்தகம் வாங்க வசதி இல்லாவிட்டால், புத்தகத்தை சில நாட்களுக்கு நூலகத்தில் வாங்கி, வாசித்து விட்டு, திருப்பிக்கொடுக்கலாம். இது இலவசம்.

புத்தகம் வாசித்தால் அறிவு வளரும். பல்வேறு விடயங்களிலும் அறிவு வளரும். கல்வி, ஒருவராலும் அழிக்க முடியாத செல்வம்.
'கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவரிற்கு மாடு அல்ல மற்றையவை' (திருக்குறள்)

இந்த உயர்ந்த செல்வம் புத்தகத்தை படிப்பதால் வளரும். நூலகங்கள் பண வசதி இல்லாதவருக்கும் உலகத்தின் மிகப்பெரிய செல்வத்தை கொடுக்கின்றன.

'குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு! (நாலடியார்)

கூந்தல் அழகும், சீலை அழகும், மஞ்சள் பொட்டு அழகும் அழகில்லை - கல்வி மட்டும் தான் அழகு என்று நாலடியார் கூறுகிறது.

நூலகங்கள் எமக்கு அழகான மற்றும் அழியாத கல்விச் செல்வத்தைத் தருகின்றன.



**ஞா. ஆரணி**
அகவை 12


## SPACE FOR RENT / LEASE

**BRIMLEY & LAWRENCE**

*Offices, classes, insurance office, office meeting, computer repair service* போன்ற வர்த்தகங்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 647.857.1179

## DILAN PAINTING RENOVATION



**உங்கள் அனைத்து வகை *Painting* தேவைகளுக்கும் அழையுங்கள்.**

**உங்கள் வீடுகளை அலுவலகங்களை மிகக் குறைந்த விலையில், குறுகிய நேரத்தில் மிகச் சிறந்த முறையில் 15 வருட அனுபவம் வாய்ந்தவர்களால் வர்ணமயமாக்கித் தரப்படும். அழையுங்கள்.**

*Sub Contractor From Home Depot*

தொடர்புகள்: **416.828.1740**

## RESTAURANT FOR SALE

Brand New Bar & Grill restaurant for sale.
Over 30 seats. LLBO.
**MIDDLEFIELD & FINCH**
For more info. call: 416.677.4707

குப்பிளான் விக்கினேஸ்வரா மக்கள் மன்ற ஆதரவில்

**திரு. சிவபாதம் கணேஸ்குமார் எழுதிய**

**இந்துநாகரிகம்**
**ஈழத்து இந்து சமய வரலாறு**

## நூல் வெளியீட்டு விழா

**இடம்:** *117 Crockford BLVD (Warden & lawrence)*

**காலம்:** 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணி

தொடர்புகளுக்கு: ***416.398.3319 416.712.5424 / 416.666.4212***

# நாமும் எமது செல்லிடத்தொலைபேசியும்

## மின்வலையில் வந்தவை - 12

## Cell phone

### முன்னுரை

விஞ்ஞான உலகில் நாடோறும் புதிய கருவிகளும் கண்டுபிடிப்புகளும் நடைபெறு கின்றன. முன்பெல்லாம் கைத்தொழில் புரட்சியைப் போன்று கால் நூற்றாண்டுக்கு முன்பு கணினிப்புரட்சி ஏற்பட்டு பல வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியது. அண்மைக் காலமாக செல்லிடத் தொலைபேசி பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. பேச்சுத் தொடர்புக்கான கருவியாகக் கண்டு பிடிக்கப்பட்ட இது, தற்போது பேச்சு, வசனம், படம், வீடியோ எனப் பல்வேறு பரிமாணங்களுடன் விரிந்து வியாபித்துள்ளது.

இது உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பயன்பாட்டிலுள்ளது. சாதாரண மக்கள் யாவரும், உழவர் முதல் உத்தியோகத்தவரை, தோட்டக்காரர், பூக்காரர், மீன்விற்பனையாளர், மில்முதலாளி எனப் பாகுபாடின்றிப் பலரது கைகளிலும் தவழ்ந்து விளையாடுகிறது இக்கருவி. பிச்சைக்காரர் முதல் பள்ளிப் பிள்ளைகள் வரை பரந்த பாவனையிலுள்ளது. அண்மையில் அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கும் இயற்கை அனர்த்தங்களின் போதும், போர்ச் சூழல்களிலும், மின்சாரந் துண்டிக்கப்பட்ட நிலையில் பிற தொலைத் தொடர்புச் சாதனங்கள் இயங்காத நிலையில், இயங்கி அரும்பெருஞ்சாதனை களை நிகழ்த்துகிறது இந்த வலிமையான செல்லிடத்தொலைபேசி.


பல்வேறு பயன்பாடுகளை மனித சமுதாயத்துக்குத் தருகின்ற இதனை அளவோடு பாவித்து உடல் நலத்தைப் பாதுகாப்பது முக்கியம் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற முதுமொழியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### செல்லிடத் தொலைபேசி இயங்கும் முறை

1. ஒருவர் செல்லிடத் தொலைபேசியை ஆரம்பித்தவுடன் அதன் அன்ரெனாவிலிருந்து கிடைக்கும் மின்காந்த அலைகளை அண்மையிலிருக்கும் அடிப்படை நிலையம் பெறுகிறது.
2. அடிப்படை நிலையத்திலிருந்து இவ்வலைகள் மாற்று நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அழைப்பவரினதும் பெறுபவரினதும் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன.
3. பின்னர் இவற்றை மாற்றுநிலையம் பெறுபவருக்கு அண்மையிலுள்ள அடிப்படை நிலையத்துக்கு அனுப்பும்.
4. இவற்றை அது பெறுபவரின் அன்ரெனாவுக்கு அனுப்பும்.
5. மணியொலித்ததும் அவர் தனது தொலை பேசியைத் திறந்தவுடன் இருவருக்கும் இடையில் தொடர்பு ஏற்படுகிறது.

அழைப்பவர் (1) பெறுபவர் (2)

அடிப்படைநிலையம் (1) மாற்றுநிலையம் - அடிப்படைநிலையம் (2)



படம் -1


### செல்லிடத் தொலைபேசி எவ்வாறு கதிர்வீச்சை ஏற்படுத்துகிறது.

படம் - 1

- செல்லிடத் தொலைபேசி கதிரலைகளை எல்லாத்திசைகளுக்கும் அனுப்பும்.
- பெரும்பாலான இதன் சக்தி வெளியில் இழக்கப்படும்.
- இதன் ஒரு பகுதி அடிப்படை நிலையத்தால் பெறப்படும்.
- இதன் இன்னொரு பகுதி எங்கள் தலையை வந்தடையும்.

அடிப்படை நிலையம் - அடிப்படை நிலையத்திலிருந்து பெறப்படும் சக்தி - எமது தலையைத் தாக்கும் பகுதி

பிறதிசைகளில் இழக்கப்படும் சக்தி.



படம் -2

### செல்லிடத் தொலைபேசி உணர்கொம்பிலிருந்து (Antenna) வெளிவரும் மின்காந்த அலைகள் கதிர்வீச்சின் ஒப்பீடு

படம் - 2

**மின்கம்பிகள்**

AM FM வானொலி TV

செல்லிடத் தொலைபேசி

மைக்குறோவேவ் அடுப்பு

வெப்ப விளக்கு

தோல் நிறமேற்றல்

மருத்துவ கதிர்கள்

மீள்திறன் (Hz)

## அதிஉயர் சக்தி வெளிப்பாடு

படம் - 3

- மத்திய அரசின் தொலைதொடர்பு ஆணையம், செல்லிடத் தொலைபேசிகள் 1.6 w/kg க்கு மேற்படக்கூடாது என குறிப்பான உள்வாங்கு வீதம் (Specified Absorption Rate 'SAR') என நிர்ணயித்துள்ளது.

- துறையூரான் -


- இதன் SAR இதற்கும் குறைவாக இருந்தால் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளையாது.

### பின்வரும் மூன்று வழிகளில் SAR ஐ அறிந்து கொள்ளலாம்.

1. உங்கள் செல்லிடத் தொலைபேசி பாவிப்போர் கையேடு.

2. செல்லிடத் தொலைபேசித் தயாரிப்பாளர் வலைத்தளத்துக்குச் சென்று உங்கள் தொலைபேசி மொடலைக் குறித்துப் பெறலாம்.
http://www.mmfa.info/public/sar.csm

3. மத்தியஅரசு தொலைத்தொடர்பு ஆணைய வலைத்தளம் சென்று உங்கள் தொலைபேசி FCCID ஐக் குறித்து பெறலாம்.
http://www.fcc.gov/ont/ca/fccid/



படம் -3

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 4 பகுதி 16**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

இது,,,,,,நீங்கள. திலகமக்காதானே! குரல் வந்த திசையை நோக்கிப் பார்த்தாள் திலகம். புருவங்களைச் சுருக்கிப் பார்த்தவள், டேய்! நீ நாகராசன்தானே! எத்தனை சென்மம் எடுத்தாலும் உன்ரை குரலை மறக்க மாட்டேன்ரா! எங்கையடா என்ரை மகன்? என்னடா செய்தனி என்ரை பிள்ளையை?... அடுக்கடுக்காய் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே குரல் வந்த திசையில் ஆவேசமாகத் தட்டுத் தடவிக் கொண்டு போனாள், திலகம்.

தாயாரின் ஆவேசத்தையும் பதட்டத்தையும் கண்ட இனியன், ஆச்சரியப்பட்டான். ஆனாலும் உடனே ஓடி வந்து தாயாரைப் பிடித்துக் கொண்டான். அம்மா அவசரப்படாதையுங்கோ! கொஞ்சம் பொறுங்கோ.

**◊ சி.வி. நாதன் ◊**

பொறுக்கிறதோ! உவன்ரை குரலைக் கொண்டே சொல்லுவேன் உவன் ஆரெண்டு. சொந்தச் சகோதரம் போலை எல்லே நடத்தினான். எனக்குத் துரோகம் செய்து என்ரை பிள்ளையை,... பச்சைப் பிள்ளையை.. டேய் எங்கையடா என்ரை பிள்ளை? உவன்தான்ரா என்ரை பிள்ளையை, உன்ரை சகோதரனை என்னட்டை இருந்து பிரிச்சவன். உவனை, உவனை.. கோபத்துடன் கத்திக் கொண்டு திமிறும் தாயாரைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறினான் இனியன்.

ரேவதி ஓடிவந்து மாமியாரைப் பிடித்துக் கொண்டு மாமி ஒரே சிக்கலாக இருக்குது. கொஞ்சம் அமைதியாய் இருங்கோ. மாமி கணவனுடன் சேர்ந்து திலகத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தாள். இல்லைப் பிள்ளை, உனக்குத் தெரியாது. உந்தப் பரதேசியை எப்பிடி நம்பி என்ரை பிள்ளையைக் குடுத்தனான். உவனுக்கு என்ன குறை விட்டனான்? என்ரை பெத்த வயிறு பட்டபாடு உனக்குத் தெரியாது பிள்ளை. இப்பதான் அம்பிட்டு இருக்கிறான். உவனை சும்மா விடப்பிடாது இன்னமும் என்னென்னவோ சொல்லிக் கொண்டு பெரியவன் நிற்கும் திசையை நோக்கிப் போக திலகம் எத்தனித்துக் கொண்டு இருந்தாள்.

இதே நேரத்தில் சின்னவன் மற்றவனைப் பார்க்க, அவனும் ஆம் என்பது போலத் தலையசைக்க, தாயைச் சமாதாணப்படுத்திக் கொண்டிருந்த இனியன் இதனைக் கண்டு கொண்டான். அம்மா, நான் இன்பன் வந்திருக்கிறேன் அம்மா என்ற சின்னவன், இருக்கையில் இருந்து மெதுவாக எழுந்து திலகத்தை நோக்கி வர, டேய்! அங்கையே நில்லு! கிட்ட வராதை. கொலைதான் விழும்.

அவன் அவசரப்படவில்லை. வெகு நிதான-மாக இருந்தான்.

திலகம் அடங்கிவிட்டாள் என்ரை பிள்ளை வந்திருக்கிறானா? எங்கை, எங்கை! கிட்ட வா மகனே, அம்மாவுக்கு கண் தெரியாதடா, மகனைப் பார்க்க, அணைக்கத் தவிக்கும் தாயின் தவிப்பு, திலகத்தின் நிலையை இப்ப பார்க்க, பரிதாபமாக இருந்தது. அம்மா அவசரப்படாதையுங்கோ. நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ என்ற இனியன் தொடர்ந்தான். அம்மா இஞ்சை இரண்டு விசருகள் வந்திருக்குதுகள். ஒருவனுக்கு 25 அல்லது 30 வயதிருக்கும். தன்னை இன்பன் எண்டு சொல்லுறான். மற்றவனுக்கு 50 வயதுதான் இருக்கும். தன்னை நாகராசுமாமா எண்டு சொல்லுறான். எனக்கு இப்ப 25 வயசா? மாமாவுக்கு என்ன 50 வயசா?

அப்ப என்ரை பிள்ளை இல்லையா? என்னை அம்மா எண்டு கூப்பிட்டது ஆர் தம்பி? திலகத்திற்கு குழப்பமாக இருந்தது. அம்மா! நான் இன்பன்தான் வந்திருக்கிறேன். என்னோடை நாகராசண்ணையும் வந்திருக்கிறார். சின்னவன் மீண்டும் கூறினான்.. அம்மா இதுகள் இரண்டும் நல்ல லூசுகள் போலை இருக்குது. ஆனாலும் அந்தச் சின்னவன் என்ரை பிள்ளையைப் போலைச் சாயலிலை இருக்கிறான். இதுகளை வெளியிலை விட்டால் பிரச்சனைதான். போலிசிட்டைத்தான் குடுக்க வேணும். இனியன் சொல்லி முடிக்கவில்லை, சின்னவன் இடைமறித்தான். அவனது குரலில் இப்போது தெளிவு இருந்தது. முகத்தில் நல்ல கட்டுப்பாட்டுத் தன்மை தொனித்தது. போலிஸ் வேண்டாம். அப்பிடி போலிசுக்கு உங்களால் தகவல் ஏதும் குடுக்க முடியாது. என்னைப் பார் இனியன். என்னைப் பாக்க பைத்தியம் போலையா தெரியுது. நான்தான் இன்பன், அவர்தான் நாகராசண்ணை! உங்களைப் பாத்துக் கதைச்சுப் போட்டுப் போகத்தான் வந்தனாங்கள். எங்களுக்கு உங்கடை ஒண்டும் தேவையில்லை. நீங்கள் பயப்படவும் தேவையில்லை. என்றவன், ஒரு நேர்த்தியான சீருடை அணியாத உயர் அதிகாரியினைப் போல் நின்றான்.

அந்த நிலையில் நின்ற அவனைப் பார்த்த இனியன், இவனையா பைத்தியம் எண்டு சொன்னனான் என நினைத்தான். அவ்வளவுக்கு அவனது தோற்றமும் தோரணையும் இருந்தது. நாங்கள் நாகராசு மாமா எண்டுதானே கூப்பிடுவோம். ஆனால நீ எப்பிடி நாகராசண்ணை எண்டு கூப்பிடுவாய்? இதுவே காட்டுது இனியன் முடிக்கவில்லை, சின்னவன் மற்றவனைப் பார்த்துக் கொண்டே சொன்னான் புது இடம் புதுச் சூழல். இவ்வளவு காலமும் நாகராசு மாமாவை நான்தான் நாகராசண்ணை எண்டு கூப்பிடத் தொடங்கினனான். உங்களால் நம்பமுடியாது என்று எங்களுக்கு நன்றாகவே தெரியும். இவையெல்லாம் நாங்கள் எதிர்பார்த்தவை தான். அதனால்தான் நாங்கள் அமைதியாகவே இருக்கின்றோம். தம்பி சொன்னதுபோலவே நான்தான் நாகராசன். அவர் இன்பன். உங்கடை மாமா இராமலிங்கம்தானே! அவனைக் கூப்பிட்டுப் பாருங்கள், ஒருவேளை என்னை அடையாளம் சொல்லுவான். இருவரும் கூறுவதைக் கேட்டு இனியன் பேசாமல் இருந்துவிட்டு இதுகளை எப்பிடி நம்புறது? என்னோடை ஒட்டிப் பிறந்த இனியனுக்கும் என்ரை வயதாகத்தானே இருக்க வேண்டும். ஆனால் உன்னைப் பாத்தால் இருவத்தைஞ்சு வயதுப் பொடியன் போலை இருக்குது. ஆர் இதை நம்புறது, எப்பிடி நம்புறது? அதுவும் எங்களுக்குத் தெரியும். உங்களாலை மாத்திரமல்ல, ஒருவராலையுமே நம்பமுடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். விசயத்தைச் சொன்னாலும் விளங்கிக் கொள்ளுவீர்களோ தெரியவில்லை. என்டாலும் சொல்லத்தான் வேணும், சொல்லுகிறோம்.. அதுக்குப் பிறகு வேணுமெண்டால் உங்கடை 911 ஐக் கூப்பிடுங்கோ சின்னவன் சொல்ல, நாகராசன் தொடர்ந்தான்.

(இன்னமும் வரும்)

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

நூல் வெளியீடு
"எம்மை நாம் பாதுகாப்பது எப்படி"
என்ற மருத்துவ கைநூல்
இடம்: 1537 - 1539 Warden Ave.
(Warden & Ellesmere) அமைந்துள்ள கனேடிய நயினாதீவு நாகம்மாள் கோவில் கலாச்சார நிலையத்தில்
நேரம்: மே 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
தமிழ் அறிஞர்களும், வைத்திய நிபுணர்களும் மற்றும் அனைவரும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நூல் வெளியீட்டு அமைப்பாளர்கள் கனடா
647.718.3909

# வாய்த்தது நம்தமக்கு ஈதோர் மனிதப்பிறவி!

ஒரு மடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித் மீது விழுந்து
பனியில் ஓர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும் அரும்பு கமடம் இதென்று
பார்வை மெய்வாய் செவிகால் கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து



தாயின் வயிற்றில் கரு உருவாவதை மருத்துவ ரீதியாக மருதலானர் (பட்டணத்தடிகள்) மேலுள்ள பாடலில் பதிந்துள்ளார். ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து குழந்தையை பிரசவிப்பவர்கள் தாய்மார். குழந்தை ஈன்று புறந்தருதல் தாயின் தலையாய கடமை. ஈன்றாளுமாய் என்று இறைவனை விழித்திருப்பது தாயின் தனித் தன்மையை உணர்த்துவதாகும். குடும்பம் விருத்தியுற, குலம் விளங்க, வாழையடி வாழையாக வாழ்ந்து வம்சம் தொடர வகை செய்பவள் தாய். பால்போல் வெளுத்து, நூல் போல் இழைத்து, பத்தியம் இருந்து காத்து பண்டிதனாய் எண்திசையும் விளங்கப்பாடுபடுபவள் தாய். அந்தத் தாயின் காலடியின் கீழ் தான் சுவர்க்கம் உனது. ஈன்ற பொழுதிலும் மகன் சான்றோன் எனக் கேட்கும் தாய் பெருமையடைய பிறப்பிற்கு கண்ணதாசன் கற்பிக்கும் காரணம் இது.

தந்தை தவறு செய்தார் தாயும் இடம் கொடுத்தாள்
வந்து பிறந்து விட்டோம் பந்தம் வளர்த்து விட்டோம்

மேலும்
ஒருவரின் துடிப்பினிலே விளைவது கவிதையடா?
இருவரின் துடிப்பினிலே விளைவது மழலையடா

என்று ஒருவனும் ஒருத்தியும் உறும் இன்பக் களிப்பினில் மழலை உருக்கொள்கின்றது என்பர். குழந்தை தெய்வத்தின் கொடை. எனவே குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. உயிர் பலபிறவிகளை எடுக்கின்றது என்பது மணிவாசகர் கருத்து.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய் எல்லாப் பிறப்பும்
என்று பலபிறவிகளை எடுத்து இளைத்துவிட்டேன், களைத்துவிட்டேன் என்கின்றார்.

பிறவிகளின் சிகரம் மனிதப்பிறவியாகும். எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவிதான் எய்தினும் அரிது. மானிடர் ஆதல் அரிது என்றார் ஔவையார். எனவே வாய்த்தது நமக்கு ஈதோர் பிறவி என்று பெருமை கொள்ளலாம். அந்தப் பிறவியை எடுத்த நாம் பெருமைப்பட வாழ வேண்டும். வாழ்வாங்கு வாழ வேண்டும்.

“நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் பூமியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி எனை சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய் வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கு” என்ற பாரதியாரின் ஆதங்கத்திற்கேற்ப மனிதனும் மகத்துவம் பெறலாம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் தெய்வநிலை எய்தலாம் என்பது வள்ளுவம்.

மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும் ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று போற்றிப் புகழவேண்டும். பட்டம், பதவி, பணம், புகழ் எனும் பாதையிலேயே வாழ்க்கை நகர வேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பு, அந்நிலை சிலருக்கு மாத்திரம் கிட்டி விடுகின்றது. அத்தகையோர் கருவில் திருவுடையவராவர்.

பெற்றோர் தமது பிள்ளைகள் மருத்துவராக, பொறியியலாளராக, கணக்காளராக வரவேண்டும் என்றே நினைத்துப் பாடுபடுகின்றார்கள். பிள்ளை விரும்பாத ஒருதுறையில் அவனை செலுத்துவது பலவித தொல்லைகளை ஏற்படுத்தி விடுகின்றது. எனவே ஏற்ற வழியில் பொருத்தமான துறையில் செல்வதே நல்லது. ஆனால் தன்பிள்ளை நல்ல மனிதனாக வாழ வேண்டும் என்று எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை. உடம்பின் உள்ளே இருக்கும் உள்ளொளியை உணர்ந்து கொண்டால் மனிதத்துவம் மலரும். அப்படியானவர்கள் மரணித்த பின்னரும் வாழ்கிறார்கள்.

பாசமுள்ள பார்வையிலும் கருணை உள்ள நெஞ்சினிலும் கடவுள் வாழ்கின்றான்.

பலநூல் படித்து நீயறியும் கல்வி பொது
நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம் - பிறர்
உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம் - இவை
அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்

இதனை சிந்தையில் கொண்டு நடமாடும் தெய்வநிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ள மனிதன் முயல வேண்டும். மனிதன் நல்லவனாய் இருந்துவிட்டால் மண்ணுலகே சுவர்க்கம்.




நா. க. சிவராமலிங்கம்

# குறிஞ்சிப் பாடல்களில்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலம் புடைபெயரினும் நீர் திரிந்து பிறழினும்
இலங்கு திரைப் பெருங் கடற்கு எல்லை
தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடுஎவன் உடைத்தோ- தோழி நீடு மயிர்க்
கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றறை
புதைத் தொடுபு உடையூஉப் பூநாறு
பலவுக்கனி
காந்தள்அம் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொடு அமைந்த நம்
தொடர்பே?
மதுரைக் கொல்லன் புல்லன்




நிலம் பிரிந்து அது இடம்பெயர்ந்து போனாலும், ஆழிசூழ் இவ்வுலகத்து நீரெல்லாம் மாறிப் பொய்த்துப்போனாலும், இல்லாது வரண்டு போனாலும், நீலமயமாகக் காட்சிதருகின்ற இந்தக் கடலுக்கு நீர் வற்றி எல்லை தெரிந்தாலும், உண்மையை உரைக்கின்ற தன்மையுடை பத்தினிப் பெண்கள் வெளியே வர அல்லது உள்ளத்தைக் காட்ட பயந்து இருப்பது யாருடைய பிழை அது அவர்களது பிழையல்ல இயல்பாகவே பெண்களிடம் கொண்டுள்ள அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களின் பாற்பட்டதன்றோ? எனது தோழி நேரடியாகத் தனது காதலை வெளிக்காட்டாமல் மறைத்து வாழுதல் நான் செய்த தவறோ என் அன்புத் தோழியே! என அவள் தோழிக்குத் தனது காதலை எடுத்துரைத்து அதனைத் தனது காதலனுக்கு எடுத்துரைக்க வேண்டுகின்றாள். இல்லவே இல்லை. மாறாக அவள் உன்மீது அளவு கடந்த காதலை வைத்துள்ளாள். அவள் தொடர்ந்து தனது காதலன் பற்றி அவனது நாட்டின் சிறப்புக்கு எடுத்துக்கையாளுவது இனிய தீம்கனியாம் பலாப்பழம் நிறைந்த மலைச்சாரலை உடைய நாட்டைச் சேர்ந்தவனே எனது காதலன் எனக்குறிப்பிடுவதனால் சிறந்த கனியாக பலாப்பழத்தை எடுத்துக்கூறுவது அக்கனிய-ின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. காதலினிமை பலாக்கனியின் இனிமை போன்றதா? எனத்தோன்றும் அளவிற்கு பலாக்கனியைப் பற்றிப் பண்டைய புலவர்கள் செய்யுள்கள் யாத்துள்ளமையிலிருந்து புலனாகின்றது. முக்கனிகளில் ஒன்றான பலாக்கனி தெவிட்டாத சுவையைத் தருவது. அதன் சுவை தனித்துமானது.

# நாகரிகங்களின் மோதல் - 5

அண்மையில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'விடுதலை' என்ற நூலைப் படிக்க நேர்ந்தது. பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் அந்த நூலில் அமெரிக்க வரலாற்று அறிஞர் 'சாமுவேல் ஹண்டிங்ரன்' முன்வைத்த 'நாகரிகங்களின் மோதல்' என்ற வரலாற்றுக் கோட்பாடு தொடர்பாக 'உலக வரலாறும் மனித விடுதலையும்' என்ற தலைப்பிலான கட்டுரையில் பாலசிங்கம் அவர்கள் சுருக்கமாகவும், சுவைபடவும் சில விடயங்களைக் கூறியுள்ளார்.

அவற்றில் என் வாசித்தலுக்கூடாகப் பெறப்பட்டவை குறித்து சிறிது அலசலாம் என்று எண்ணுகின்றேன். சமகால, எதிர்கால உலக நெருக்கடிகளின் உச்சப் பரிமாணமாக வேறுபட்ட நாகரிகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் மோதிக்கொள்வது வாயிலாகவே மனித வரலாறு கட்டவிழ்ந்து செல்லும் என்பதே 'சாமுவேல் ஹண்டிங்ரனின்' கோட்பாட்டு மையமாகும்.

அவரது கோட்பாட்டை மேலும் அழுத்தியுரைக்கு முகமாக 1997 ஆம் ஆண்டு 'நாகரிகங்களின் மோதலும் உலக ஒழுங்கை மீளமைத்தலும்' என்ற நூல் அவரால் மேலும் வெளியிடப்பட்டது. பனிப் போர் முடிவு கருத்தியல் முரண்பாடுகளையும், சிந்தாந்தச் சிக்கல்களையும் செயலிழக்க வைத்த



நிலையில் சித்தாந்தங்களும், அரசியல் அமைப்பு வடிவங்களும், பொருளாதாரக் கட்டமைப்புக்களும் சமுதாயங்களின் தனித்துவத்தை ஆழ்ந்து அவதானிக்கத் தவறிவிட்டன. ஆனாலும் பண்பாட்டு அடையாளங்களே மனித சமூகங்களின் தனித் தன்மைகளை, அடையாளங்களை வரையறை செய்கின்றன. எந்த மக்கள் கூட்டமும் தங்களை இனம் கண்டு கொள்ளவும், இனம் காட்டிக் கொள்ளவும் பண்பாட்டு அம்சங்களே ஆதாரங்கள்.

பண்பாட்டின் அதி உயர் தோற்றமே நாகரிகம் எனலாம். சமூகங்களின் வரலாற்றுத் தொடர்ச்சியானது மனித நாகரிகங்களின் கதை சொல்லல்களாக முடிவுறாத தொடர்ச்சியாக நீள்கிறது. இத் தொடர்ச்சியில் வளர்ச்சி பெற்ற, வளர்ச்சி பெற முயலும் பெரு நாகரிகங்கள் ஆதிக்கப் போட்டியை நிகழ்த்துகின்றன. முரண்பட்டுக் கொள்கின்றன. புரட்சிகள் எழலாம், விழலாம், சமூக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். விதி விலக்காக கால வெள்ளத்தில் அமிழ்ந்து போன நாகரிகங்கள் இருந்த போதிலும் பெரு நாகரிகங்கள் இந்தக் காலச் சூறாவளி-களையெல்லாம் கடந்து தாக்குப் பிடிக்கின்றன என்றெல்லாம் 'சாமுவேல் ஹண்டிங்ரன்' கூறுகின்றார்.

இந்த 'நாகரிகங்களுக்கான மோதல்' வரலாற்றில் பெரிது, சிறிது என்ற எல்லைகளைக் கடந்து அனைத்து வகை மக்கள் கூட்டத்துக்குமான பொதுமையாக அமைந்து விடுமா? என்ற கேள்வியே என் ஆழ் மனதில் நெருடிக் கொண்டிருந்தது.

சிறிலங்காவிலே இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் இன முரண்பாட்டில் தமிழ், சிங்கள ஆகிய இரு இனங்களும் மொழி, மதம், பண்பாடு என அனைத்திலும் வேறுபாடு கொண்டவை. இந்த முரண்பாட்டினை தேசிய இன முரண்பாடாகவே உலகம் கண்டு கொள்கிறது. இவற்றை நாகரிகங்களுக்கிடையிலான மோதலாகவும் நோக்க முடியுமா? என்பது குறித்தே நான் சிந்திக்க விழைகிறேன்.

இஸ்லாமியப் பண்பாட்டு எழுச்சியின் வரலாற்றுப் போக்கு மேற்குலக கிறீஸ்தவ நாகரிகத்தோடு முரண்படுவதை இன்று நாம் காணுகின்றோம். பல கோடி முஸ்லீம் மக்கள் தமது மதத்தை நாகரிகச் சின்னமாக நோக்குவதை, தமது வாழ்வின் அர்த்த பரிமாணங்களை இஸ்லாமிய மத நம்பிக்கைகளுக்கு ஊடாகப் பெற முயல்வதை நாம் அவதானிக்க முடியும்.

**தொடர்ச்சி 34ஆம் பக்கம்**




**ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்**

**பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்**







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# ஆசியா அணிகள்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ள சிட்டகாங் நகரில் இங்கிலாந்து - வங்கதேசம் அணிகளுக்கு இடையே நடை-பெற்ற போட்டியில், இங்கிலாந்து அணியை வீழ்த்தி சாதனை புரிந்தது வங்கதேசம். முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 225 ரன்களை மட்டுமே எடுத்தது. தொடர்ந்து, களமிறங்கிய வங்கதேசம் அணி 49 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 227 ரன்களை குவித்து வெற்றிவாகை சூடியது.

மோசமான தோல்விகள்: மேற்கிந்தியத்தீவுகள் - வங்கதேசம் அணிகளுக்கு இடையேயான போட்டியில் முதலில் ஆடிய வங்கதேசம் 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 58 ரன்கள் மட்டுமே எடுத்தது. தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 12.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 59 ரன்களை குவித்து வெற்றி பெற்றது. சென்னையில் நடைபெற்ற நியூசிலாந்து - கென்யா அணிகளுக்கு இடையேயான போட்டியில், முதலில் பேட் செய்த கென்ய அணி 23.5 ஓவர்களில் 69 ரன்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. தொடர்ந்து, களமிறங்கிய நியூசிலாந்து அணி 8 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 72 ரன்களை எடுத்து எளிதாக வெற்றியை எட்டியது. சிறந்த ஆல் ரவுண்டர்கள்: சிறிய அணிகளில் இடம்பெற்றிருந்தவர்களில் ஆல் ரவுண்டர்களாக ஜொலித்தவர்களில் நெதர்லாந்து வீரர் ரெயன் டென் தஸ்சாத்தேவும், அயர்லாந்து அணி வீரர்கள் கெவின் ஓ பிரையன், மூனி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இதில், ரெயன் டென் தஸ்சாத்தே இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 110 பந்துகளில் 119 ரன்கள் எடுத்தார். இவர், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 10 ஓவர்கள் வீசி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். மேலும், அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் ரெயன் டென் தஸ்சாத்தே 106 ரன்களை குவித்தார். இந்தத் தொடரில் 2 சதம் அடித்த ஒரே சிறிய அணி வீரர் ரெயன் டென் தஸ்சாத்தே மட்டுமே. இதேபோல, அயர்லாந்து வீரர் பால் ஸ்டிர்லிங் நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் 101 ரன்கள் குவித்ததோடு, 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றி அசத்தினார்.

சிறந்த பந்துவீச்சு: பந்துவீச்சை பொறுத்தவரை நெதர்லாந்து அணியில் இடம்பெற்றிருந்த பீட்டர் சீலர் இந்தியா வுக்கு எதிராக 3 விக்கெட்டுகளையும், இங்கிலாந்துக்கு எதிராக 3 விக்கெட்டுகளை யும் வீழ்த்தினார். கனடா வீரர் பாலாஜி ராவ் ஜிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். வங்கதேசம் அணி வீரர் ஷபிபுல் இஸ்லாம் அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் 8 ஓவர்களை மட்டுமே வீசி 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். கனடா வீரர் ஹென்றி ஒசின்டே கென்யாவுக்கு எதிரான போட்டியில் 10 ஓவர்கள் வீசி 26 ரன்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதேபோல, கனடா வீரர் பைத்வான் பங்கேற்ற 6 போட்டிகளிலும் சிறப்பாகப் பந்துவீசி 13 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

- உலகக் கோப்பை வரலாற்றில் தொடர்ச்சியாக 3 முறை 4 விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரரானார் பாகிஸ்தான் கேப்டன் அப்ரிதி.
- ஜிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கையின் தில்ஷான்-தரங்கா ஜோடி முதல் விக்கெட்டுக்கு 282 ரன்கள் குவித்து புதிய சாதனை படைத்தது. உலகக் கோப்பை வரலாற்றில் சதம் அடித்த இளம் வீரர் என்ற பெருமையைப் பெற்றார் அயர்லாந்தின் பால் ஸ்டிர்லிங் (20). 30 ஆட்டங்களில் டாஸ் வென்ற கேப்டன்கள் பேட்டிங்கையே தேர்வு செய்தனர். 12 ஆட்டங்களில் மட்டுமே பீல்டிங் தேர்வு செய்யப்பட்டது. 22 ஆட்டங்களில் முதலில் பேட் செய்த அணியும், 18 ஆட்டங்களில் இரண்டாவது பேட் செய்த அணியும் வாகை சூடியுள்ளன.



பலமில்லாத அணிகள் எனக் கருதப்பட்ட 6 அணிகள் இந்தத் தொடரில் இருந்து வெளியேறினாலும், அந்த அணிகளில் சிறந்த வீரர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது. இந்த அணிகளால் சில விறுவிறுப்பான போட்டிகளையும் நம்மால் காண முடிந்தது. தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டால் அந்த அணிகள் அடுத்த உலகக் கோப்பை போட்டியில் நிச்சயம் இடம் பெற வாய்ப்பு உள்ளது.

## உலகக் கோப்பையில் இதுவரை...

- இந்த உலகக் கோப்பையில் இதுவரை 42 லீக் ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன.
- உலகக் கோப்பையில் 6 சதங்கள் அடித்த ஒரே வீரர் என்ற சாதனையை எட்டினார் இந்தியாவின் சச்சின்.
- உலகக் கோப்பையில் 2,000 ரன்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார் சச்சின்.
- அயர்லாந்து வீரர் கெவின் பீட்டர்சன் 50 பந்துகளில் சதமடித்து சாதனை படைத்தார். இதற்கு முன் ஆஸ்திரேலியாவின் ஹேடன் 66 பந்துகளில் சதமடித்ததே சாதனையாக இருந்தது.
- உலகக் கோப்பையில் அதிக ஆட்டங்களில் விளையாடியவர் என்ற பெருமையைப் பெற்றார் ஆஸ்திரேலிய கேப்டன் ரிக்கி பாண்டிங் (45).
- இந்த உலகக் கோப்பையில் கென்யாவுக்கு எதிராக ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தியதன் மூலம் உலகக் கோப்பை வரலாற்றில் இருமுறை ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தியவர் என்ற சாதனையை எட்டினார் இலங்கையின் லசித் மலிங்கா.
- இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டாவதாக பேட் செய்து 329 ரன்களை எட்டிப்பிடித்து வெற்றிபெற்றது அயர்லாந்து. இதுவே உலக் கோப்பை வரலாற்றில் ஒரு அணி சேஸ் செய்த அதிக ரன்கள் ஆகும்.
- பெங்களூரில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 676 ரன்கள் குவிக்கப்பட்டது. இந்த ஆட்டம் டையில் முடிந்தது. இதுவே உலகக் கோப்பை வரலாற்றில் குவிக்கப்பட்ட அதிகபட்ச ரன்களாகும்.

முதல் முறையாக உலக கிண்ண அரையிறுதி போட்டியில் மூன்று ஆசிய அணிகள் உலக கிண்ணப் போட்டியின் கடைசி காலிறுதி ஆட்டத்தில் இலங்கை, இங்கிலாந்து மோதின. முதலில் பேட் செய்த இங்கிலாந்து 6 விக்கெட் இழப்புக்கு 229 ரன் எடுத்தது. டுரோட் 86, மோர்க்கன் 50 ரன் எடுத்தனர். இலங்கை தரப்பில் முரளீதரன் 2 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து ஆடிய இலங்கை அணி அதிரடியில் மிரட்டியது. தில்'ான், தரங்கா ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சை வீழ்த்தியது. இதனால் விக்கெட் இழப்பின்றி 39.3 ஓவரில் 231 ரன் எடுத்து அபார வெற்றி பெற்று அரையிறுதியில் இலங்கை கால்பதித்தது. தில்ஷான் 115 பந்தில் 10 பவுண்டரி மற்றும் 2 சிக்சருடன் 108 ரன்னும், தரங்கா 122 பந்தில் 12 பவுண்டரி மற்றும் 1 சிக்சருடன் 102 ரன்னும் எடுத்து அவுட் ஆகாமல் இருந்தனர். ஆட்டநாயகன் விருதை தில்ஷான் தட்டிச் சென்றார். ஏற்கெனவே அரையிறுதிக்கு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன. தற்போது 4 வது அணியாக இலங்கை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. இவற்றில் நியூசிலாந்தை தவிர மற்ற 3 அணிகளும் ஆசிய நாடுகளை சேர்ந்தவையாகும். உலக கிண்ண வரலாற்றில் முதன் முறையாக ஆசிய நாடுகளை சேர்ந்த 3 நாடுகள் அரையிறுதிக்கு ஒரேசமயத்தில் தகுதி பெறுவது இதுவே முதன் முறை. இந்தியா 1983, பாகிஸ்தான் 1992, இலங்கை 1996 ஆகிய ஆண்டுகளில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளன.


## சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரன்ரோ

# 9th IF Tamil -2011

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும்.
அவையாவன:: $500- $300- $200

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு (May. 15, 2011) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

- Independent Art Film Society of Toronto

# தவறான அரேபியரும் தூய்மையான ஹொலிவூட்டும்

தூறல்

வானரன்

கடந்த வாரம் பி.பி.சி இணையத் தளத்தில் அமெரிக்காவில் உள்ள முஸ்லீம்கள் தங்களைப் பற்றிய பிம்பங்களை ஊடகங்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் வெளிப்படுத்துவதாக குற்றஞ்சாட்டியிருந்தனர். திரைக்கதையாசிரியர்களுக்கான பட்டறை ஒன்று லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் நடத்தப்பட்டது. இங்கு தான் ஊடகங்கள் மீதும் ஹொலிவூட் மீதும் இக்குற்றம் சுமத்தப்பட்டது. True Lies (1994) and Rules of Engagement (2000) போன்ற படங்கள் முஸ்லீம்களை பயங்கரவாதிகளாக வெளிப்படுத்தியுள்ளது. இது போன்ற படங்கள் பல ஹொலிவூட்டால் தயாரிக்கப்பட்டது என்பது உண்மையே. இக்கட்டுரையில் அவ்வாறான படங்களை அடையாளங்காட்ட முயற்சித்துள்ளேன். மேற்கத்திய நாடுகளுக்கும் முஸ்லீம் நாடுகளுக்குமான ஒரு பனிப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இது முக்கியம் என கருதுகின்றேன்.

***GYMKATA (1985)***

Director:Robert Clouse

இப்படத்தில் அரேபியர் அமெரிக்கரை வெறுப்பது போல் காட்டப்பட்டுள்ளது. "You are American" எனக் கேட்டு ஒரு கப்பில் தண்ணீரை எடுத்து அமெரிக்கரின் முகத்தை நோக்கி வீசுகின்றார். "Yankee, go home" எனக் கத்துவதாகவும் காட்டப்படுகின்றது.

***Delta Force 3: The Killing Game (1991)***

Director:Sam Firstenberg

இப்படத்தில் இஸ்ரேலிய நடிகர்கள் பாலஸ்தீனிய பயங்கரவாதிகளாக நடித்துள்ளார்கள். அப்பாவி பொது மக்களை இவர்கள் கொலை செய்வதாகவும் காட்டப்பட்டுள்ளது. ஒரு பெண் குண்டுகளை காவிக் கொண்டு செல்கின்றார். இத்தற்கொலைப் போராளி "அல்லாவு அக்பர்" என சத்தம் போட்டுக் கொண்டு குண்டை வெடிக்க வைக்கின்றார். திரையில் ''In the name of Allah" எனக் காட்டப்படுகின்றது. அதாவது கடவுளின் பெயரால் இவர்கள் இக் கொலைகளைச் செய்வதாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

***Delta Force One: The Lost Patrol (2000)***

Director:Joseph Zito

மத்திய கிழக்கு நாடுகள் எதிலும் அணு ஆயுதங்களோ தொழிற்சாலைகளோ இல்லை (இஸ்ரேல் விதிவிலக்கு). இப்படத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் அதற்கெதிராக



அமெரிக்கர்கள் போராடுவதாக காட்டப்படுகின்றது.

***Bengazi (1955)***

இது லிபியாவின் மிக முக்கிய நகரம். தற்பொழுது மிகப் பிரபலமாக அடிபடும் பெயர். அரேபியர்களை கிராமத்தவர் களாகவும் நாகரிகமற்றவர்களாகவும் காட்டப்பட்டுள்ளது. ஒரு மேற்கத்திய பெண்ணைக் கண்டவுடன் அப்பெண்ணை சுற்றி வளைத்து அப்பெண்ணிடம் உள்ள பொருட்களை பறிப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது.

***The November Men (1993)***

Director:Paul Williams

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஸை இரு அரேபிய அமெரிக்கர்கள் கொலை செய்ய முயற்சிக்கின்றனர். திடீரென வியட்நாம் போரில் கடமையாற்றிய ஒரு போர் வீரர் (Viet Vet என அழைப்பார்கள்) இவர்களைக் கொல்வதாக பதிவு செய்துள்ளார்கள். வியட்நாம் போரில் அமெரிக்கர்கள் தோல்வியுற்றதை உலகம் அறியும். இன்றும் அத் தோல்வியை ஊடகங்கள் வெற்றியாக மாற்ற முயற்சித்து வருகின்றார்கள். காணமால் போய் விட்ட வியட்நாம் வீரர்கள் திடீரென வந்து காப்பாற்றுகின்றார். ஒரு வகை ஹிரோயிசத்தை வியட்நாம் வீரர்கள் மீது அமெரிக்கா ஏற்படுத்துகின்றது. அதே சமயம் அரேபியர்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாக காட்டுகின்றார்கள்.

***Air Force One (1997)***

Director:Wolfgang Petersen

அமெரிக்க அதிபர் போர்ட் ஐ Kazakhstan. கம்யூனிஸ்ட் தலைவரின் ஆதரவாளர்கள் கடத்துகின்றனர். படத்தில் பல இடங்களில் இக் கடத்தலை மையமாக வைத்து அரேபியர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

***office space (1999)***

Director:Mike Judge

ஒரு அமெரிக்க கணினி பொறியியலாளர் தனது சகாவை நிறுவன கணினிகளை திருடுவதற்கு ஊக்கப்படுத்தும் பொழுது பின்வருமாறு கூறுகின்றார் "This is America ....this isn't Riyadh. You know, they are not going to saw your hands off here". சவூதியில் கைகளை வாளால் வெட்டுவது இல்லை. பதிலாக வைத்தியர் மூலமே அகற்றப்படுகின்றது. அதுவும் மூன்று தரங்கள் அதே குற்றத்தை செய்திருந்தால், இரண்டு நேரடி சாட்சிகள் சாட்சியமளித்திருந்தால், ஒரு குறிப்பிட்ட பெறுமதிக்கு மேல் களவு நடைபெற்றால் மட்டுமே இத் தண்டனை. உலகில் பல நாடுகளில் மரண தண்டனை நீக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இப்பொழுதும் மரண தண்டனை உள்ளது.

***The Ten Commandments***

இப்படம் 1923லும் பின்னர் 1956லும் படமாக வெளிவந்துள்ளது. இப்படத்தில் இஸ்ரேலியர் களை எகிப்தியர்கள் "நாய்கள்" என கூப்பிடுவதாக காட்டப்பட்டுள்ளது. படத்தில் ஒரு இடத்தில் பின்வரும் வசனம் இடம் பெறுகின்றது Fear not this God of Israel – follow and destroy them. எகிப்திய அரசன் இஸ்ரேலியருக்கு பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைத்தும் கொல்லப்பட வேண்டும் என உத்தரவிட்டதாக காட்டப்பட்டுள்ளது.

***COMPANY BUSINESS (1991)***

Director:Nicholas Meyer

இப்படத்தில் பேர்லினில் உள்ள ஒரு அரேபிய ஆயுத விற்பனையாளர் மிகப் பெரிய பணக்காரராகவும் காட்டியுள்ளனர். படத்தில் இவரைப் பற்றிய அறிமுகம் பார்வையாளர்களிடம் அரேபியர்களுக்கு எதிராக ஒரு மறைமுக எதிர்ப்பை உருவாக்கும். "so rich he could ski uphill" "He got toilet seats that are 14 karat gold, more beautiful women than you've ever seen outside of Las Vegas."

***Broadcast News (1987)***

Director:James L. Brooks

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!

Clean, family building, FREE parking.

Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# நாகரிகங்களின்... முத்துக்கு...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் சிலர் மானது சமூக, அரசியல், பண்பாட்டுக் கருத்துருவாக்கங்களைத் தீவிர நிலையில் வழிநிலைப்படுத்த முயல்வதால் ஆயுதம் தாங்கிய இராணுவ வாதமாகவும் அது மாறி



விடுகிறது. சிறிலங்காவை எடுத்துக் கொண்டால் சிங்கள நாகரிகமானது தனது பண்பாட்டின் தனித்துவத்தையும், சிறப்பான அம்சங்களையும் வலுப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு அதனைத் தமிழ் நாகரிகத்தின் மீது திணித்து விட முயற்ச்சிப்பதாக கருதிக் கொள்ள முடியுமா? அல்லது தனது நாகரிகத்தின் இருப்புக் குறித்த அச்சம் காரணமாக தமிழ் நாகரிகத்தின் மீது மேலாதிக்கத்தை ஏற்படுத்தித் தமிழ் நாகரிகத்தைக் கட்டுக்குள் கொண்டுவர விழைந்ததன் விளை பொருள்தானா இன்று நிகழும் கோர யுத்தம்?

மறு புறத்தில் அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே அதிகார சக்திகள் இனங்களுக்கிடையிலான முரண்களைக் கிளறி விடுவதாகக் கூறிடும் வாதங்கள் மேற் குறிப்பிட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அர்த்தம் இழந்து போவதையும் நோக்க முடியும்.

நாகரிகங்களுக்கிடையில் ஏற்படும் முரண்நிலைப் போக்கே எதிர்கால உலக அரசியலையும், மானுடத்தின் வரலாற்றையும் தீர்மானிக்கும் என்ற 'சாமுவேல் ஹண்டிங்ரன்' நிலைப்பாடு உலகமயமாதலில் மேற்குலக கிறீஸ்தவ நாகரிகம் தனது பண்பாட்டு விழுமியங்களை சர்வதேசியப்படுத்தும் வேளைகளில் ஓரளவு பலம் வாய்ந்த நிலையில் காணப்படும் சீன, இஸ்லாமிய நாகரிகங்களோடு மோதுகின்ற களங்களை உருவாக்கி வந்த போதும் இன்றைய உலகின் போர்க்களங்களை நிர்மாணிப்பது இன நெருக்கடிகளால் விழைந்த இன மோதல்களே என்கிறது.

பிளவுபட்டு நிற்கும் பண்பாட்டு உலகங்கள் மத்தியில் ஒத்திசைவு ஏற்படாதென்றும், இந் நாகரிகங்கள் தங்களை உச்சநிலை வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல மாட்டாதவை-யென்றும் கூறும் 'ஹண்டிங்ரன்' இவற்றினால் பேரழிவுகளே விழையும் என்றும் எதிர்வு கூறுகிறார். இவ்வாறு நாகரிகக் கோட்பாட்டின் அடிப்படையில் உலக உறவுகளை ஆராய முற்படும் ஹண்டிங்ரனை நோக்கிச் சில கேள்விகளை யும் பாலசிங்கம் அவர்கள் எழுப்புகிறார்.

ஈராக் மீதான அமெரிக்கப் போரை கிறீஸ்தவ-இஸ்லாமிய நாகரிக மோதலாக மட்டுமே எடை போட முடியுமா? மேற்குலக கிறீஸ்தவ நாகரிகத்தைச் சேர்ந்த நாடுகள் மத்தியிலே எழும் முரண்பாடுகளை எவ்வாறு புரிந்து கொள்வது?
இஸ்லாமிய நாகரிகத்தைச் சார்ந்த நாடுகள் ஒரே பண்பாட்டு உலகமாக ஒன்றுபட்டு நிற்காது பிளவுபட்டு முரண்படுவதேன்? சீன தேசத்தை மேற்குலக கிறீஸ்தவ நாகரிகத்திற்கு விரோதமான சக்தியாக கருத முடியுமா? போன்றவை அவர் எழுப்பிய கேள்விகளுள் முக்கியமானவை. அதைத் தொடர்ந்து 'மனிதர்களின் சமூக வாழ்வில் பண்பாடு முக்கியமானதே. பண்பாடானது சமூகங்களின் ஆன்மாவாக, சமூக உறவுகளுக்கு ஆதாரமாக, சமூக ஒழுங்குகிற்கு அத்திவாரமாகத் திகழ்கிறது. எனினும் மனித அபிலாசைகளின் பரிமாணம் அகன்றது. அவற்றைப் பண்பாட்டு உலகுக்குள் முடக்கி விட முடியாது' என்ற கருத்தையும் பாலசிங்கம் அவர்கள் முன்வைக்கிறார்.

சுதந்திரமும், வாழ்நிலை முன்னேற்றமுமே மனித சமூகங்கள் யாவற்றினதும் பொதுவான விருப்பாய், வரலாற்றின் அசைவியக்கமாய் அமைந்து நிற்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. அதேவேளை சமுதாயங்கள் பண்பாட்டு உலகங்களினுள் சிறையுண்டிருப் பதையும் நிராகரித்துவிட முடியாது.



நடராஜா முரளிதரன்

21ஆம் பக்கத்தொடர்ச்சி

இளவரசு, சரண்யா கொடுத்தது விஷம் என்று தெரிந்த பின்பும், "ஆத்தா... கறிக்கொழம்பு இன்னைக்கு அம்புட்டு ருசியாருக்கே..." என்று பெருமையோடு விழுங்குகிற காட்சியில் தேம்பி அழ வைக்கிறார். தனது உருவத்தால், இயல்பான அடங்கிய குரலால், தளர்ந்த நடையால், லேசாய்ச் சிரிக்கும் இதழ்களால் பாத்திரமாகவே வாழ்கிறார். சரண்யாவும் இளவரசுக்கு சரியாக ஈடுகொடுக்கிறார்.

'சூரியன் எப்.எம். 'சின்னத்தம்பி பெரியதம்பி' புகழ் கவி பெரியதம்பி இசை. இரண்டு பாடல்கள் கேட்கும்படியாய் இருக்கின்றன.



முதல் படம் என்பதால் விமர்சிக்காமல், அடுத்த படத்தில் நன்றாக செய்ய வாழ்த்துகள் சொல்லுவோம்.

எழுதி, இயக்கியிருப்பவர் ராசு மதுரவன். பல காட்சிகள் பல படங்களில் பார்த்துப் பழகிய கிளிஷேகள். இளவரசும் சரண்யாவும்தான் தங்கள் இயல்பான நடிப்பால் இக்காட்சி களைக் காப்பாற்றுகிறார்கள். சில காட்சிக-ளில் வசனங்களும் துணை செய்கின்றன. குறிப்பாக, மூத்த மகனாக நடித்திருக்கும் நட்ராஜ், தன் மனைவியிடம் கையாலாகாமல் நிற்கும் காட்சியிலும், அவளுடன் சண்டை போடும் காட்சியிலும் பேசும் வசனங்கள் அருமை. "அடுத்த ஜென்மத்திலேயாவது நீ ஆம்பளையா பொறக்கணும்டி... அப்பத்தான் ஒரு ஆம்பளையோட வலி தெரியும்" என்கிற வசனத்துக்கு அரங்கம் கைத்தட்டலால் அதிருகிறது. ஆண்களில் பெரும்பாலானோர், மனைவிக்கும் பெற்றோருக்குமிடையே அல்லாடுவது நிதர்சன வெளிச்சம். அதை நட்ராஜ் பாத்திரம் சரியாக காண்பிக்கிறது. கடைசிக் காட்சியில் இளவரசு, சரண்யாவிடம் "இத்தனை வருஷம் என் கூட வாழ்ந்ததில கொஞ்சமாவது சந்தோஷமாய் வைத்திருந் தேனா?" என்று கேட்பது உருக்கம்.

ஆண் பிள்ளைகள் மீதான மோகமும், பெண் கருக்கலைப்பும் சிசுக் கொலைகளும் மிகுந்த உசிலம்பட்டியை சேர்ந்த ஒருவர் ஆண் மக்களை பெற்றால் சகல நன்மைகளும் கிட்டும் என்ற மாயையை உடைத்திருப்பது கவனத்திற்குரியது.

பொதுவாக கிராமத்து மனிதர்களைத்தான் வெள்ளந்தியானவர்கள், கள்ளங்கபடமில்லாத மனசுக்குச் சொந்தக்காரர்கள் என்பார்கள். ஆனால், நடைமுறை நிஜம் வேறு. கள்ளங்கள் இல்லாத உள்ளங்கள் ரொம்ப அரிதுதான்... அது கிராமமாக இருந்தாலும் நகரமாக இருந்தாலும் சரி, என்கிறது இப்படம்.


முத்துக்கு முத்தாக - இறந்த பிறகு பெற்றோரின் படத்தை வைத்து அதற்கு மாலைபோட்டு, சாப்பாடு போட்டு, தெய்வமாக வணங்குவதைவிட, அவர்கள் இருக்கும்போதே அவர்களை பொக்கிஷமாக நினைத்து நல்லபடியாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தும் படம். பார்க்கலாம்.

## குவான்ரம்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

அக்கடத்தியினைச் சுற்றிக் காந்தப் புலம் தோன்றுவதை பரடே காட்டினார். அதேபோலவே, காந்தப் புலம் ஒன்று அசையும் போது, அப்புலத்தினுள் உள்ள கடத்தியில் மின்னோட்டம் தோன்றும் என்பதனையும் அவர் கண்டுபிடித்தார்.

பரடே அதிசயமான விஞ்ஞானி. புதிய விஞ்ஞானத்தைக் காட்டியவர் இவர்தான் என்றால் அதில் தவறில்லை. அவரது காலத்தில் நோபல் பரிசு கொடுக்கும் வழக்கம் இல்லை. இருந்திருந்தால் குறைந்தது 2 நோபல் பரிசுகளாவது பெற்றிருப்பார் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஒருவேளை இது கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனம் எனக் கருதலாம். ஆனாலும் உண்மையிலேயே 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இவரது ஆக்கமான வேலைகள்தான் பெருதும் காலாக இருந்தன என்பது மறுப்பிற்கில்லை. இன்று நாம் பாவிக்கும் விஞ்ஞானச் சாதனங்களுக்கு அடிப்படையான காரணமாக இருந்தவர் பரடே என்று கூறுகின்றார்கள். குவான்ரம் பிறந்த கதையில் ஒரு மாற்றத்திற்கு வித்திட்டவரும் இவர்தான். அடுத்த தடவையில் இவரது தொடர்ச்சியினை போன்றமைந்த மாக்ஸ்வெலின் ஆய்வுகள் பற்றிப் பார்ப்போம்.

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 07


பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும் பெரும் வளர்ச்சிகள் பௌதீகத்தின் சகல பகுதிகளிலும் ஏற்பட்டன. யங் ஒளிச் செலுத்துகையில் கவனமாக இருந்த மாதிரி, அக்காலத்தில் மின், காந்தம், பொருட்கள் எவற்றினால் ஆனவை என்பவையும் ஆய்வுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தன. வெவ்வேறு பகுதிகளாக இருந்த மின்னியலும், காந்தவியலும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கின தொடர்புடையவை என்பது, இறுதியில் இவையிரண்டும் சேர்ந்து ஒரு பகுதியில் வந்ததும் இக்காலப் பகுதியில்தான். பலர் இப்பகுதியில் ஈடுபாட்டுடன் முனைப்பாகச் செயற்பட்டிருந்தர்லும் குவாண்ரம் பிறந்த கதைக்காக எனது கண்களில் பட்டவர்கள் இருவர். ஒருவர் மைக்கல் பரடே, மற்றவர் மாக்ஸ்வெல். எங்களுக்குத் தேவையான பங்களிப்பபுகளை மட்டும் பார்ப்போம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 86**

## பரடேயின் ஆய்வும் மாக்ஸ்வெலின் சமன்பாடுகளும்

### மைக்கல் பரடே



காந்தத்தின் ஆச்சரியமான, இயல்புகளுக்கான விளக்கம் அந்நேரத்தில் சரிவரப் புலப்படாதிருந்தது. அதுபோலவே மின்னேற்றங்களும் ஏன் அவ்விதம் நடக்கின்றன என்பதும் புரியாத புதிராகவே இருந்தது. அந்நேரத்தில் மைக்கல் பரடே என்பவர் காந்தங்களின் பிரத்தியேகமான இயல்புகளுக்குக் காரணத்தினை அறிந்து கொண்டார். இதற்காக மனம் சலிக்காது ஆயிரக்கணக்கிலே (பதினையாயிரம் என்கிறார்கள்) ஆய்வுகள் செய்தார் என்கிறார்கள். காந்தங்கள் எல்லாம் தங்களைச் சுற்றியுள்ள வெளியை தம்மியல்புக்கும், வலிமைக்கும் ஏற்றதாக ஒழுங்குபடுத்துகின்றன என்பதனைக் கண்டுபிடித்தார். இதனைக் காந்தப்புலம் எனக் கூறினார்.

சிறுவயதிலோ அல்லது பாடசாலையின் ஆய்வு கூடங்களிலோ நாங்கள் செய்த அல்லது செய்கிற ஒரு சிறிய பரிசோதனையை நினைவுபடுத்த விரும்புகிறேன். தாளொன்றில் வைக்கப்பட்ட சிறிய காந்தத் துண்டினைச் சுற்றி இரும்புத் துருவல்களைக் கொட்டி, பின்னர் மெதுமெதுவாகத் தாளினை தட்டிக் கொண்டிருக்க, இரும்புத் துகள்கள் கோடுகள் போல ஒழுங்காக வருவதைக் கண்டிருப்பீர்கள் காந்தப் புலத்தின் செல்வாக்கினால்தான் இரும்புத் துகள்கள் எல்லாம் அப்படி ஒழுங்காகின. இரும்புத் துகள்களின் ஒழுங்கினை காந்தவிசைக் கோடுகள் என்கிறோம். இந்தக் காந்தவிசைக் கோடுகளை இன்று காந்தவூசியினைக் கொண்டு நாம் அறிந்து கொள்கிறோம்.

பரடேயின் இந்தன் கண்டுபிடிப்பானது பௌதீக உலகினில் பெரிய பெரிய மாற்றங்களுக்கு அடிகோலியது. என்ன, இந்தச் சிறிய பரிசோதனை முடிவா? என உங்களில் சிலர் கேட்கலாம். ஆம், அக்காலத்தில் இது மாபெரும் கண்டுபிடிப்புத்தான். இதன் பின்னர்தான் மின் ஏற்றங்களைச் சுற்றி மின்புலங்கள் இருப்பதை அறியக் கூடியதாக இருந்தது. இன்னமும் அயன்ஸ்ரைனுக்கு ஈர்ப்புப் புலம் எனும் எண்ணக்கருத்தினைக் கொடுத்ததும் இந்தக் காந்தப் புலம்தான். ஈர்ப்புப் புலச் சிந்தனை-தான் அயன்ஸ்ரைன் ஈர்ப்பிற்கான புதிய விளக்கத்தினைக் கொடுக்க உதவியது. அதாவது பொதுச் சார்புக் கொள்கையை மெருகேற்றியது.

காந்தங்கள், மின்னேற்றங்கள் என்பவற்றினைச் சுற்றி புலங்கள் உள்ளன என்பதைக் கண்டு பிடித்த பரடே இன்னொரு மகத்தான முடிவினையும் பௌதீக உலகிற்குக் கொடுத்தார். இந்தக் காந்தமும், மின்னேற்றங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதனையும் பரடே காட்டினார். குடத்தி ஒன்றின் ஊடான மின்னோட்டத்தின் வீதம் மாறும் போது,



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months

citi COLLEGE OF CANADIAN CAREERS

Get the skills you need to get the job

IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist

Health Care:
Medical Office Assistant
Personal Support Worker

Business:
Business Administration
Computerized Accounting

CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program

You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 647-476-4148

Call Today:
(647) 476-4148
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005



Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify


அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
CURRY (CHILLI) POWDER
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru
BRAND
®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru Niru
நிரு
பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# இறைவனின் கட்டளைகள்

வாழ்வில் நான் கட்டாயம் என்ன செய்ய வேண்டும் என்பது இப்போ எனக்கு நன்கு புரிந்தபடியால் கவலையின்றி நிம்மதியுடன் ஜீவிக்கிறேன்.

ஆண்டவன் தரும் வாக்குறுதிகளுடன் சில கட்டளைகளையும் எமக்குத் தருகிறார். வேதாகமத்தில் வரும் பத்து கட்டளைகளையோ, வேறு மதங்களில் வரும் கட்டளை களையோ இங்கு குறிப்பிடவில்லை. நாம் செவிமடுக்க விரும்பாத வேளைகளிலும் கூட பரந்தாமன் எம் இதயத்திற்குக் கேட்கும் வண்ணம் கிசுகிசுக்கும் அன்புக் கட்டளைகளையே இங்கு குறிப்பிடுகின்றேன். எமது நன்மைக்காக நாம் ஒப்பேற்ற வேண்டிய எமக்கு ஆத்மார்த்தமாக நன்கு தெரிந்த விடயங்களைப் பற்றித்தான் இங்கு இப்போ பேசுகின்றேன். இந்தத் தெய்வீகக் கட்டளைகள் எமக்கு ஒரு குறிக்கோளை உருவாக்கி எம்மை ஊக்குவித்து வழிநடத்துகின்றன. எவை எமக்குச் சிறப்பானவையோ அவற்றையே செய்யும் படி இக்கட்டளைகள் எம்மைப் பணிக்கின்றன. இவற்றை நிறைவேற்றா மல் இருக்க காரணங்களை முன்வைத்து நாம் வாளாவிருந்த போதும் எமக்குப் பிரச்சனை வந்தவுடன் எமது இதயத்தில்



இக்கட்டளைகள் எதிரொலிக்கின்றன. பிறர் எம்மைப் புகழ்ந்து பாராட்டாவிட்டாலும் எம்மை நாமே தட்டிக்கொடுத்துப் பெருமிதமடைய வைக்கும் செயல்களை இந்தக் கட்டளைகள் எம்மைப் புரிய வைக்கின்றன.

எமது இதயபூர்வமாக மாதவன் கட்டளை களைப் புரிந்து எமக்கு அவற்றைச் செய்ய எல்லா நேரங்களிலும் விருப்பம் இல்லாவிட்டாலும் செய்வது இறைவனுக்குத் தெரிந்து அவரது அருளையும் ஆசீர்வாதத்தையும் எம்மால் ஈர்க்கின்றது. 'நன்மை செய்வதற்கு எப்போதும் தயங்காதே!' இறைவனின் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாம் தொண்டாற்றும்போது செய்பவற்றால் தான், நாம் இறைவனிலும் எம்மிலும் வாழ்விலும் பூரண விசுவாசத்துடன் நம்பிக்கை வைக்கலாம். ஒருவராவது நீ செய்வதைப் பார்த்து உன்னைப் பாராட்டாவிட்டாலும் நீ செய்யும் நன்மைகளை தொடர்ந்தும் ஏன் செய்கிறாய் என்பது இன்றுவரை உனக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். உன் இதயத்தில் எதிரொலிக்கும் உன்னைப் படைத்தவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே நன்மை புரிகிறாய் என்பதை இன்று உணர்ந்து புரிந்துகொள்.

**இன்று முதல் என் சூழலில் உள்ளவர்களுக்கும் எனக்கும் நன்மை செய்வதில் நான் முழுமூச்சுடன் ஈடுபடப்போகிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 187

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



**லலிதா புரூடி**

## அறிந்திருக்க...

• மார்ச் 11, 2011 அன்று ஜப்பானின் சரித்திரத்திலேயே பெரிய பூகம்பம் ஏற்பட்டு அதனால் சுனாமியும் ஏற்பட்டு, 10,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். தமது வீடு, மனை, வியாபாரநிலையங்கள், சொத்து சுகங்கள் யாவற்றையும் இழந்து மக்கள் தெருவிற்கு வந்தபோதிலும், இதுவரை எதுவித களவு, கொள்ளைகள் நடைபெறவில்லை என்பது ஆச்சரியப்படக்கூடிய விடயம் மட்டுமல்ல. உலகின் பல நாட்டு மக்கள் இவர்களைப் பார்த்து கற்க நிறைய உள்ளது.


HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"


Eglinton/Central Pky



$554,900

Stunning 4 Br Detached HomeSitting On A Private 60 Foot Corner Lot. Approximately 2600 Square Feet, Newer Roof(2009), Newer Windows(2009), Freshly Painted. Close To Square One, Hwys 401 & 403, Close To Schools, Park, Public Transportation.

Bayview & Mulock



$399,900

'Upper Stonehaven', This Summerset Model Boasts Soaring 9 Ft Ceilings On Main Flr Of This Semi-Bungalow Condo. Large Windows, W/O To Deck, Situated On A Corner Lot.




MORE LISTING @WWW.SIVAHOME.COM

1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969
*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# அழகிய...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

குழந்தை பாக்கியம் ஆகியவற்றுக்கும் இக்கோயில் பிரசித்தமானது. கடற்கரை மண்ணை 11 அல்லது 41 ஓலைப் பெட்டியில் சுமந்து போட்டு வழிபடுதல் இங்கு விசேசமான வழிபாடாக உள்ளது.

கவிஞர் வலம்புரிஜானின் சொந்த ஊர் உவரிதான். 'ஒரு ஊரின் கதை' என்று தன் ஊர் பற்றி அவர் ஒரு புத்தகமே எழுதியுள்ளார். சமகால படைப்பாளிகளில் 'ஆழிசூல் உலகு' நாவல் எழுதிய ஜோ.டி.குருஸ் இந்த ஊரைச் சேர்ந்தவர்தான்.



**- வழிப்போக்கன் -**

விசாகம், தைபூசம், பங்குனி உத்திரம், ஆடி அமாவாசை, தை அமாவசை, திருவாதிரை திருநாள், கார்த்திகை தீபம் ஆகிய தினங்களில் இங்கு மிக விசேஷமாக இருக்கும். இதில் வைகாசி விசாகம் மூன்று நாள்கள் நடைபெறும். இலட்சக்கணக்கானவர்கள் கூடுவார்கள். இந்தத் தினங்கள் தவிர ஒவ்வொரு தமிழ்மாத கடைசி வெள்ளிக்கிழமைகளிலும் இக்கோயிலில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடுவர். பௌர்ணமி, கார்த்திகை, விநாயகர் சதுர்த்தி, தமிழ் மாதப் பிறப்பு, தைப்பூசம் பிரதோசம், தீபாவளி, பொங்கல் ஆகிய நாட்களிலும் கோயிலில் விசேச பூஜைகளும் அபிசேக ஆராதனைகளும் நடக்கும். அப்போதும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

இந்த நாவலுக்காக ஊருக்குள்ளேயே வரக்கூடாது என்று அவருக்கு தடை போட்டிருக்கிறார்கள். அது தனிக்கதை.

உவரிக்கு ஒருமுறை சென்றவர்கள் மிகுந்த மனநிம்மதியோடு திரும்பி வருவார்கள் என்கிறார்கள். நீங்களும் ஒருமுறை சென்று வாருங்கள்.

எப்படிச் செல்வது, எங்கு தங்குவது?

நாகர்கோயில் அல்லது திருச்செந்தூர் சென்று அங்கிருந்து உவரி செல்லலாம். அடிக்கடி பேருந்து இயக்கப்படுகிறது. காலை 6 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் சுயம்புநாதர் கோயில் நடை திறந்திருக்கும்.

# United Tamil Sports Club
# தமிழ் சிறுமிகளின் சாதனை

மார்ச் மாதம் 19ம் திகதி York University உள்ளரங்கத்தில் இடம்பெற்ற "March Break Track and field Meet" போட்டியில் தமிழர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த 8 வயதிற்குட்பட்ட பெண்கள் 4 x 200 மீற்றர் அஞ்சலோட்டப்போட்டியில் Ontario மாகாணத்திற்கான புதிய சாதனை ஒன்றை நிலை நிறுத்தியுள்ளனர். 1989ம் ஆண்டு Bullets Track and field Club இனால் 2:48.6 (2 நிமிடம் 48.6 செக்கன்களில்) ஓடி வைக்கப்பட்டு, 21 வருடங்கள் நிலைத்திருந்த சாதனையை எமது வீராங்கனைகள் 2 நிமிடம் 40 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தி எமது சமூகத்திற்கு பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள்.



### இந்த சாதனை நிகழ்வில் பங்கு கொண்டவர்கள்:

சிவச்சந்திரன் சங்கரி,
சுரேஸ்வரன் சாயிக்கா,
பியங்கா மைக்கல்,
இராஜகுலேந்திரன் டனிக்கா

இவர்களைப்போல் விளையாட்டுத் துறையில் சாதிக்க விரும்புகின்ற 5 வயதிற்கு மேற்பட்டவர்கள் எமது கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு : 416-458-5467 / www.unitedtsc.com

### சிறப்பு உதைபந்தாட்டப்பயிற்சிகள்

தமிழர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டப்பயிற்சிகள் நன்கு அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இம்முறை எமது கழகம் Scarborough Soccer League இல் விளையாடுவதற்கான வாய்ப்பை பெற்றுள்ளமையை மகிழ்ச்சியுடன் அறிவிக்கும் அதேவேளை, இதற்கான சிறப்பு பயிற்சிகளை அனுபவமும், திறமையும் வாய்ந்த பயிற்சியாளர்களினால் ஞாயிறு, செவ்வாய் கிழமைகளில் வழங்கி வருகின்றோம். இந்த குழுக்களில் பங்குகொள்ளக்கூடிய திறமையுள்ளவர்களுக்கு இலவசமாக வரும் மூன்று வாரங்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது. இந்தப்பயிற்சியில் கலந்து கொள்ளவிரும்பும் 7 வயதிற்கு மேற்பட்டவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம் : 416-838-3999 / www.unitedtamilsportsclub.com

**July 17ம் திகதி (July 17th, 2011) காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை United Tamil Sports Club நடத்தும் "International Tamils Track and Field Meet 2011" York university மைதானம்**

# தவறான அரேபியரும்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

லிபியா இத்தாலியில் உள்ள அமெரிக்க ஊடக தளத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்துகின்றது. அங்கிருந்த 500 பேர் இறந்துவிடுகின்றனர். லிபிய விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்துகின்றது. ஒரு புறம் லிபியாவின் செயல் காட்டுமிராண்டித்தனம் எனக் காட்டும் படம் மறு புறம் அமெரிக்காவின் வீரத்தையும் விமானத்தை சுட்டு வீழ்த்துவதன் மூலம் காட்டுகின்றது.

***Executive Decision (1996)***
Director:Stuart Baird

எட்டு பாலஸ்தீனிய முஸ்லீம்கள் போயிங் 747 விமானத்தை கடத்தி அதில் பயணம் செய்த 406 பேரை அடித்து கொலை செய்கின்றனர். இவர்களுள் ஒரு அமெரிக்க செனட்டரும் அடங்கும். கிழக்கு கரையை அண்டிய 40 மில்லியன் பொது மக்களை கொல்லத் திட்டம் தீட்டுவதாகவும் காட்டப்படுகின்றது. படத்தில் குர் ஆன் கொலைகளை ஆதரிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. படத்தில் வரும் வசனங்கள் முஸ்லீம் மக்களுக்கெதிரான இனவாதக் கருத்துக்களாக உள்ளன. It's the sword if Islam...."... "We are the true soldiers of Islam"..ஒவ்வொருவரையும்



கொல்ல முன் அல்லாவை கும்பிடுவதாக காட்டப்பட்டுள்ளது.

***The Lone Runner (1986)***

இப்படத்தில் ஒரு ஐரோப்பியர் சுகயீனமுற்றுள்ளார். அவரைப் பார்த்து ஒரு அரேபியர் மருந்தாக குறிப்பிடுவது இது I have an excellent extract of cactus and camel dung. (என்னிடம் கற்றாழையும் ஒட்டகத்தின் மலமும் உண்டு)

இவை சில படங்கள். சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட படங்களில் இருந்து உதாரணங்களை காட்டலாம். அரேபியரை ஹொலிவூட்டின் பல படங்கள் பின்வருமாறு விளித்துள்ளன. நாகரிகம் கருதி அச்சொற்கள் இடம் பெறவில்லை.

இதன் இரண்டாம் பகுதியில் படங்களின் காட்சிப் பிம்பங்கள் எதிரொலிக்கும் விடயங்கள் தெரிவிப்பன மற்றும் மதம், கலாச்சாரம் பற்றி பல தவறான கருத்துக்கள் எவ்வாறு பரப்பப்படுகின்றன என்று பார்க்கலாம். இன்று இது இவர்களுக்கு நடைபெறுகின்றது. ஆங்காங்கே சில ஆங்கிலப் படங்களில் விடுதலைப் புலிகள் என்ற பதம் கடத்தல் கொலை போன்றன வற்றுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம் கனடா கிளை நடத்திய மகுடம் 2011

கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடாக்கிளை நடத்திய 17 ஆவது ஆண்டு 'மகுடம்' பல்சுவை கலைநிகழ்வுகள் மார்ச் 26, 2011 ஆம் திகதி ஸ்காபரோவிலுள்ள Winston Churchill Collegiate இன் அரங்கில் நடைபெற்றது.

இவ்விழா கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆசிரியரான காலம்சென்ற C. பாலகிருஷ்ணன் அரங்கில் சரியாக 5.30 மணிக்கு பிரதமவிருந்தினர் விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழையமாணவரான கலாநிதி. அ. சிறிகிருஷ்ணராஜ் அவரது துணைவியார் வைத்திய கலாநிதி. குமுதினி சிறிகிருஷ்ணராஜ் சகிதம் சமூகமளித்திருந்தார்.

கலாநிதி அ. சிறிகிருஷ்ணராஜ் பேராதனைப் பல்கலைக்கழக விவசாயப்பட்டதாரியும் விலங்கியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானத்துறையின் பீடாதிபதியாக பணியாற்றியவர். இவரது துணைவியார் வைத்தியகலாநிதி. குமுதினி சிறிகிருஷ்ணராஜ் வைத்தியர். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் கனேடிய தேசியக் கொடியேற்றுதலும் கனேடிய தேசிய கீதம் இசைத்தலும் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரி யின் முன்னாள் அதிபரும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடாக் கிளையின் தலைவருமான திரு. இ. மகேந்திரன் அவர்கள் கல்லூரி கொடியேற்றுதலும் கல்லூரி பழைய மாணவர்கள் கல்லூரி கீதம் இசைத்தலும் இடம்பெற்றன. இவற்றை அடுத்து தமிழ்த்தாய் வாழ்த்தும் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு கலவரங்களால் உயிர்துறந்தவர்களுக்கு அகவணக்கமும் செலுத்தப்பட்டன. இவ்விழாவை திரு. சந்திரகுப்தன், செல்வி R. நிலாணி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.




இவற்றைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் செல்வி. ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளதும் செல்வி யாழினி இராஜகுலசிங்கம் வழங்கிய 'தாய்மண்ணே உனக்கு வணக்கம்' நடனத்துடனும் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மிருதங்க வித்துவான் ரதி ரூபனின் லய பிரிந்தம் நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் வாத்திய பிரிந்தம் நிகழ்வையும் சாயிஸ்வராலயா அதிபர் ஸ்ரீமதி பிரசாந்தி நிரஞ்சன் மெல்லிசை இராகங்களையும் வழங்கினர். இவ்விழாவிற்கு வருகை தந்த மார்க்கம் நகரசபையின் 7 ஆம் வட்டார கவுன்சிலரான திரு. லோகன் கணபதி அவர்கள் தனது சிற்றுரையில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்க கனடா கிளையினர் செய்துவரும் சமூகமுன்னேற்ற நிகழ்வுகளுக்கு தனது ஆதரவையும் நன்றியையும் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு 50,000 ரூபாவிற்கு மேற்பட்ட நிதியை கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வழங்கிய 21 பேரும் இவ்விழாவில் கௌரவிக்கப் பட்டார்கள். திரு. இ. மகேந்திரன் தனது தலைமை உரையில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அதன் பழைய மாணவர்கள் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டுகளை கூறி அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். 'மகுடம்' விழாவை நடத்தவும் 'மகுடம்' மலரை வெளியிடவும் உதவியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இவ்விழாவில் இவ்விரண்டையும் சிறப்பாக நடத்த உதவிய 'Gold Sponsor' ஆன 'Green Lands' நிறுவன உரிமையாளர் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் யோகராஜா தம்பதிகளும் 'Silver Sponsor' ஆன 'Optimart' நிறுவன உரிமையாளர் கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் குணரஞ்சன் தம்பதிகளும் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். விழாத்தலைவர் மற்றொரு 'Silver Sponsor'ஆன Spice Land உரிமையாளர் சுரேஸ் இற்கும் மற்றைய Bronze Sponsors மற்றும் விளம்பரதாரர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். பிரதமவிருந்தினர் உரையில், தனது பள்ளிக்கூடக்கால நினைவுகளையும் தனக்கு தலைமைத்துவ பண்புகளை போதித்த ஆசிரியப் பெருந்தகைகளையும் நினைவு கூர்ந்தார். இ. மகேந்திரன் அவர்கள் மகுடம் முதலாவது 'இதழை' பிரதமவிருந்தினருக்கு வழங்கினார். இவ்விழாவிற்காக பிரத்தியேக மாக கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர். திரு. அகிலதாஸ் அவர்கள் வழங்கிய செய்தி விழாவில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதில் அதிபர் கல்லூரிக்கு தொடர்ந்து உதவிகளை செய்துவரும் பழையமாணவர் சங்கத்திற்கு தனது நன்றியை தெரிவித்திருந்தார்.

இவ்விழாவிற்கு சிறப்பு அம்சமாக யாழ்ப்பாணத்திலுள்ள மற்றைய கல்லூரி களின் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இவ்விழாவின் கலை நிகழ்ச்சிகளாக தொடர்ந்து செல்வி. யாழினி இராஜகுலசிங்கத்தின் பாரதியார் பாடலுக்கான நடனமும் அபிநயாலயா நாட்டியாலய அதிபர் ஸ்ரீமதி ரஜனி செல்வபிரகாசத்தின் மாணவிகள் வழங்கிய பங்கரா நடனமும் திரையிசை நடனமும் நடைபெற்றன. நிலா நுண்கலைக்கல்லூரி அதிபர் ஸ்ரீமதி உஷா நாகேஸ்வரனின் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சியும் ரொறொன்ரோ கலாபவன அதிபரான கொக்குவில் இந்துக்கல்லூரி நடன ஆசிரியர் ஏரம்பு சுப்பையாவின் புதல்வி யுமான ஸ்ரீமதி குமுதினி ஸ்ரீகாந்தனின் மாணவிகள் வழங்கிய மழை நடனமும் நடைபெற்றன. UTSC ரொறொன்ரோ பல்கலைக்கழக மாணவர்களது திரையிசை நடனமும், சதங்கை நர்த்தனாலயா மாணவிகள் 20 பேர் வழங்கிய பஞ்சராக தில்லான நிகழ்வும் இடம்பெற்றன.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளை 2010ஆம் ஆண்டு நிகழ்த்திய கல்விசார் போட்டிகள் யாவற்றிலும் பங்குபற்றி முதலாவதாக வந்தவர்களுக்கு (ஆண், பெண்) தங்கப்பதக்கம் வழங்கப்பட்டன.

மகுடம் விழாவில் தனிமனித, சமூகமுன்னேற்றத்தை ஊக்குவிக்கு முகமாக இரண்டு நாடகங்கள் இடம்பெற்றன. அவை கனேடிய தமிழ் இளைஞர் முன்னேற்ற நிலையம் (CANTYD) வழங்கிய "மேடைக்கோணல்" என்ற நாடகமும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரனின் 'ஒரு சூடு' நாடகமும் ஆகும்.

விழாவில் இறுதி நிகழ்வாக 'அக்னி' இசைகுழுவினரின் இன்னிசை மழை நடைபெற்றது. இதில் 'TVI' தொலைக்காட்சியின் Super Star வெற்றியாளர்களான சாம்பவியும், மகிஷாவும் பங்குபற்றினர். இந்நிகழ்வுடன் மகுடம் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவுபெற்றன.






அருந்ததி ஞா.

LONG DISTANCE SERVICES

| | | |
|---|---|---|
| Sri Lanka | Mobile and Landline | ¢ 5.9 |
| India | Mobile and Landline | ¢ 1.5 |
| Europe | | ¢ 1.5 |
| Canada/USA | | ¢ 1.5 |

Limited time offer

No Additional Charges
No Expired
Crystal Quality
No Pin Number
LikeTone
More details call us
647-624-2476
www.liketone.com
Mobile place
880 Ellesmere Rd. Unit # 6B, Toronto, ON, M1P 2W6

# ஜப்பானிய அணு உலைகள் பாவனைக்கு உதவாது

ஜப்பானில் உள்ள Fukushima Daiichi அணுமின் உற்பத்தி நிலையத்தில் உள்ள அணு உலைகளில் நான்கு பாவனைக்கு உதவாமல் போய்விட்டன. இந்த அணுமின் உற்பத்தி நிலையத்தில் சுனாமியால் ஏற்பட்ட விபத்தை தொடர்ந்து அணு உலைகளை குளிர வைக்கும் சாதனங்கள் இயங்கவில்லை. இதனால் அணு உலைகளின் வெப்பம் அதிகமாகி அவற்றின் பாதுகாப்பு சுவர்கள் வெடித்து கதிரியக்க கழிவுகள் வெளியேறின. கதிரியக்க தொழிற்சாலைகளின் பாதுகாப்புச்சபையின் உதவி இயக்குனர் Hidehiko Nishiyama தெரிவிக்கையில் இந்த அணுமின் நிலையத்தை அண்மித்த கடல் நீரில் கதிரியக்கம் உள்ள அயடீனின் அளவு பாதுகாப்பு அளவை விட 3355 மடங்கு அதிகமாக காணப்படுகின்றன என்றார். இதைத் தொடர்ந்து ரோக்கியோ மின்சாரசபையின் தலைவர் Tsunehisa Katsumata தாங்கள் வேறு வழியில்லாமல் Fukushima Daiichi அணுமின் உற்பத்தி நிலையத்தை சேர்ந்த முதல் நான்கு அணு உலைகளை பாவனையில் இருந்து அகற்ற முடிவு எடுத்துள்ளதாக கூறினார். மற்றைய இரண்டு அணு உலைகள் பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்றார்.

அணு உலைகளை பாவனையில் இருந்து அகற்றுவது என்பது ஒரு இலகுவான காரியம் அல்ல. முதலில் இந்த நான்கு அணு உலைகளும் தொடர்ந்து குளிரூட்டப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டும். அவை பாதுகாப்பான நிலைக்கு குளிர்வடைந்த பிற்பாடு அவற்றில் உள்ள கதிரியக்க கழிவுகள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டு கதிரியக்க கழிவுகள் பாதுகாக்கும் இடத்தில் வைக்கப்படும். இதன் பின்னர் இந்த நான்கு அணு உலைகளும் இடித்து தரைமட்டமாக்கப்படும். இவ்வேலையை மேற்பார்வையிட பிரான்ஸ், கதிரியக்கம் சம்பந்தப்பட்ட இரண்டு தொழில்வல்லுனரை ஜப்பானிற்கு அனுப்புகின்றது. அத்துடன் அமெரிக்கா கதிர் இயக்க அளவுகளை அளப்பதற்காக சில எந்திரன்களை அனுப்ப உள்ளது.



இவ்வாறு இந்த நாலு அணு உலைகளையும் பாதுகாப்பாக இடித்து தரைமட்டமாக்க எவ்வளவு பணம் செலவாகும்? எவ்வளவு காலம் எடுக்கும்? என நினைக்கிறீர்கள். இந்த முழு வேலையையும் செய்து நாலு அணு உலைகளையும் தரை மட்டமாக்க 30 வருடங்களுக்கு மேல் எடுக்கும், $12 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் செலவாகும்.

இதுவரை கதிரியக்கத்தால் இந்த அணுமின் நிலையத்திற்கு அருகில் உள்ள மண்ணில் கதிரியக்கம் உள்ள புளுட்டோனியம் கசிந்துள்ளது. ஆனால் கடலில் கதிரியக்கம் உள்ள அயடீன் மட்டுமே கலந்துள்ளது. கதிரியக்கம் உள்ள அயடீனால் மனிதருக்கு அபாயம் ஏற்பட சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனெனில் அதன் அரை வாழ்வுக்காலம் எட்டு நாட்களே. இதனால் இவை விரைவில் கடல் நீரில் கலந்து மறைந்து விடும்.

மற்றைய கதிரியக்கம் உள்ள மூலகங்களால் சுற்றாடலில் உள்ள மண், அதில் உற்பத்தியாகும் மரங்களின் காய் கனிகள் பாதிக்கப்படும். இவற்றை விட குடிநீர், பசுப்பால் என்பனவற்றிலும் கதிரியக்கமுள்ள மூலகங்களினால் பாதிப்பு ஏற்படும்.

ஜப்பானிய அரசாங்கம்

இவ்வாறு கதிரியக்கம் உள்ள மூலகங்கள் அணு உலைகளில் இருந்து சுற்றாடலிற்கு பரவாமல் அணு உலைகளை ஒரு வகையான துணியால் மூடிக்கட்டிவிடலாம் (Special Cloth) என்றோ அல்லது ஒரு வகையான பிசினை தெளித்து (Spraying a Resin) மூடிவிடலாம் என்றோ ஆலோசித்து கொண்டு இருக்கின்றது.

இங்கு நாம் முக்கியமாக நோக்கவேண்டியது ஜப்பானில் ஏற்பட்ட இந்த கதிரியக்க விபத்து ரஷ்யாவில் உள்ள Chornobyl இல் நடைபெற்ற விபத்துடன் ஒப்பிட்டால் ஒரு மிகச்சிறிய விபத்தாகும். கதிரியக்க விபத்துக்களை அளப்பதற்கு 1 தொடக்கம் 7 வரை உள்ள இலக்கங்களை உபயோகிப்பார்கள். இதில் 1 மிகவும் சிறிய கதிரியக்க நிகழ்வு ஆகும். 7 மிகவும் பெரிய ஆபத்தான கதிரியக்க நிகழ்வாகும்.

1 இல் இருந்து ஒவ்வொரு இலக்கமும் 10 மடங்கு மோசமான நிகழ்வுகளால் அதிகரிக்கும். அதாவது 2 இலக்கம் 1 இலக்கத்தால் குறிக்கப்பட்ட கதிரியக்க நிகழ்விலும் விட 10 மடங்கு மோசமான நிகழ்வாகும். இதில் 1, 2, 3 ஆகிய கதிர் இயக்க விபத்துக்கள், ‘நிகழ்வுகள்’ (Incidents) என்றே கூறப்படும். அதாவது ஆபத்து குறைந்தவை. 4, 5, 6, 7 கதிரியக்க விபத்துக்கள் ‘விபத்துக்கள்’ (Accidents) என்று கூறப்படும். ஜப்பானில் நடைபெற்ற கதிரியக்க விபத்துக்கு 4 ஆவது இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. 1986இல் Chornobyl இல் நடைபெற்ற கதிரியக்க விபத்துக்கு 7 ஆவது இலக்கம் கொடுக்கப்பட்டது.

ஜப்பானில் ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தாலும், சுனாமியாலும் இதுவரை 11,259 பேர் இறந்துள்ளதாக உத்தியோக பூர்வமான தகவல்கள் கூறினாலும் இது 18 ஆயிரத்திற்கு மேல் இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. இதுவரை 16,344 பேரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய அரச மதிப்பீட்டின்படி இந்த இரண்டு நிகழ்வாலும் $130 பில்லியன் அமெரிக்க டொலர் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.











